www.tamilarangam.net

ஸரிநிகர்
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**இல்லையில்லை இங்கே இடம்!**

கொல்லுதற்கும் பின்னர் கொல்லவில்லை என்றடித்துச்
சொல்வதற்கும் உண்டிங்கு சுதந்திரங்கள்– உள்ளதனை
உள்ளபடி சொல்லுதற்கும் உண்மைகளை பேசுதற்கும்
இல்லையில்லை இங்கே இடம்!

—ஈழமோகம்

இதழ் 84 நவ.02 ~ நவ.15, 1995 விலை 7.00

# கொலன்னாவ!

## புகை மண்டலத்துள் மூழ்கிய உண்மைகள்!



யுத்தத்தை நிறுத்து! யுத்தத்தை நிறுத்து!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டத்திற்கு எதிரான புலிகளின் நடத்தை!



கடந்த 2 வாரங்களில் புலிகள் மொத்தம் ஐந்து எல்லைப்புற கிராமங்களைத் தாக்கியுள்ளனர். எல்லைப்புற கிராமங்களைத் தாக்குவதை அரசாங்கத்துடனான யுத்தத்தின் ஒரு பகுதியாகவே கொள்ள வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அண்மையில் சர்வதேச மன்னிப்புச் சபைக்கு எழுதிய கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்கள். கல்லராவ படுகொலைகள் தொடர்பான சர்வதேச மன்னிப்புச் சபையின் கண்டனத்துக்கு எழுதிய பதிலிலேயே விடுதலைப் புலிகளின் சர்வதேச செயலகம் இவ்வாறு குறிப்பிட்டுள்ளது. அக்கடிதத்தில் அவர்கள் இந்த சிங்கள குடியேற்றவாசிகளை அரசாங்கம் ஒரு பாதுகாப்பு கவசமாகவே பாவித்து வருகிறது. சில வேளைகளில் இவர்களை தமிழ் மக்கள் மீதான யுத்தத்தின் கருவியாகவும் பயன்படுத்தி வருகிறது. அரசாங்கம் இவர்களை ஆயுத பாணிகளாக்கியுள்ளது. இவர்களில் பலர் குற்றவாளிகளும் கூட. இவர்களைச் சூழவுள்ள தமிழ் கிராமங்களைத் தாக்கவும் அரசாங்கம் பாவித்து வருகிறது. இவர்கள் யுத்தத்திலீடுபடும் அரசாங்கத்தின் பகுதியே என்று குறிப்பிட்டுள்ளனர். எவ்வாறிருப்பினும் சர்வதேச மன்னிப்புச் சபை இந்த அபிப்பிராயத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. கடந்த இரு வாரங்களிலும் மொத்தமாக கொல்லப்பட்டவர்களின் தொகை 130க்கும் அதிகம் என செய்திகள் தெரிவிக்கின்றன. இவை மிகுந்த கண்டனத்துக்குரியவை மட்டுமல்ல தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தை பலவீனப்படுத்துபவையுமாகும் என்பதே சரிநிகரின் கருத்தாகும். கீழேயுள்ளது சண்டே ரைம்ஸில் வெளியான செய்திக் கட்டுரை.

முதலில் தாக்கப்பட்ட கிராமம் அம்பாறை மாவட்டத்திலுள்ள மங்கலகம ஆகும்

ஆர். பீ. கருணாவதி (வயது45) அத்தினத்தன்று இரவு சுமார் 12.40 மணியளவில் புலிகள் தாக்குவதாக அவரது அயலவர்களின் கூக்குரல் கேட்டு எழுந்தார்.

இருபது வயதான கே.எம். ஜயவர்தன என்ற ஊர்க்காவற் படையினர் கூறியதாவது: பதுங்கு குழியின் மூலையில் ஏனைய இருவருடன் கடமையிலீடுபட்டிருக்கையில் அவர்களுக்கு, தம்மைப்படுகொலை செய்வதாகச் சத்தம் போட்டது கேட்டது.

நாம் எமது வீடுகள் உள்ள திக்கை நோக்கிக் குளறியபடி சென்ற போது வாவிப் பக்கமிருந்து எம் மீது சூடு நிகழ்த்தப்பட்டது. புலிகள் சென்ற பின் புலிகளால் தாக்கப்பட்ட வீடுகளிற்குச் சென்றோம்.

"ஒரு வீட்டின் கதவருகில் ஒரு பெரிய இரத்த வெள்ளம் காணப்பட்டது.

நாம் உயிர் பிழைத்தோருக்கு எம்மை இனம் காட்டினோம். காலையில் அவர்களை வைத்திய சாலையில் சேர்த் தோம்" என அவர் கூறினார். புலிகளும் காயப்பட்டுள்ளதாக நம்புவதாகவும், தாம் அவ்வாறு காயப்பட்டவர்களை அவர்கள் (புலிகள்) தூக்கிச்செல்வதைத் தாம் கண்டதாகவும் ஊர்க்காவல் படையினர் கூறினர். அவர்கள் ஒலிப்பதிவுப் பெட்டியை (CASSETTE RECORDER) ஐ இடை வழியில் விட்டுச் சென்றுள்ளனர். (இது கிராமத்தவர்களிடமிருந்து அவர்களால் களவாடப்பட்டதாகும்.)

ஊர்க்காவல் படையினருக்கு மேலதிகமாக பயிற்சி வழங்கப்படவில்லையென அவர் கவலைப்பட்டார். அவ்வாறு வழங்கப்பட்டிருப்பின் அவர்களால் கிராமத்தைப் காப்பாற்றியிருக்க முடியுமெனக் கூறினார்.

வெலிகந்தையிலுள்ள போவத்த பகுதியிலுள்ள கிராமத்தவர்கள் தாக்கப்பட்ட போது நடந்தவற்றைப் பொலன்னறுவ ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் கதிரவேலு கணபதி (40) என்ற பெண் விபரித்தார்.

அன்றிரவு அதிகாலை 1.30மணியளவில் யாரோ எமது கதவில் இடித்தபடியே தூஷணவார்த்தைகளால் எம்மை வீட்டை விட்டு வெளியேறுமாறு கூறினார். அந்நேரத்தில் நான் எனது இரு பிள்ளைகளுடன் இருந்ததால் வெளியிலுள்ள குழியொன்றினுள்

அவர்களை அவசரமாக அழைத்துச் சென்றேன். அதன் பின்பு எல்லாத்திசைகளிலிருந்தும் துப்பாக்கிச் சூட்டுக் சத்தங்கள் கேட்டது" எனஅப்பெண் நிருபர்களிடம் கூறினார்.

இத்தாக்குதலில் 30பேர் கொல்லப்பட்டதுடன் 12 பேர் காயமடைந்தனர். ஒரு சில தமிழ்க்குடும்பங்கள் அப்பகுதியில் இருந்தாலும். சிங்களக் குடும்பங்களே தாக்குதலுக்குள்ளானது. தமிழ் பெண்ணான கணபதி. தனது பிள்ளைகள் மலசலகூட குழியினுள் இருக்கும் போது குடிக்கத் தண்ணீர் கேட்டு அழத் தொடங்கியதாகக் கூறினார். அவர் வீட்டிலிருந்து தண்ணீரைக்கொண்டு வர முயற்சிக்கையிலேயே அவரது காலில் துப்பாக்கிச் சூடு விழுந்தது.

தாம் வீட்டை விட்டு அருகிலுள்ள காட்டிற்குச் சென்றபோது ஏனைய பயங்கரவாதிகள் தனது மகனையும் பேத்தியையும் தன்னையும் சுட்டுக் காயப்படுத்தியதாக அதே வைத் தியசாலையில் தங்கியுள்ள இரு பிள்ளைகளின் தாயாரான 50வயதான பிரேமா கலுஆரச்சி கூறினார்.

அவர்கள் அடுத்த நாள் காலை வரை காட்டிலேயே தங்கியிருந்து விட்டு உதவி கிடைத்த போது வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஒக்டோபர் 22ந்திகதி இரவு மட்டக்களப்பு நகரிலிருந்து 20 கி. மீ. அப்பாலுள்ள கிராமத்தவர்கள் மீது மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டது.

இரு கிராமத்தவர்கள் கொல்லபபட்டதுடன் 12பேர் காயமடைந்ததாக இராணுவத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

சியம்பலாண்டுவவிலுள்ள குட்டியா கலவில் ஒக்டோபர் 22ஆந் திகதி 19 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டனர்.

மாலையில் புலிகள் 500பேரளவில் கிராமத்தைத் தாக்கி விட்டுக் காட்டிற்குள் தப்பியோட முன் நான்கு வீடுகளைத் தீக்கிரையாக்கியதுடன் சந்தையிலுள்ள பொருட்களைச் சூறையாடிச் சென்றனர்.

அனுராதபுர மாவட்டத்திலுள்ள கபித்தகொல்லாவையில் பாதுகாப்பற்ற பொதுமக்கள் 24பேர் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்பட்டனர். ஒக்ரோபர் 26ம்திகதி அதிகாலை இப்படுகொலை நடைபெற்றதுடன் மூன்று கிராமங்கள் ஒரேநேரத்தில் தாக்கப்பட்டன.

ஹல்மில்லாவவில் 16 கிராமத்தவர்கள் கொல்லப்பட்டதுடன் ஏழு பேர் தன்மன்னாவயிலும் ஒருவர் தல்கஸ்வவவிலும் கொல்லப்பட்டனர். புலிகள் 200 பேரளவில் இப்பாரிய படுகொலையில் பங்குபற்றினர். அநேகமானோர் தமது படுக்கையில் நித்திரையிலேயே வைத்துக் கொல்லப்பட்டனர். பின்பு பயங்கரவாதிகள் அவர்களது பொருட்களைச் சூறையாடினர்.

காடுகளுக்குச் சென்ற கிராமத்தவர்கள் தப்பியதாகப் பொலிஸார் கூறினர். இராணுவம் புலிகளைப் பிடிக்கச் சுற்றி வளைக்க முயறசித்தாலும் புலிகள் காட்டை விட்டுத் தப்பிச் சென்றனர். படுகாயமடைந்த ஐந்து ஆண்களும் இரு பெணகளும் அனுராதபுர ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் சிறு காயங்களுக்கு உள்ளானவர்கள் கப்பித்திகொல்லலாவ வைத்தியசாலையிலும் அனுமதிக்கப்பட்டனர்.

எல்லைக் கிராமங்கள் மிக விஷேடமாக பாதுகாப்பற்றது எனவும் பயங்கரவாதிகளின் இலக்காகலாமெனவும் குறிப்பிடுவதுடன் இப்பிராந்தியங்களுக்குப் பாதுகாப்பு வழங்குமாறு அரசாங்கத்திடம் உத்தியோகபூர்வ வட்டாரங்கள் கோரியுமுள்ளது.

ஒக்டோபர் 21ம் திகதி 30 பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டது போதியளவு பாதுகாப்பின்மையால் என விபரித்துப் பொலன்னறுவ பா.உ. ருக்மன் சேனாநாயக்க பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தைக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

தற்போது சிறு தொகை ஊர்க்காவற் படையினரும் பொலிஸாருமே இப்பகுதியைக் காவல் புரிகின்றனர் எனவும் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு எவ்வகையிலும் ஒப்பானவர்களல்ல. எனவே பாதுகாப்பு வழங்குவது அரசின் கடமை என அவர் கூறினார். அவசர பாதுகாப்பு வழங்கப்படாவிட்டால் மன்னம்பிட்டிப் பாலமும் 19 எல்லைக்கிராமங்களும் பாரிய அழிவுக்குட்படும் என அவர் எச்சரித்தார்.

(த சண்டே ரைம்ஸ் 29101995)

# இவர்கள் கோவிலில் கொல்லப்பட்ட புலிகளாம்!

கடந்த செப்ரெம்பர் மாதம் 21ஆந்திகதி யாழ்ப்பாணக் குடாநாட்டின் வடமராட்சிப் பகுதியில் நாகர் கோயில் மகா வித்தியாலயத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலினால் 70க்கும் அதிகமான மாணவர்கள் கொல்லப்பட்டனர். இவர்களில் நாற்பத்திஒரு பேர் அடையாளம் காணப்பட்டதுடன் அவற்றுள் பெரும்பான்மையானோர் 8வயதிற்கும் 16வயதிற்கும் இடைப்பட்ட பாடசாலைப் பிள்ளைகள் எனத் தெரிய வருகிறது.

இவ்வாறான தாக்குதலொன்று நடத்தப்படவில்லையெனவும், தாக்குதல் காரணமாகப் பாடசாலைப் பிள்ளைகள் கொல்லப்படவில்லையெனவும் அரசாங்கம் தெரிவித்திருந்தது.

இதோ கொல்லப்பட்டோரில் 30 பிள்ளைகளது பெயர் விபரங்கள்

1. உஷாந்தினி தர்மலிங்கம் (13)
2. நாகலோசினி மார்க்கண்டு (10)
3. சகுந்தலா தாமோதரம் (12)
4. இராசகர்ணர் உமாகாந்தன் (17)
5. துஷாந்தினி பூர்ணராசா (14)
6. அமிர்தனா இரவீந்திரன் (10)
7. இரஜிதா பாலச்சந்திரன் (10)
8. சுந்தரலிங்கம் பழனிமலை (15)
9. கு.தர்ஷினி (13)
10. செல்வநிதி செல்வகுலசிங்கம் (17)
11. கிருஷ்ணகுமார் நவசீலன் (13)
12. கவிதா இராஜரத்தினம் (10)
13. நாகமுத்து செந்தில்வேல் (15)
14. அமலவிஜி அல்போன்ஸ் (14)
15. மகாலிங்கம் சண்முகவடிவேல் (16)
16. தர்ஷனி குலரத்தினம் (12)
17. த. மகிந்தா (10)
18. த. மேதினி (14)
19. நவமணி விதுரன் (14)
20. செல்வம் (16)
21. இராகவன் (16)
22. சடீரூவ் (13)
23. இரத்தினம் அந்தனிதாஸ் (08)
24. மரியவச்சி மனோகரதாஸ் (10)
25. ஷர்மிலா ஜோன் பொஸ்கோ (05)
26. துஷ்யந்தினி சின்னத்துரை (12)
27. விஜிதா ஈஸ்வரநாதன் (13)
28. ஈஸ்வரநாதன் திலீபன் (11)
29. ஈஸ்வரநாதன் விசீகரன் (07)
30. சகிதா ஈஸ்வரநாதன் (03)

யுக்திய - 19951022

# ஆயுதம் ஏந்துவோம்!

தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் விதத்தில் அரசியல் தீர்வொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தாவிடின், ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ள ஏனைய தமிழ் இயக்கங்களுடன் சேர்ந்து யுத்த களத்திற்குச் செல்ல நேரிடும் என ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈ.என்.டீ.எல்.எவ்.) ஜனாதிபதிக்கு கடிதமொன்றின் மூலம் தெரிவித்துள்ளது.

ஈ.என்.டீ. எல்.எவ். இயக்கத்தின் சார்பாக இங்கிலாந்துக் கிளைச்செயலாளர் வீ. இராமராஜனினால் ஜனாதிபதியிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் கீழ் வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 1976ஆம் ஆண்டு தமிழ் மக்கள் தனி நாடொன்றைப் பெறுவதற்காக ஆயுதமேந்திப் போராடினர். இதன் படி இன்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. எமது கட்சி உட்படத் தமிழ் இயக்கங்கள் சிலவும் ஜனநாயக வழிக்கு வரத்தீர்மானித்தன.

கடந்த சில தினங்களிற்கு முன் அரசு முன் வைத்துள்ள அரசியல் தீர்வுத்திட்டம் தமிழ் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் விதத்திலான தீர்வு அல்ல.

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்க அரசு வழங்கிய வாக்குறுதி இன்று நிராகரிக்கப்பட்டுத் தமிழ் மக்களுக்கு எதிராக மீண்டும் யுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளமை கவலைக்கிடமான விடயமாகும்.

இவ்வாறான நேரத்தில் யுத்தத்தை மேலும் விரிவுபடுத்தி, அரசியல் தீர்வொன்றை வழங்காவிடின் தமது இயக்கமும் யுத்தத்தில் ஈடுபட வேண்டி நேரிடுமென அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



சில்லையூர் செல்வராசனுக்கு வணக்கம் செலுத்தி ஓய்வதற்கிடையில் இதோ இன்னொரு இழப்பு... கோமல் சுவாமி நாதன்! இதுதான் துயரம். இறப்பிற்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக இந்தப் பேனாவும், இந்தப் பக்கமும்....? தவிர்க்க முடியவில்லை.

'சுப மங்களாவில் 'பறந்து போன பக்கங்கள்' என்று சில பக்கங்கள் வருகின்றன. அதில் ஓரளவுக்காவது கோமலைத் தெரிய முடிகிறது. கோமல் தமிழ் நாட்டில் பல துறைகளில் அகலக் கால் பதித்தவர். ஆரம்பத்தில் திரைப்பட நெறியாளர் கே.எஸ். கோபாலகிருஷ்ணனுடன் உதவியாளராகச் சேர்ந்து சினிமாத் தொழிலின் நெளிவு சுழிவுகளை அறிந்தவர். அதனால் தானோ என்னவோ சினிமாப் பக்கத்தில் காலடி வைக்கத் தயங்கி நின்றார் என்றாலும் தமிழ்ச் சினிமா வரலாற்றில் அவர் பெயர் சொல்ல ஒரு திரைப்படமாவது உண்டு. **'தண்ணீர் தண்ணீர்'**. கே. பாலசந்தர் இயக்கியிருந்த திரைப்படங்களிலேயே இச்சினிமா ஒன்றுதான் சிறந்ததாக இருந்தது. ஆனால் அதற்கும் காரணம் கோமல் சுவாமி நாதனின் வலுவான பிரதி என்றுதான் கூறவேண்டும். இச்சினிமாவின் நாடக வடிவத்தை எம்மால் பார்க்க முடியாது போய்விட்டது. எனினும் சினிமாவைப் பார்த்த போது பிரதியின் செழிப்பை உணர முடிந்தது. கோமலின் **'ஒரு இந்தியக் கனவு'**, **'யுகதர்மம்'** அரசியலைப் பேசிய திரைப்படங்களே!

கோமலின் சாதனைகளில் குறிப்பிட வேண்டியவை அவரது நாடக ஈடுபாடும் சுபமங்களா வெளியீடும் ஆகும். நாடக ஈடுபாடு பற்றி கடல் கடந்து இங்கிருந்து ஒன்றும் கூறமுடியாது. ஆனால் மாதந்தோறும் வாசிக்கக் கிடைக்கிற சுபமங்களா கோமலின் சிறப்பைக் கூறும். வர்த்தக மயப்படுத்தப்பட்ட சஞ்சிகைச் சூழலில் சுபமங்களா வெளிவருவது சாதனைதான். தமிழரின் மிகச் சிறந்த படைப்புகளை அச் சஞ்சிகை தாங்கி வெளிவருகின்றது. வருகின்ற அச் சஞ்சிகை வியாபார ரீதியாகவும் சோடை போனதில்லை. இவற்றின் பின்னால் கோமலின் கடின உழைப்பு இருக்கிறது.

சென்ற வருடம் தான் எங்கள் நாட்டிற்கு வந்தார். அவர் இந்திய மண்ணை விட்டு எடுத்த வைத்த முதல் காலடி இலங்கை மண்தான். யாழ்ப்பாண மண்ணை மிதிக்காது இந்திய மண்ணில் கால் வைக்கமாட்டேன் என்று உறுதியாக நின்றார். யாழ்ப்பாண மண்ணில் கால் வைத்தார். அதன் யுத்த காலத் துன்பத்தை எழுத்தில் தந்தார். இயலுமானளவு இந்தியாவுக்கு அறிவித்தார்.

அவரைத் தொடர்பவர்கள் அவர் பணியைத் தொடர்வார்கள் என்று விரும்புகி றோம்.

கோமலுக்கு எம் வணக்கம். அவர் குடும்பத்தினருக்கு எம் அனுதாபம்.

சரிநிகர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு றாத்தல் பாணுக்காக ஒன்பது மணி வரை காவல்!

**யாழ் மாவட்ட சமாதான நீதி ஆணைக்குழுத் தலைவர் வணபிதா கிறிஸ்தோபர் ஜெயக்குமார் அவர்கள் அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்திருந்தார். அவருடன் சரிநிகர் நடாத்திய உரையாடலிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறோம்**





*நடாத்தப்படும் யுத்தம் புலிகளுக்கு எதிரானதே தவிர தமிழ் மக்க ளுக்கு எதிரானதல்ல என்றும். யாழ் மக்களை புலிகளிடமிருந்து விடுவிப்பதே தமது நோக்கம் என்றும் அரசு கூறுகிறது. இதுபற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?*

நடந்து கொண்டிருக்கும் சம்பவங்களை அடிப்படையாக வைத்து நோக்கும் போது இது எந்த விதத்திலும் உண்மையானதல்ல என்பதனை நாம் தெளிவாகச் சொல்லலாம். மக்களைப் புலிகளிடமிருந்து பாதுகாப்பது தான் நோக்கம் என்றால் எதற்காக தமிழ் மக்களைக் கொல்ல வேண்டும்? எதற்காக தமிழ் மக்களின் சொத்துக்களை அழித்தொழிக்க வேண்டும்? எதற்காக மக்களை இடம் பெயரச் செய்ய வேண்டும்? இந்த இரண்டு வார காலத்துள் ஏறத்தாழ மூன்று லட்சம் மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். இவ்வாறான ஒரு நிலையில் தமிழ் மக்களை விடுவிப்பதற்காகவே இந்த யுத்தத்தைத் தாம் நடத்துவதாக அரசு கூறுவது மக்களையும். உலக நாடுகளையும் ஏமாற்று வதற்காகவே என்பதே எமது கருத்து. இதனை எமது அனுபவத்திலிருந்தே நாங்கள் கூறுகிறோம்.

*யுத்தத்தில் மக்கள் கொல்லப்படவில்லை. புலிகள் தான் கொல்லப்படுகின்றனர் என்று கூறி எண்ணிக்கையையும் வெளியிட்டு வருகிறதே அரசு?*

கொல்லப்படுகின்ற மூன்று. நான்கு வயதுக் குழந்தைகளையும் அரசு புலி என்கிறது. கொல்லப்படுகிற எண்பது. தொண்ணூறு வயது கிழவர்களையும் அரசு புலி என்றுதான் சொல்கிறது. வானத்திலிருந்து போடப்படும் குண்டுகளால் கொல்லப்படுவதும் புலிகள் என்றுதான் என்று அரசு கூறுகிறது. வானத்திலிருந்து போடப் படும் குண்டு நேரடியாகப் புலிகள் மீதா வந்து விழுகிறது. பெரும் மக்கள் வாழும் நிலப் பரப்பில் புலிகளைத் தேடிவந்து விழுவதானால் அக்குண்டு விசித்திரமான குண்டாகத்தான் இருக்கவேண்டும். இது அரசு தன்னுடைய தவறுகளை மறைப்பதற்காக வெளியிடும் அறிக்கையே தவிர வேறொன்று மில்லை. சரி உண்மையிலேயே அவர்கள் புலி களை மட்டும் தான் தாக்குகிறார்கள். புலிகள் மட்டும் தான் கொல்லப்படுகிறார்கள் என்றால் உள்நாட்டு. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் நேரில் வந்து பார்ப்பதைத்தடை செய்யவேண்டிய அவசியமில்லையே? ஏன் பத்திரிகையாளர்களை வரவிடாமல் தடை செய்து வைத்திருக்கிறது அரசு? தாம் தவறிழைப்பது அரசுக்குத் தெரிவதால் அதனை மறைப்பதற்காகவே அவர்கள் அனுமதிக்கிறார்களில்லைப் போதும்

*நாகர் கோவில் தாக்குதலில் மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணத்துச் செய்திகள் தெரிவிக்க. அரசோ அவ்வாறனதொரு தாக்குதலே நடைபெறவில்லை என மறுத்திருக் கிறதே?*

இது நகைப்புக்கிடமானது. சம்பவம் நடந்த மறுநாள் நான் அந்தப்பிரதேசத்திற்குப் போனேன். நடந்த விபரங்கள் அனைத்தையும் அறிந்தேன். சுப்பர் சொனிக் விமானம் வட்டமிட்டதைக் கண்ட அதிபர் உடனடியாக அவ்விடத்தை விட்டு அகலுமாறு மாணவர்களுக்கு அறிவித்தார். மாணவர்கள் பாடசாலையை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர்.அருகிலுள்ள பெற்றோர் சுப்பர் சொனிக் விமானம் வட்ட மிட்டதைக் கண்டதும் தமது பிள்ளைகளை அழைத்துச் செல்வதற்காகப் பாடசாலைக்கு ஓடி வந்தனர். சுப்பர் சோனிக் மீளவும் வருவதைக் கண்டதும் மாணவர்களுக்கும். பெற்றோர்களும் அங்கிருந்த மரத்தின் கீழ் ஒளிந்தனர். ஆனால் விமானம் வீசிய குண்டோ நேரே மரத்தின் மேல் விழுந்தது. மரத்தின் கீழிருந்த அவ்வளவு பேரும் கொல்லப்பட்டார்கள். மறுநாள் நான் அந்த இடத்தை நேரிலேயே பார்வையிட்டேன். உண்மையை எப்படி மறைக்க முடியும்?

இம்முறை யுத்தம் ஆரம்பித்த பிறகு ஏராளமாக பொதுமக்கள் மீதான தாகுக்கு தல்கள் நடைபெற்றுள்ளன. நடைபெற்ற தாக்கு தல் களிலேயே நவாலி தேவாலயம் மீதான தாக்கு தலே மிகப்பெரியது. பிறகு நடந்தது நாகர் கோவில் தாக்குல். மற்றையது இணுவில் தாக்குதல். இது ஒக்.17ம் திகதி காலை நடந்தது. மக்கள் பாண் வாங்குவதற்காக பேக்கரிக்கு முன்னால் கியூ வில் நின்றார்கள். விமானம் வருவதைக் கண்டதும் ஓடிப்போய் அருகிலிருந்த பங்கருக்குள் ஒளிந்தார்கள். குண்டோ பங்கருக்கு மேல் விழுந்ததால் அவ்வளவுபேரும் (15பேர்) கொல்லப்பட்டார்கள். ஒக்29ம் திகதி நடந்த சம்பவம் இது. இடம் பெயர்ந்த மக்கள் பெருமளவாகத் தங்கியுள்ள சாவகச்சேரியிலும். பொற்பதி யிலும். சுப்பர் சொனிக் விமானங்கள் குடிமனை கள் மீது குண்டுவீசியுள்ளன. இதில் இருபதுக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். முப்பது பேருக்கு மேல் காயப்பட்டுள்ளனர்.

இதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு யாழ். ஆஸ்பத்திரி மீது தாக்குதல் மேற் கொள்ளப் பட்டிருக்கிறது.இதனால் முதலாம். இரண்டாம் வார்ட்டுக்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. யாழ். குடாநாட்டில் இப்போது இயங்கிக்கொண்டிருக்கிற ஒரேயொரு ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி மட்டுமே. இது சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கட்டுப்பாட்டிலே இருக்கிறது. இதன் மீதே தாக்குதலை நடாத்துகிறார்கள் என்றால் இதனூடாக அவர்கள் என்ன சொல்கிறார்கள்? எமக்கு என்ன செய்தியைச் சொல்ல வருகிறார்கள்? நீங்கள் இங்கு இருக்கக்கூடாது. இந்த நாட்டுக்குத் தேவையற் றவர்கள் நீங்கள். உங்களை வாழவிடமாட்டோம்: அழித்தொழிப்போம் என்ற செய்தியையா சொல்லவருகிறார்கள். எங்களுடைய அனுபவத்திலிருந்து அப்படித் தான் நாங்கள் உணர்கிறோம்.

இதுதான் அங்குள்ள நிலமைகள். சராசரியாக நாளொன்றுக்கு ஏழெட்டுப் பொது மக்கள் கொல்லப்படுகின்றனர். அறுபது எழுபது பேர் கடும் காயங்களுக்குள்ளாகின்றனர். ஆனால் அண்மையில் இது அதிகரித்திருக்கிறது. கடந்த இரண்டு மூன்று நாட்களிலே நாற்பது; ஐம்பது பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

*ஆனால் எவ்வாறாயினும் அரசு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியே தீருவது என்று கங்கணம் கட்டியுள்ளதே? அது சாத்தியமாகுமா?*

இராணுவம் நீர்வேலிக்கு வருவதற்கிடையிலேயே இவ்வளவு அனர்த்தங்கள் நடந்திருக்கின்றன என்றால். யாழ்ப்பாணத்தை அண்டிவரும் போது எவ்வளவு மக்கள் கொல்லப்படபோகிறார்கள். காயப்படபோகிறார்கள். இடம் பெயர்க்கப்படப்போகிறார்கள். எவ்வளவு அனர்த் தனங்கள் நிகழ்ந்து போகும் என்பதனை நான் சொல்லாமலே நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நம்புகின்றேன்.

மற்றையது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற எவ்வளவு காலம் எடுக்கும் என்பது இருதரப்பினரிலும் தங்கியுள்ள விடயம். ஆனால் அதைவிட முக்கியமானது: யாழ்ப்பாணம் கைப்பற்றப் பட்டால் பேச்சுவார்த்தை. சமாதானம் என்பன எட்டாத தொலைவுக்குத் தள்ளப்பட்டு விடும் என்பது எனது தனிப்பட்ட அபிப்பிராயமாகும்.

*மக்களைக் காப்பாற்றவே போரிடுவதாகக் கூறிய புலிகள் அரசபடைக ளின் தாக்குதல்களுக்கு முகம் கொடுக்க முடியாமல் ஓடிக்கொண்ருடிக்கின்றனர் என்றல்லவா அரச தொடர்பு சாதனங்கள் சொல்கின்றன?*

நிச்சயமாக இல்லை. நாங்கள் வரும் வரை புலிகளுக்கும் படையினருக்கும் இடையே கடுமையான சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிர்பார்க்காத ஒரு போர் இப்போது நடந்து கொண்டிருக்கிறது மிகக் கடுமையாக.


*அரசு இப்பிரச்சினையை பேசித் தீர்க்க முற்பட்டதாகவும் புலிகள் பேச்சு வார்த்தையைக் குழப்பி விட்டு யுத்தத்தை ஆரம்பித்ததால் தான் தாம் யுத்தம் புரிய நேர்ந்துள்ளது என்றும் அரசு கூறுகிறதே?*

புலிகள்அந்த நிலைப்பாட்டை எடுத்ததற்கு யார் காரணம் என்ற வினா முக்கியமானது. புலிகள் இன்னும் சற்றுப் பொறுத்துப் பார்த்திருக் கலாம் என்று ஒரு சாராரும். புலிகள்ஏன் அந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்று பார்க்க வேண்டும் என்று இன்னொருசாராரும் கூறக் கூடும். பேச்சு வார்த்தைகளில் என்ன நடை பெற்றது என்று பொதுமக்களாகிய எங்களுக்கு தெரியாது. ஆனால் ஒன்று புலப்பட்டது: புலிகள் சந்தேகிக்கும்படியான காரியங்கள் சந்திரிகா அரசாங்கத்தில் நடைபெற்றன என்று எங்களால் ஊகிக்கக் கூடியதாக இருந்தது. குறிப்பாக ஜனாதிபதி அக்காலகட்டத்தில் இந்தியாவுக்குச் சென்று வந்ததும். பிற்பாடு மக்களால் தெரிவு செய்யப்பட்ட எனக்கு நிபந்தனை விதிக்க யாராலும் முடியாது என்று அறிக்கை வெளியிட்டதும் புலிகளுக்கு சந்தேகத்தைக் கிளப்பிற்று எனலாம். ஆனால் அதற்காக பகைமை தவிர்ப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு புலிகள் உடனடியாக யுத்தில் இறங்கியதை நாம் சரி என்று ஏற்றுக் கொள்ளவில்லை.

*யாழ்ப்பாணத்தில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவிக்கிறார். ஆனால் யாழ்ப்பாணத்திற்கு போதுமான உணவு பொருட்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. அரச அதிபர் புலிகளின் குரலாக ஒலிக்கிறார் என்று தென்னிலங்கை பத்திரிகைகள் கூறுகின்றன. இது பற்றிஎன்ன சொல்கிறீர்கள்?*

மக்கள் அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து பேக்கரிகளுக்கு ஓடுகிறார்கள். பேக்கரி வாசலில் ஒன்பது மணிவரை காவல் நிற்கின்றார்கள். ஒரு றாத்தல் பாணுக்காக. இது போதும் நிலைமையை விளக்க. தவிர. கடந்த காலங்களில் அனுப்பப்பட்ட உணவு பொருட்கள் தொடர்பான விபரங்களையும். தறபோது அனுப்பப்படும் உணவு பொருட்கள் தொடர்பான புள்ளிவிபரங்களையும் ஒத்து நோக்கும் போது உண்மை தெரியவரும். இங்கே முக்கியமான ஒரு விடயம் என்னவென்றால் மக்களுடைய பிரச்சினைகளை. அவர்களுடைய மனித உரிமைகளைப் பற்றிப் பேசுபவர்களை அது அரச அதிபராக இருந்தாலென்ன. பொது ஸ்தாபானங்களாக இருந்தாலென்ன புலிகள் என்று முலாம் பூசுவதுதான் மிகத் தவறான ஒரு செயல்!

*யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பு உங்களுக்கு உண்டா?*



இல்லை. அதுதான் எங்களுடைய பெரிய பிரச்சினை. இதனால் தான் உள்நாட்டு. வெளிநாட்டு பத்திரிகையாளர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பும்படி கோருகிறோம். அவர்கள் அதற்கும் அனுமதிக்கவில்லை. இதில்தான் விளங்குகிறது அவர்கள் எந்தவிதத்திலும் செய்தியை இங்கு வரவிடாமல் தடுக்கப்பார்க்கிறார்கள் என்று.

*கைப்பற்றப்பட்டபகுதிகளில் இராணுவம் மக்களுடன் இயல்பாக பழகுவதையும். அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங் குவதையும் நீங்கள் இங்கு வந்த பிற்பாடு தொலைக் காட்சியில் பார்த்திருப்பீர்களே...*

இந்த தொலைத்தொடர்பு சாதனங்களைப்பற்றி உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறோம். நாங்கள் இங்கு வந்த பிற்பாடு ஒரு பத்திரிகையாளர் மாநாட்டை நடாத்தி யாழ்ப்பாணத்தின் இன்றைய நிலையை விளக்கினோம். அதில் அரசு தொடர்பான விமர்சனத்தையும். புலிகள் தொடர்பான விமர்சனத்தையும் வெளியிட்டோம். ஆனால் காலையில் பத்திரிகைகளை பார்த்ததும் எமக்கு அதிர்ச்சி. அரசு தொடர்பான எமது விமர்சனங்கள் அத்தனையையும் தவிர்த்துவிட்டு நாங்கள் புலிகள் பற்றி தெரிவித்ததை மட்டும்தான் வெளியிட்டிருந்தார்கள். தினகரன் உட்பட எல்லா பத்திரிகைகளிலும் அவ்வாறு தான் வெளியிடப்பட்டிருந்தது. இதற்கு மேல் இந்த தொடர்பு சாதனங்களைப் பற்றி சொல்ல என்ன இருக்கிறது?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மட்டு பல்கலைக்கழகம்: எதிர்காலம் தான் என்ன?

மீன் பாடும் தேன்நாட்டில் கடந்த 15 வருடங்களாக கிழக்குப் பல்கலைக்கழகம் இயங்கி வருகின்றது. விஞ்ஞான, விவசாய பீடங்கள் வந்தாறுமூலை மகாவித்தியாலயத்திலும், மற்ற பீடங்கள் புதிதாக அமைக்கப்பட்ட ஓலைக் கொட்டில்களிலும் இயங்குகின்றன. இதுவரை எந்த விதமான அபிவிருத்தி வேலைகளும் நடைபெறவில்லை. பேரினவாத அரசாங்கங்கள் மட்டுமல்ல, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியனவும் கூட எந்தவித அக்கறையும் இன்றி இருக்கும் அதேவேளை, கிழக்கு பல்கலைக்கழக கவுன்சிலும் நிர்வாகமும் கூட, எவ்விதமான அபிவிருத்தி நடவடிக்கைகளிலும் அக்கறை காட்டாமல் அசமந்தப் போக்குடன் இயங்கி வருகின்றன.

இந்த நிலைமைகளுக்கு இதுவரை பொறுப்பு வகித்த பல்கலைக்கழக கவுன்சிலும், நிர்வாகமும், உபவேந்தருமே பொறுப்பு என மாணவர்கள் மட்டுமல்ல, பொது மக்களும் கருதுகின்றனர்.

இப்போதுள்ள உபவேந்தரின் பதவிக்காலம் ஒக்டோபர் மாதத்துடன் முடிவடைந்துவிட்டது. இதனால் புதிய உபவேந்தரை சிபார்சு செய்ய வேண்டியது பல்கலைக்கழக கவுன்சிலின் கடமை. கவுன்சில் புதிய பெயர்களை சிபார்சு செய்ததுடன் பிரச்சினை ஆரம்பமாயிற்று.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக வரக்கூடியவர்கள் என பேராசிரியை மனோ சபாரத்தினம், பேராசிரியர் கே.கணேசலிங்கம், அருட் திரு.ராஜேந்திரம் ஆகியோரது பெயர்கள் மாணவர்கள், மக்கள் மத்தியில் அடிபட்டன. புதிய உபவேந்தரை சிபார்சு செய்வதற்காக பல்கலைக்கழக கவுன்சில், செப்.30 அன்று கூடியது. அதில் பிரேரிக்கப்பட்ட பெயர்களும் அவர்கள் தகைமைகளும் பின்வருமாறு

✦ அருட் திரு ராஜேந்திரம். இவர் ஒரு பேராசிரியர். மட்டக்களப்பைச் சேர்ந்த இவர், 1979ம் ஆண்டு முதல் யாழ்.பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்ததுடன் வெளிநாடுகளில் உள்ள பல்கலைக்கழகங்களிலும் விரிவுரையாளராக இருந்துள்ளார். இவருக்குப் பல்கலைக்கழக சேவையில் 20 வருடகால அனுபவம் உள்ளது.

✦ பேராசிரியை மனோ சபாரத்தினம் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நீண்ட காலமாக சேவையாற்றும் இவருக்கும் 20 வருடகால அனுபவம் உண்டு. இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

✦ கலாநிதி ரவீந்திரநாத் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். சிரேஷ்ட விரிவுரையாளர்.

✦ திரு.ரகுராகவன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர். 31வது வயதை எட்டிப்பிடிக்கும் நிலையில் இருக்கும் இவரது, பல்கலைக்கழக சேவைக்கால அனுபவம் ஆறு வருடங்கள் மட்டுமே.

அருட்திரு ராஜேந்திரம் அவர்கள் மிகக் குறைந்த வாக்குகளையே பெற்றார். மற்றவர்கள் ஓரளவு சமமான வாக்குகளைப் பெற்றனர். இவ்வாக்கெடுப்பின் போது பல்கலைக்கழக கவுன்சிலின் விதி முறைக்கு மாறாக தபால் மூல வாக்குகளும் கணிப்பிற்கு எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது.

பல்கலைக்கழக கவுன்சில் திறமையுள்ள அருட் திரு. ராஜேந்திரத்தை ஏன் கருத்தில் கொள்ளாமல் ஒதுக்கியது. சுயநல நோக்கில் இயங்கும் அணிகளில் அங்கத்தவராக இல்லாது இருந்தமையா? இலாப நோக்கில் நடவடிக்கைகளில் பங்குபற்றாமையா அல்லது இவர் மட்டக்களப்பை பிறப்பிடமாகக் கொண்டதா இவரது தவறு. மாணவர்கள் மத்



தியில் மட்டுமல்ல, மக்கள் மத்தியிலும் சந்தேகங்கள் கிளம்பத் தொடங்கின.

இதேவேளை, மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் ஊழல்களையும் சுயஇலாபம் கருதி செயற்படுபவர்களையும் வெளிக் கொண்டுவர காத்திருந்தனர். காலம் கனிந்து மாணவர்கள் கைகளில் வந்தது.

மாணவர்கள் சந்தர்ப்பத்தை தவறவிடவில்லை. நடவடிக்கையில் இறங்கினர். தமது பாதுகாப்பு கருதி, மாணவர் சங்கத்தைக் கலைத்து, மாணவர் நடவடிக்கை குழு ஒன்றை ஆரம்பித்தனர். இதன் மூலம் நான்கு கோரிக்கைகளை முன் வைத்து ஒக்.9 முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர். (இவர்கள் முன்வைத்த கோரிக்கைகள் பின்வருமாறு:

✦ தற்போதைய பேரவை கலைக்கப்பட வேண்டும்

✦ புதிய பேரவையானது புதிய உபவேந்தரை நியமிக்க வேண்டும்.

✦ ஜனாதிபதியால் இலஞ்ச, ஊழல் விசேட ஆனைக்குழு நியமிக்கப்பட வேண்டும்.

✦ இப் பல்கலைக்கழகத்தை துரித அபிவிருத்தி செய்யக்கூடிய வகையில் துரித அபிவிருத்தி செயற்குழு ஒன்றை அமைக்க வேண்டும்.

ஒக். 12ந் திகதி மட்டக்களப்பு நகரில் உள்ள பாடசாலைகள் இதற்கு ஆதரவு தெரிவித்து பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன. இப்பிரச்சினைக்கு அதுவரை பொறுப்பானவர்கள் யாரும் பதிலளிக்கவில்லை. இந்நிலையில், மாணவர்கள் ஒக்.14 அன்று அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர்.

இதற்கிடையில், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு சிபார்சு செய்த பெயர்களை மீளாய்வு செய்யும்படி, பெயர்களைத் திருப்பியனுப்பியது. நிலைமை சிக்கலானது. இப்படியான நேரங்களில், உபவேந்தர் விஷேச கவுன்சில் கூட்டத்தை கூட்டி நடவடிக்கை எடுக்க முடியும். உபவேந்தர் அப்படி செய்யவில்லை. ஒக் 13 முதல் மாணவர்களை நிர்வாக, கல்வி சார் கட்டிடத் தொகுதிக்குள் உட்பிரவேசிக்க முடியாதவாறு தடைசெய்து பல்கலைக்கழகத்தை மூடினார். இதனால் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியது. இதே நேரம் மட்டக்களப்பில் உள்ள பல நிறுவனங்களில் இருந்து, ஜனாதிபதிக்கும், பல். மானிய ஆணைக்குழுவிற்கும், கல்வி அமைச்சுக்கும் இந்த உபவேந்தர் சிபார்சில் பல ஊழல்கள் இருப்பதாக, கடிதங்கள் பறந்தன. கல்விசாரா உத்தியோகத்தர் சங்கமும் மாணவர்களின் எல்லாக் கோரிக்கைகளையும் ஆதரித்து ஒருநாள் போராட்டம் கூட நடத்தினர். ஆசிரியர் சங்கம் மாணவர்களின் இரு கோரிக்கைகளை மட்டுமே ஆதரித்தது.

பல்கலைக்கழக நிர்வாகமோ, சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்தபடி கௌரவ பிரச்சினையில் சிக்குண்டு, இப்பிரச்சினையில் அதிக பிரயத்தனம் எடுக்காமல் இருந்தது. மாணவர்கள் போராட்டத்தை ஒருபடி முன்னோக்கி நகர்த்தினர்.

ஒக்.16 முதல், சுழற்சி முறையிலான உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். இதே வேளை பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இரண்டாக பிளவு பட்டு, ஒரு சாரார் மாணவர்கள் மீது குற்றஞ் சுமத்தி, நிர்வாகத்திற்கு சார்பாகவும் சில வேளைகளில் பிரதேச வாதத்தையும் தூக்கிப் பிடிப்பவர்களாகவும் இருக்கின்றனர். மறு சாரார் இப் பிரச்சினையை நியாயமான முறையில் பார்க்க வேண்டுமெனவும், மாணவர்கள் கோரிக்கையை பரிசீலித்தும் பார்க்க வேண்டும் எனவும் கூறுகின்றனர். ஆசிரியர் சங்கம் இப்படி பிளவுபட, சில பத்திரிகைகள் பொறுப்பற்ற முறையில், கவுன்சிலின் மீதான குற்றச் சாட்டுக்களை செனட் மீதான குற்றச்சாட்டு என பிரசுரித்தமையும் ஒரு காரணம் என தெரிய வருகிறது. இதே வேளை சில விரிவுரையாளர்கள், கௌரவப் பிரச்சினையை முன்நிறுத்தி, சுயலாப நோக்கோடு மாணவர் கோரிக்கைகளை கவனத்தில் எடுக்காமல், மாணவர்களைப் பழி தீர்க்க பல்கலைக்கழகத்தை காலவரையறை இன்றி மூட முயற்சிக்கின்றனர். இவர்கள் பல்கலைக்கழக முன்னேற்றத்தில் எந்த விதமான அக்கறையும் காட்டாமல் தான் தோன்றித்தனமாக செயற்படுகின்றனர்.

உபவேந்தர், இப்படியான சந்தர்ப்பங்களில் விசேட கூட்டத்தைக் கூட்டாமல், மாதாந்தம் நடைபெறும் கவுன்சில் கூட்டத்தை ஒக்.21 கூட்டினார். இக் கூட்டத்தில் சிபார்சு செய்த் பெயர்கள் மீளாய்வு செய்யப்பட்டன. இது தொடர்பான அகழ்வராச்சியிலும் ஈடுபட்டனர். முடிவு, கவுன்சில் பொது உடன்பாட்டுக்கு வரமுடியாமல் போனதே. இக் கவுன்சில் கூட்டத்தில் ஏற்கனவே உபவேந்தர் பதவிக்குப் பிரேரிக்கப்பட்ட பேராசிரியை மனோ சபாரத்தினம், திரு.ரகுராகவன் ஆகியோர் தமது விண்ணப்பங்களை வாபஸ் பெற்றனர். கலாநிதி. ரவீந்திரநாத்தும் தமது விண்ணப்பத்தை வாபஸ் பெறுவதாக தொலைபேசி மூலம் தெரிவித்ததாக மனோ சபாரத்தினம் தெரிவிக்க உபவேந்தரும் அக்கூற்றை உறுதி செய்தார்.

கடைசியாக உபவேந்தர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்ட பெயர்களில் அருட் திரு.ராஜேந்திரம் அவர்களின் பெயர் மட்டுமே மிகுதியாக இருந்தது.ஆனால், சட்டப்படி, பல்கலைக்கழக மானிய ஆனைக்குழுவிற்கு மூன்று பெயர்களை சிபார்சு செய்து அனுப்ப வேண்டும். இக்கூட்டத்தில் முடிவு எடுக்க முடியாமையினால் கூட்டம் நவ.4ந்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கவுன்சில் ஒக் 21 அன்று நடைபெற்ற கூட்டத்தில், இப்பிரச்சினை தொடர்பாக எந்த முடிவையும் எடுக்காமையானது கவுன்சிலின் திறமையின்மையையும், அக்கறையின்மையையும் பிரச்சினையை தீர்ப்பதில் அதன் மந்தப் போக்கத்தாலும் தாம் தமது போராட்டத்தை தற்காலிகமாக ஒக் 25 அன்றுடன் இடைநிறுத்துவதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடைசியாக கிடைத்த தகவல்களின் படி தமது விண்ணப்பங்களை வாபஸ் பெற்ற மூவரும் 4ம் திகதி நடைபெறும் கவுன்சில் கூட்டத்தில் மீண்டும் தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

மாணவர்களோ பல்கலைக்கழக அபிவிருத்தியில் அக்கறையுள்ள ஊழலற்ற புதிய கவுன்சில் ஒன்றையும், அதனூடாக தெரிவு செய்யப்படும் புதிய துணைவேந்தர் ஒருவரையும் எதிர்பார்க்கின்றனர். இம்மாணவர்ளின் எதிர்பார்ப்புக்கு தடையாக நிற்பது யார்? இதன் பின்னணி என்ன? அவ்வாறனால் மட்டு. பல்கலைக்கழத்தின் எதிர்காலம் தான் என்ன?

—பாரதி



ජාතීන් අතර යුක්තිය හා සමානත්වය
සඳහා ව්‍යාපාරය
இனங்களுக்கிடையில் நீதிக்கும்
சமத்துவத்துக்குமான இயக்கம்
Movement for Inter Racial
Justice and Equality
இல. 4, ஜெயரட்ண மாவத்தை, கொழும்பு - 5, இலங்கை. தொலைபேசி 94-1-584...
No: 4, Jayaratne Mawatha, Colombo 05, Sri Lanka. Tel: 94-1-584380 94-1-594229
Fax No. 94-1-580721 94-1-502561 Attention : Mirje

# 'யுத்தம் சமாதானத்தை தராது!'

கடந்த இரு வாரங்களாக நடந்துவரும் நிகழ்ச்சிகளோடு ஏப்ரல் 19ம் திகதி தொடங்கிய வடக்கு கிழக்கு யுத்தத்தின் இன்றைய நிலை மிகவும் பயங்கரமான நிலையை எடுத்துள்ளது.

இராணுவம் யாழ்ப்பாணத்தின் மீது தொடுத்துள்ள புதிய தாக்குதல் நடவடிக்கை ஆரம்பமாகி இன்றுடன் 15 நாட்களாகி விட்டன. ஆரம்ப தாக்குதல்களின்போது நடாத்தப்பட்ட விமான குண்டுவீச்சுக்கள் செல் வீச்சுக்கள் என்பவற்றால் 200க்கும் மேற்பட்ட யுத்தத்தில் சம்பந்தப்படாதவர்கள் இறந்துள்ளனர். கிட்டத்தட்ட 1000 பேர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகினர். சற்று ஏறக்குறைய 1,50,000 பேர் தமது வதிவிடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளனர். இந்த இறந்தவர்களதும் காயமடைந்தவர்களதும் தொகை நாகர் கோவிலுக்கருகே கொல்லப்பட்ட 23 சிறுவர்களையும் உள்ளடக்கியதாகும்.

குண்டுவீச்சுக்களும் செல் வீச்சக்களது பின்னணியில் நடாத்தப்படும் இப்புதிய இராணுவ நடவடிக்கை இராணுவம் மிகவும் நெருக்கமான குடிசனத்தைக் கொண்டதும், விவசாயம் செய்யப்பட்டுவரும் இடங்களுமான பிரதேசங்களை தாண்டி முன்னேறுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இப்பிரதேசங்களில் வாழும் இன்னுமொரு ஒரு லட்சம் பேர் ஏற்கனவே இவ் யுத்தத்தால் அகதிகளாக உள்ளவர்களுடன் சேர்ந்து கொண்டுள்ளனர். செல்லடிகள் மிகவும் அதிகமாக இருப்பதாயும், பெருமளவான பொது மக்களது உயிரையும், அவர்களது சொத்துக்களையும் அழித்து வருவதாகவும் இவ் அகதிகள் கூறுகின்றனர்.

அத்துடன் இத்தாக்குதல் உணவு விநியோகம், மருந்து மற்றும் மக்களுக்கான இதர அத்தியாவசிய பொருட்களை வழங்குவதில் புதிய தடைகளையும் உருவாக்கியுள்ளது. மிகவும் மேலோட்டமாகவேனும் கடந்த காலங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட விநியோகம் கூட இப்பொழுது நடைமுறையில் இல்லை.

யாழ் குடா நாட்டுக்குள் உருவாகியுள்ள இடம்பெயர்ந்தவர்களின் தொகை அதிகரிப்பின் காரணமாக அங்குள்ள அரச அதிகாரிகள் மிகக் குறைந்தளவு உலர் உணவுப் பங்கீட்டைக்கூட வழங்க முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த இராணுவத் தாக்குதலை விடுதலைப் புலிகள் இரண்டு வழிகளில் எதிர் கொண்டுள்ளனர். அவர்கள் திரும்பவும், அம்பாறை, பொலநறுவை, அனுராதபுர மாவட்டங்களிலுள்ள எல்லைப்புறக் கிராமங்களில் உள்ள சிங்கள பொதுமக்களைக் கொலை செய்வதில் இறங்கியுள்ளனர். கடந்த இரு வாரங்களில் நடைபெற்ற 5 கிராமங்கள் மீதான தாக்குதலின் போது கிட்டத்தட்ட சிறுவர்கள் உட்பட 130 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். பயமும், பாதுகாப்பின்மையும் ஆறாயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்களை இடம் பெயர வைத்துள்ளது. புலிகள் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த நகரைத் தாக்குவதிலும் இறங்கியுள்ளனர்.

ஆகவே, யுத்தம் மிகவும் உக்கிரமாக யுத்தத்தில் ஈடுபடாத சாதாரண மக்களது உயிரைப் பற்றியோ உரிமைகளைப் பற்றியோ எந்தகைய அக்கறையுமற்று நடாத்தப்பட்டு வருகிறது.

யுத்தத்தில் ஈடுபடும் எந்தவொரு மிகவும் யுத்தத்தில் ஈடுபடாத மக்களது அடிப்படை மனித உரிமைகளைக் கூட மதிப்பதாகத் தெரியவில்லை. இந்த யுத்தம் இந்தத் தீவில் ஏதோவொரு மூலைக்குள் நடந்து கொண்டிருக்கும் விவகாரமாக இனியும் இல்லை. படையினர், விடுதலைப்புலிகள், யுத்தத்தில் சம்பந்தப் படாத மக்கள் ஆகியோரது இறப்புக்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அத்துடன் இந்த யுத்தமற்ற நாட்டின் பொருளாதாரத்தின் மீது மிகவும் மோசமான பின்விளைவுகளை ஏற்படுத்தியும் வருகிறது.

இந் நடவடிக்கைகள் மோர்ஜ் நிறுவனம் எப்போதும் சொல்லி வந்ததை இந்த யுத்தத்திற்கே காரணமான அரசியல் பிரச்சினையை யுத்தம் ஒரு போதும் தீர்த்து வைக்கப் போவதில்லை. அது அரசியல் மட்டத்திலேயே தீர்க்கப்பட முடியும் என்பதை மேலும் ஒருமுறை வலியுறுத்துகின்றன.

இந்த யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் ஆகவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரிடமும் அரசாங்கத்திடமும் விடுதலைப்புலிகளிடமும் நாம் யுத்த நிறுத்தத்தை நோக்கிச் செல்லவல்ல செயல் முறைகளில் ஈடுபடுமாறு கோருகிறோம். இது ஒரு அரசியல் தீர்வு குறித்த பேச்சுவார்த்தையையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

அரசாங்கம் முன்பு வைக்கப்பட்டவற்றை விட பலவிதங்களில் முன்னேறிய அரசியல் முன்மொழிவு சிலவற்றை முன்வைத்திருப்பதால் விடுதலைப் புலிகள் இதைக் கவனத்தில் எடுத்து பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தொடங்க வேண்டும்.

அரசாங்கம் அதனுடைய கடந்தகால அனுபவங்கள் எப்படியிருந்த போதும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் ஒரு சமாதான நிலைமையை உருவாக்குவதற்கு அவசியமானவை என்று ஏற்றுக்கொள்வதற்குரிய நெகிழ்வுத் தன்மையை தன்னுள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் ஒரு மூன்றாவது தரப்பு அல்லது ஒரு சர்வதேச மத்தியதரத்தின் அனுசரணை இவ்வாறான ஒரு பேச்சு வார்த்தைக்கு உதவியாக இருக்கும் என்பது குறித்து கணக்கில் எடுக்குமாறு அவர்களை நாம் கோருகிறோம்.

மக்களுடைய ஏகோபித்த அழுத்தமே இத்தகைய நிறுவனங்களை எப்போதும் முன்னோக்கித் தள்ளிவந்துள்ளன. எனவேதான், இங்குள்ள அனைத்து சிங்கள, தமிழ் மக்களையும் மற்றெல்லா இதர குழுமங்களும் சேர்த்து இந்த யுத்தத்துக்கு முடிவு காண்பதற்காகவும் நீதி மற்றும் சமத்துவ அடிப்படைக்கமைய இங்குள்ள எல்லோரும் வாழ்வதற்கான ஒரு அரசியற் கட்டமைப்பை உருவாக்குவதற்காகவும் ஒன்றுபடுமாறு அழைக்கிறோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எரிகிற வீட்டில் எண்ணெய் ஊற்றுகிறது அரசு!

**Out Look பத்திரிகையின் செய்தியாளர் எஸ். ஏ. பன்னீர் செல்வம் அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு இரகசியமாகச் சென்று வந்தார். அவருடைய பேட்டி இங்கே தரப்படுகிறது.**



எஸ். ஏ. பன்னீர் செல்வம்

***நீங்கள் சம்பிரதாயபூர்வமான பத்திரிகை சுதந்திரத்தைக் கடைப்பிடிக்கும் பத்திரிகையாளர்களில் ஒருவர். யாழ்ப்பாணத்தில் நீங்கள் அவதானித்ததை அடிப்படையாகக்கொண்டு, கொழும்பில் அமுலில் இருக்கும் செய்தித்தணிக்கையைப் பற்றி ஏதாவது கூற முடியுமா?***

தணிக்கை என்பது சுற்றிவளைக்கப்பட்ட பீதியடைந்த அரசாங்கத்தின் உளவியல் வெளிப்பாடு. அது வெளிப்படுவது வதந்திகள் மூலம். தணிக்கை உள்ள சமூகத்தில் வதந்தி முக்கிய இடத்தைப் பெற்றுக்கொள்கின்றது. அப்பொழுது உண்மை எது? பொய் எது? தெரிந்து கொள்வது முடியாத காரியம்!

வடக்கு - கிழக்கு பிரச்சினை முக்கியத்துவம் உடையது. அவ்வாறான முக்கியத்துவமான பிரச்சினையில் பொய்களும், வதந்திகளும் கலந்து விட்டால் ஏற்படும் பயங்கரத்தை வார்த்தைகளால் கூறமுடியாது.

நான் ஒரு உதாரணத்தைக் கூறுகின்றேன். இலங்கை இராணுவச் செய்திகள், ஒப்பரேஷன் மின்னல் நடவடிக்கை முன்னேற்றகரமானது எனத் தெரிவிக்கின்றன. ஆனால் இராணுவத்தால் முன்னேற முடியாமலுள்ளது. யாழ். ஞானம் விடுதில் இருந்து கொண்டு இலங்கை ஒலிபரப்புச் சேவையை செவிமடுத்தேன். அவை ஒன்றிலும் கூட இராணுவம் பின்தங்கியதைப் பற்றிய செய்திகள் கூறப்படவில்லை. செய்திகளை செவிமடுக்கும் யாழ் மக்கள், அவை ஒன்றையுமே நம்புவதில்லை. அவர்கள் மின்னல் நடவடிக்கை தோல்வியில் முடிந்தது என்றே நம்புகின்றனர். இறந்த புலிகளின் எண்ணிக்கையைக் கேட்டு கேலிச்சிரிப்பு சிரிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் சாதாரண மக்கள் இறந்தமையைப்பற்றி சரத் முனசிங்க மறுத்து செய்திகள் வெளியிடுவதை மக்கள் நம்புவார்களா? இவ்வாறான செயல் காரணமாக வடக்கு - கிழக்கு மக்களுடன் கதைக்க அரசுக்கு தொடர்பூடகம் இல்லாது போய்விடும். இது எரிகிற வீட்டுக்கு எண்ணெய் ஊற்றுவதைப் போன்றது.

***தணிக்கை இல்லாதபோதும் கூட பத்திரிகைகளால் வட-கிழக்கு நிலவரத்தை யதார்த்தமாக கூற முடியவில்லை. இன்று யாழ் நிலவரத்தை மக்களுக்கு அறிவிக்க இவை ஏதாவது நடவடிக்கை எடுக்கின்றது என நினைக்கின்றீர்களா?***

இது துக்ககரமானது. வடக்கு மக்கள் இன்று 10-20 வருடங்கள் பின்தங்கிய நிலையிலேயே வாழ்கின்றனர். ஒரு பக்கம் 20ம் நூற்றாண்டின் நுணுக்கமான ஆயுதங்கள் கூட அங்கு காணப்படுகின்றன. ஆனால் 5 வருடமாக மின்சாரம் இன்றி வாழும் அவர்கள் 'நூற்றாண்டுக்கு பிற்பட்ட வகையிலேயே இருக்கின்றனர். இந்நிலையில் வாழும் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் ஆகியோரின் உளவியல் பிரச்சினைகளைப்பற்றி கதைப்பது யார்? இந்நிலையைத்தான் நாம் அனைவரும் புரிந்துகொள்ளல் வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் உக்கிரமான உணவுப்பற்றாக்குறை காணப்படுகின்றது. நான்கு மாதங்களுக்கு தேவையான உணவு உண்டு என கொழும்பு வானொலி அறிவிக்கும்போது தான், அங்கு மா இன்மையால் கேக் தயாரிக்க வேண்டாம் என அரசாங்க அதிபர் பேக்கரிகளுக்கு அறிவித்துக் கொண்டு இருந்தார். இவ்வாறான அறிவித்தல்களை கேட்கும் மக்கள் ஆத்திரமடைகின்றனர். ஏப்பிரல் 19க்குப்பின் உணவு கிடைக்கவில்லை என்பதை மக்கள் அறிவார்கள். அதைத்தவிர யாழ்ப்பாணத்துக்கு உணவுப் பொருட்கள் செல்ல வழி இல்லை.

***உங்கள் அனுமானத்தின்படி, தற்போதைய யுத்த நிலவரம் மக்களை எவ்வாறு பாதித்துள்ளது?***

பிரதானமானது அகதிகளாக மக்கள் மாறிக் கொண்டிருப்பதாகும். ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் போதும் ஒரு பகுதி அகதிகளாகின்றனர். இராணுவம் கைப்பற்றிய பிரதேசங்களில் ஒன்று இரண்டு மக்களே இருப்பர். தப்பிவரும் மக்களைப் பாதுகாக்க அங்கு சமூகம் இல்லை. தப்பி வருவதால் விவசாயம், கூலி வேலைகள் என்பன பாதிக்கப்படுகின்றன. அவர்களின் வாழ்க்கை சோகமானது.

***யுத்த நடவடிக்கையால் கல்வித்துறைக்கு ஏற்பட்ட பாதிப்பு என்ன?***

தென் இந்தியனாக இருந்தும் என்னால் விளங்கிக் கொள்ள முடியாத காரணம் இது ஒன்றுதான். டியூசன் வகுப்புக்கள் அங்கு தங்கு தடையின்றி நடைபெறுகின்றன. இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் பணம் புரளும் நபர்கள் டியூசன் ஆசியர்கள் தான். குறிப்பிட்ட நேரத்துக்கு நடைபெறும் சிறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாண பல்கலைக்கழகம். அங்கு மாணவர்கள் போராடுவது விரிவுரையாளர்களைப் பெறுக்கொள்ள ஆகும்.

செஞ்சிலுவை சங்கம் தங்கள் காரியாலயங்களின் முன் பகுதியில் விளக்குகளை வைத்துள்ளன. 6 மணிக்கு பின்னர் சிறுவர் சிறுமியர் படிப்பது மட்டுமன்றி டியூசன் வகுப்புக்களுக்கும் அவ்விளக்குகள் பயன்படுகின்றன. அங்கு பாடசாலை மூடப்பட்ட சரித்திரமே கிடையாது என்றே கூறலாம்.

***நீங்கள் அங்குள்ள மாணவர்களோடு கதைக்கவில்லையா?***

கதைத்தேன். ஆனால் என்னுடைய கேள்விகளுக்கு பதில் கூறாது என்னைக் கேள்விக் கேட்கத்துவங்கிவிட்டனர். தமிழ்நாடு யாழ்ப்பாணத்தை தாரைவார்த்துக் கொண்டுத்துவிட்டது என்கின்றனர். ''தமிழ் நாட்டை நடிகனுக்கு அல்லது நடிகைக்கு பொறுப்பளித்து விடுங்கள் அது போதும்'' என்றனர்.

***நீங்கள் கூறுவதைக் கேட்கும் போது யாழ் மக்களுக்கு சமாதானத்தில் நாட்டமில்லை என்று தெரிகின்றதே?***

என்னால் அது பற்றிக்கூற முடியாது. ஆனால் யுத்தத்தினால் புலிகள் சார்புத் தன்மை புலப்படுகிறது. சந்திரிகாவினால் தாங்கள் ஏமாற்றப்பட்தாக ஒரு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

***அந்நிலை புலிகளாலேயே ஏற்படுத்தப்பட்டது. புலிகள் பிரசாரங்கள் மூலம் மக்களை ஏமாற்றிவிட்டனர் என்றுகூறமுடியாதா?***

கொஞ்சம் இருங்கள் யாழ். சமுதாயத்தின் எண்ணங்களை எனக்கு நிரம்பத்தெரிந்து கொள்ள முடிந்தது. இளைஞர்கள் போராட்டமான கருத்துக்களைத் தெரிவித்தனர். பெரியவர்கள், ''பக்தி'' பூர்வமான கருத்துக்களைத் தெரிவித்தனர். நான் அங்கு இருந்தது நவராத்திரி காலத்திலேயே யாழ்ப்பாணத்தின் ஒவ்வொரு கோவிலிலும், வயதுபோனவர்களே நிரம்பி இருந்தனர்.

***இப்பொழுது யாழ்ப்பாணத்தில் யுத்த இராணுவங்கள் இரண்டு உள்ளன. ஒன்று இலங்கை இராணுவம். மற்றையது; புலிகள். புலிகள் தம்மை விடுதலை இயக்கமாகவும், இராணுவம் தமிழர்களை விடுதலை செய்யும் இராணுவமாகவும் செயற்படுவதாக கூறிக்கொள்கின்றனர். யாழ். மக்கள் இதை நோக்குவது எவ்வாறு?***

புலிகள் எவ்வாறாயினும், அங்கே பிறந்து வளர்ந்ததால், மக்கள் அவர்களைக் கண்டு பீதிஅடைவதில்லை. ஆனால் இராணுவம் வருவதை அறிந்தவுடன் பொருட்களை சுமந்து கொண்டு தப்பியோட தயாராக உள்ளனர். இவ்வேறுபாட்டை தென் இலங்கை மக்களால் அறிய முடியவில்லை. இராணுவம் மட்டுமல்ல அதோடு இணைந்துள்ள புளொட், ஈ.பி.டி.பி. போன்றவர்களிடமும் மக்கள் வெறுப்புற்றுள்ளனர். தாண்டிக்குளம் புளொட் காவலரணை தாண்டிச் செல்பவர்கள் நல்லதைக் கூறவே மாட்டார்கள்.

இராணும் தொடர்பான விமர்சனங்கள், இவையெல்லாம் இணைந்தே ஏற்படுகின்றன.

→ 15

# இலங்கையில் ஜனநாயகம் பாஸிஸம்



## பாலம்

இலங்கையில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் இனப்பிரச்சினைகள் தொடர்பான பிணக்குகள் இடம் பெற்ற வண்ணமே உள்ளன. ஆனால் பாலம் பத்தி மூலம் நான் அவதானத்துக்கு உட்படுத்துவது. வடக்கு - கிழக்கு அரசியல் பிரச்சினைக்கு முன்னால் சிங்கள, தமிழ், முஸ்லீம் ஆகிய பிரதான இனமக்களுக்கு ஏற்படும் அரசியல் அல்லல்களையே. அது வெற்றி அளித்துள்ளது என்பது ''சரிநிகர் பத்திகை'' மூலம் மேற்கொண்ட வாசகர் கணிப்புகள் மூலம் தெரிய வருகின்றது. இப்பொழுது பலர் என்னிடம் இப்படிக் கேட்கின்றனர்.

''பாலம், வடக்கு - கிழக்கு பிரச்சினையை மட்டும் ஏன் குறித்துக்காட்டுகின்றது? வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்ந்தவுடன் பாலம் பத்தியும் முடிவடைந்துவிடுமா?''

அத்தோடு இன்னும், சிலர் இப்படியும் கேட்கின்றார்கள். '' .... புலிகள் தொடர்பான உங்கள் கருத்து என்ன?'' இக்கேள்வியைக் கேட்டது. யாழ்ப்பாணத்தை தாயகமாகக் கொண்ட கொழும்பில் வசிப்பவரான ஒரு இளைஞர்.

இன்னும் சிலர் புதுமையான சில கேள்விகளைக் கேட்டனர். ''பாலம் பத்தி மூலம் இனங்களுக்கிடையில் சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என நீங்கள் நினைக்கின்றீர்களா?''

வெவ்வேறு நிலைகளில் அக்கேள்வியை எழுப்ப முடியும். ஆனால், அதற்கு தக்கவிதத்தில் பதில் அளிப்பது என் கடமை.

ஆயினும் தன்னுடைய கருத்தே சரியானது என நிலைநிறுத்த முற்படுபவர் தீவிரவாதிக்கு அல்லது பாஸிஸவாதிக்கு சமனானவர். அந்த கருத்தின் அடிப்படையில், வாசகனை தூண்டும் கேள்விகளுக்கு நான் தக்க விதத்தில் பதில் அளிக்கத் தவறுவதில்லை.

1. பாலம் பத்தியில், வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் ஆரம்பமான இனப்பிரச்சினை தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுவது உண்மை. வட - கிழக்கு பிரதேசங்களில் உருவாகிய ஆயுதக்குழுக்களின் முன்னால் இனப்பிரச்சினை இன்று முக்கியத்துவம் வகிக்கின்றது.

அத்தோடு, கூட்டு தமிழ் அரசியல் சட்டகங்களை (Total Tamil Political Discourse) தீர்மானிப்பது யாழ்ப்பாணத்தின் அரசியல் ஆகும். யாழ்ப்பாண அரசியலை அன்று த.வி.கூ. (TULF) இடமும், இன்று புலிகளிடமும் இருப்பது கண்கூடு. இலங்கையின் எந்தப் பிரதேசத்திலாவது தமிழர் ஒருவர் வாழ்வாராயின் அவரின் உரிமைகளை தீர்மானிப்பது யாழ் தமிழ் அரசியல் மூலம் ஆகும். நிச்சயமாக அந்த தமிழ் அரசியல் அன்று சிறியதாகவும், இன்று கெரில்லா இயக்கமாகவும் வளர்ந்துள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் வடக்கு - கிழக்குக்கு, பாலம் பத்தி மூலம் அவதானத்தையூட்டுவது. இந்நிலை தெளிவாக வாசகர்களுக்கு தெரியவேண்டும் என்பதற்காகவே.

வடக்கு - கிழக்கு பிரச்சினை தீர்ந்தவுடன், பாலம் பத்தி நிறுத்தப்படமாட்டாது - அதை எழுதும், எனது பிரார்த்தனை சமூகவாத சமுதாயத்தை கட்டி எழுப்பல் வேண்டும். வகுப்பு பேதம் அற்ற சமூகததைக் கட்டி எழுப்ப வேண்டும என்பதாகும்.

சிலருக்கு, இவன் பைத்தியக்காரனா என்ற எண்ணம் தோன்றக்கூடும். கனவுகள் காண்பதை விடுத்து கண்ட கனவுகளை நூறு ஆண்டுகளிலாவது நனவாக்க நாம் ஒவ்வொருவரும் பாடுபடுதல் வேண்டும். அப்பொழுது தான் அது நனவு ஆகும். இன்று நம் ஒவ்வொருவரினதும் தேவை, இனப்பிளவுகள் அற்ற ''இளைஞர் சமூகத்தை'' உருவாக்குவதாகும். இலங்கையின் மரபுசார்ந்த இடதுசாரிகள் மரணத்தை தழுவிக் கொண்டிருக்கின்றனர். சமசமாஜக்கட்சி, கொம்யூனிஸ்கட்சி போன்றவற்றை இளைஞர்கள் கண்டுகொள்வதில்லை. மக்கள் விடுதலை முன்னணி இடதுசாரி அல்ல. தமிழ் பிரிவினரை எடுத்தால், இதைவிட வேறுமாற்றங்கள் நிகழவில்லை. தமிழ் கட்சிகள், 'அமைப்புக்கள் என்பவற்றை நடாத்துவது இந்தியா என்பதால், புலிகளுக்கு தமிழ் இனவாதத்தை கட்டி எழுப்ப முடியும். முஸ்லீம் அரசியல் முழுமையாக சந்தர்ப்பவாதிகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது.

இதனால், நமக்கு நாமே வாழ்வை ஏற்படுத்திக் கொள்ள இளம் 'இடதுசாரத்தை' ஏற்படுத்திக் கொள்ள வேண்டாமா?

இரண்டாவது புலிகள் தொடர்பான எனது கருத்துக்களை நான் முன்னரே கூறியிருந்தேன். புலிகள், ம.வி.மு. இவை இரண்டும் நாட்டின் முன்னணி ஆயுதக்குழுக்கள். இவை இரண்டும் இனவாத எல்லைக்குள் கிடக்கின்றன. ஆனாலும் இவ்விரண்டு அமைப்புக்கள் தொடர்பாக எனக்கு எந்த வித எதிர்ப்பும் இல்லை.

பிரபல இடதுசாரிகள் அல்லது லிபரல்வாதிகள் போன்று நான் புலிகளது, ம.வி.முன்னணியினதும் விரோதி அல்ல. அவர்களை விரோதிப்பதனால் எனக்கு ஏற்படும் அரசியல் இலாபம் என்ன? நீங்கள் அல்லது நான் அவற்றை எதிர்ப்பதால், சமூகத்திலிருந்து இரு குழுக்களையும் தவிர்க்க முடியுமா? புலிகளும், ம.வி.மு.யும் உருவாக்கிய பணக்கார வகுப்புக்கு எதிராக நாம் சமூகவாத அமைப்பை உருவாக்கினால் மட்டுமே இவற்றைத் தவிர்க்க முடியும். அப்படியில்லாவிட்டால் எந்த ஆயுதக்குழுவையும் சமூகத்திலிருந்து விலக்கி வைக்க முடியாது.

மூன்றாவது பாலம் பத்தி மூலம் இனப்பிரச்சினையை நீக்கி சமாதானத்தை உருவாக்கலாம் என்பதை நான் ஏற்றுக் கொள்ளவில்லைத்தான். ஆனால் மக்களுக்கிடையே சமத்துவ புரிந்துணர்வை ஓரளவாவது உருவாக்க முடியும். இனங்களுக்கிடையில் சமாதானத்தை தோற்றுவிப்பது அரசியல் ரீதியான செயற்பாடாகும். அதை பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலம் வெளிப்படுத்துவது பிரயோசனமற்றது. அதைத் தீவிர இடதுசாரத்தாலேயே நடைமுறைப்படுத்தல் வேண்டும். தொலைக்காட்சி நிறுவனம் சமாதானத்தை தோற்றுவிப்பதாகக் கூறிக்கொண்டு ஆரம்பித்த விவாதம், தீவிர இனவாதத்தை வெளிக்காட்டுதலோடு முடிவுற்றது. இலங்கை தொடர்பூடகத்தின் நிலை

→ 16

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





கொலன்னாவ தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் போட்டியிட்ட மூவரில் இருவர் பெண்கள். ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர் பிலிப் குணவர்தனவின் மனைவி **குசும்சிறி குணவர்தன.** மற்றவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டி.எஸ்.சமரசிங்கவின் மனைவி **திலகவதி சமரசிங்க.** இவர்கள் இருவருமே தேர்தலில் தோல்வியடைந்தனர். இத்தொகுதியில் ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்ட டீ.பி.இலங்கரத்ன 3363 மேலதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றார்.

1967 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதி பெல்மடுல்ல தொகுதியில் மீண்டும் போட்டியிட்ட ***சீதா மொலமூரே செனவிரத்ன*** 2785 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

1967ம் ஆண்டு யூலை 13ம் திகதி நீர்கொழும்பு தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்ட ***திருமதி.எச்.ஜி.சத்தார்*** 1037 வாக்குகளை மட்டுமே பெற்று தோல்வியடைந்தார்.

# உறவு முறை செல்வாக்கைப் பயன்படுத்தி அரசியலுக்கு வந்த பெண்கள் நிறைந்த பாராளுமன்றம்

## இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள் – 13

என். சரவணன்

### இடைத்தேர்தல் சாதனை

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் அதிக தேர்தல் முறைப்பாடுகள் செய்யப்பட்டது 1965 தேர்தலின் பின்னரேயே. 6வது பாராளுமன்ற காலப்பகுதியில் மொத்தம் 42 தேர்தல் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இம்முறைப்பாடுகளில் 12 முறைப்பாடுகள் தொடர்பாக 12 இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டிருந்தன.

1966 ஒக்டோபர் 24ம் திகதி பலங்கொட தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்லில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கிளிபர்ட் ரத்வத்தவின் மனைவி ***'மல்லிகா எல்லாவல'*** ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 1740 அதிகப்படியான வாக்குகள்ளைப் பெற்று வெற்றியடைந்தார்.

அதேபோல் 1967 ஜனவரி 15ம் திகதி தொடங்கஸ்லந்த தொகுதியில் இடம் பெற்ற இடைத்தேர்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.ஆர்.டபிள்யூ.ராஜபக்ஷவின் மனைவி ***லடீஷியா ராஜபக்ஷ*** ஸ்ரீ.ல.சு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றியடைந்தார். இவர், தன்னுடன் ஐ.தே.க சார்பில் போட்டியிட்ட 'அலவத்துவல' என்பவரைவிட 393 மேலதிக வாக்குகளைப் பெற்றிருந்தார்.

1967 பெப்ரவரி 28ம் திகதி கொலன்னாவ தொகுதியில் நடத்தப்பட்ட இடைத்தேர்தலில் போட்டியிட்ட மூவரில் இருவர் பெண்கள்.

### திருமதி சொய்ஸா

திருமதி எட்லின் டி சொய்ஸா 1958 இலேயே மேற்சபைக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார். இவர் 1963 வரை இதில் அங்கம் வகித்தார். அத்துடன் 1958இல் சமூக சேவைகளுக்கான எலிஸ் கொத்தலாவல தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டவர். இவர் ஒன்றிணைந்த உலகப் பெண்கள் சம்மேளத்தினத்திலும் 1957 இல் அங்கத்துவம் பெற்றார். இவர் சிறுவர் மற்றும் பெண்களின் நலன் பேணும் நடவடிக்கைகளுக்காக தனது சொத்தில் பெருமளவு தொகையை செலவு செய்தவர் எனச் சொல்லப்படுகிறது.

இலங்கை, 1972 ல் சுதந்திர குடியரசு நாடாக ஆவதற்கு முதலே மேற்சபை என அழைக்கப்பட்ட செனட் சபை 1970ல் ஐக்கிய முன்னணி அரசால் கலைக்கப்பட்டது. அப்போது பாராளுமன்ற உறுப்பினர்களாக மேலும் இரு பெண்கள் காணப்பட்டனர். ஒருவர் 1954 இலேயே தெரிவு செய்யப்பட்ட திருமதி கிளோடா கிட்சிலான் ஜயசூரிய. அடுத்தவர் 1967ல் நியமிக்கப்பட்ட திருமதி சீதா மொலமூரே செனவிரத்ன. இவர் இலங்கை பாராளுமன்றத்தில் முதற்பெண் உறுப்பினரான எட்லின் மொலமூரேவின் மகளாவார். இவர் 1967ல் மேற்சபைக்கு நியமிக்கப்பட்டு 1970 வரை அங்கம் வகித்தார். சிறுவர் மற்றும் இளைஞர் நலன் பேண் சங்கத்தின் தேசிய சபையின் தலைவராகவும், மஹிலா சமித்தி, இளம் கிறிஸ்தவ பெண்கள் சங்கம் என்பவற்றில் முக்கிய பதவிகளையும் வகித்து செயற்பட்டவர் இவர். 1989ல் தேசபந்து விருது பெற்ற சீதா செனவிரத்ன. அவரது கணவர் எல்.ஜே.டி.எஸ்.செனவிரத்ன தலைவராக இருந்த பொதுச் சேவைகள் ஆணைக்குழுவில் உறுப்பினராகவும் இருந்தார்.



எட்லின் மெலமூரே

***திருமதி. கிளோடா ஜயசூரிய*** அவிஸ்ஸாவெல தொகுதியில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பர்னாட் ஜயசூரியவின் மனைவி. 1952 பொதுத்தேர்தலின் போது அவிஸ்ஸாவெல தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு 929 வாக்குகளால் தோல்வியடைந்தார். 1956ல் மீண்டும் அத்தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். ஐக்கிய தேசியக் கட்சியின் பெண்கள் சம்மேளனத்தின் தலைவியாக பதவி வகித்து தொழிற்பட்ட இவர் பின்னாளில் மேற்சபை உறுப்பினரான எம்.டீ.கிச்சிலான் அவர்களை திருமணம் புரிந்தார்.

வரும்...



மல்லிகா ரத்வத்த

**இவர், திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் மைத்துனி என்பது குறிப்பிடத்தக்கது.**


**சப்பிரகமுவா மாகாணத்தில் பிரபல்யமான புள்ளிகளில் ஒருவரான 'எல்லாவல'வின் மகளான இவர் இரத்தினபுரி பர்கியுஷன் பெண்கள் பாடசாலை, மற்றும் கொழும்பு சென் பிரிஜட் கன்னியர் மடத்திலும் கல்வி கற்ற மல்லிகா பாடசாலை வாழ்க்கையிலிருந்து வெளியேறிய பின் 'லலித கலா நிறுவனம்' எனும் நிறுவனத்தில் ஆசிரியையாக சேவை புரிந்தார்.**

**திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் சகோதரரான கிளிபர்ட் சேனக ரத்வத்தவை விவாகம் செய்த மல்லிகா திருமணத்தின் பின் அரசியல் மற்றும் பொதுவேலைகளில் ஈடுபடத்தொடங்கினார்.**

**1966 இடைத்தேர்தலில் 1740 வாக்குகளால் வெற்றி பெற்று பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மல்லிகா 1970ம் ஆண்டு பொதுத்தேர்தலின் போது, ஐ.தே.க.வின் சார்பில் போட்டியிட்ட சீதா மொலமூரே செனவிரத்னவை தோற்கடித்து 7189 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று மீண்டும் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டார்.**

**1977 பொதுத்தேர்தலின் போது பலங்கொட தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்ததன் பின்னர் வேறு தேர்தல்களில் இவர் போட்டியிடவில்லை.**

**சிறிமாவோ பண்டாரநாயக்க முதல் பெண் பிரதமராக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டு செனட் சபையின் உறுப்பினராகவும் நியமிக்கப்பட்ட போது செனட் சபையில் பிரதித்தலைவராக ஒரு பெண், பதவி வகிக்கக் காணப்பட்டார். அவர் திருமதி எட்லின் மொலமூரே. வரலாற்றில் இப்பதவி வகித்த ஒரே பெண் இவர். இவர் இலங்கை பாராளுமன்றத்தின் முதற்பெண் என்பதும் குறிப்பிடத்தக்கது. செனற் சபைக்கு தெரிவு செய்யப்பட்ட முதற் பெண்ணும் இவரே என்பது குறிப்பிடத்தக்கது. அதே வேளை மேற்சபையில் இன்னொரு பெண்ணும் அங்கம் வகித்தார். அவர் திருமதி.ஏ.எல்வின் டி சொய்ஸா. இவர் பிரபல பணக்காரர்களில் ஒருவரான சேர் வில்பர்ட் டி சொய்ஸாவின் மனைவியாவார். இவர் சமூக சேவை மற்றும் பெண்கள் அமைப்புக்கள் பலவற்றில் முக்கிய பதவிகள் வகித்து வந்தார்.**



லடீஷியா

**தொடங்கஸ்லந்த தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட லடீஷியா ராஜபக்ஷ கிராண்ட்பாஸ் புனித யோசப் கன்னியர் மடத்தில் கல்வி கற்றவர். மேலும் மஹிலா சமித்தி இயக்கம் போன்ற அமைப்புக்களிலும் சேர்ந்து இயங்கியவர். இலங்கை வரலாற்றிலேயே ஞாயிற்றுக் கிழமை நாளில் நடத்தப்பட்ட ஒரேயொரு இடைத்தேர்தல் இந்த தொடங்கஸ்லந்த இடைத்தேர்தல் என்பதும் குறிப்பிடத்தக்கது.**

### 1966 – 10 – 24 பலங்கொட தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| திருமதி மல்லிகா ரத்வத்த | SLFP | 14471 |
| எம்.எல்.எம். அபுசாலி | UNP | 12731 |
| என். பியதாச | I | 338 |

### 1967 – 1 – 15 தொடங்கஸ்லந்த தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| திருமதி லடீசியா ராஜபக்ஷ | SLFP | 14164 |
| எஸ்.டபிள்யு.அலவத்துவல | UNP | 13771 |
| எம்.டீ. சமரபால | I | 178 |

### 1967 – 2 – 28 கொலன்னாவ தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| திருமதி குசும்சிறி குணவர்தன | MEP | 14462 |
| டீ.பீ. இலங்கரத்ன | SLFP | 17825 |
| திருமதி சமரசிங்க | I | 380 |

### 1967 – 10 – 20 பெல்மடுல்ல தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| டபிள்யு.ஏ. தர்மதாச | SLFP | 12627 |
| திருமதி சீதா மொலமுரே செனவிரத்ன | UNP | 9842 |

### 1967 – 7 – 13 நீர்கொழும்பு தொகுதி இடைத்தேர்தல்

| | | |
|---|---|---|
| எஸ்.திசாநாயக்க | SLFP | 11463 |
| டென்சில் பெர்ணான்டோ | UNP | 18751 |
| ஜெஸ்டின் பெர்ணான்டோ | I | 1929 |
| திருமதி எச்.ஜி. சத்தார் | I | 1037 |
| பெட்ரிக் மிரால் | I | 389 |
| துரின் பெர்ணான்டோ | I | 207 |

SLFP- Sri Lanka Freedom party
UNP-United National Party
MEP-Mahajana Eksath Peramuna
I- Independent

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கிழக்கில் இனவிகிதாசாரம் மாற்றமடைந்தது எப்படி?

தம்பிப்பிள்ளை தேவராஜ்


(சென்ற இதழின் தொடர்ச்சி)

## மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டம்

கிழக்கு மாகாணம் 1961ம் ஆண்டின் முன்னர் திருகோணமலை, மட்டக்களப்பு என்ற இரண்டு மாவட்டங்களைக் கொண்டதாக காணப்பட்டது. இக்காலப் பகுதிகளில் மட்டக்களப்பு மாவட்டம் பெரும் நிலப்பரப்பினைக் கொண்டதாக காணப்பட்டதுடன் மாவட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் ஆதிக்கமே காணப்பட்டது. இவ்வேளையில் சிங்களவர்களின் தொகை மிகவும் குறைந்ததாகவே காணப்பட்டது. 1827இல் மேற்கொள்ளப்பட்ட சனத்தொகைக் கணிப்பீடுகளின் படி மாவட்டத்தின் சனப்பரம்பலினை அவதானிக்கின்ற போது தமிழர்கள் 69.5 வீதம் எனவும், முஸ்லிம்கள் 30.2வீதமாகவும் காணப்பட்டனர். அப்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓரிரு சிங்களவர்களே காணப்பட்டனர். இந்தக் கணிப்பீடுகளின் பின்னர் சனத்தொகைப் பரம்பலில் படிப்படியான்மாற்றங்கள் ஏற்பட்டு 1901ம் ஆண்டில் தமிழர்கள் 55.0வீதமாகவும், முஸ்லிம்கள் 37.3 வீதமாகவும், சிங்களவர்கள்5.2வீதமாகவும் காணப்பட்டனர். 1921ம் ஆண்டின் சனத்தொகை மதிப்பீடுகளின்படி தமிழர்கள் 53.3வீதமாகவும், முஸ்லிம்கள் 39.8வீதமாகவும், சிங்களவர்கள் 4.6வீதம் என்ற விகிதங்களில் பரந்து காணப்பட்டனர். 1946ம் ஆண்டைய கணிப்பீடுகளின்படி தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்களின் தொகையானது முறையே 50.3வீதம், 42.2வீதம், 5.8வீதம் என்ற அளவுகளில் காணப்பட்டது. இதுவரை காலமும் மேற்கொள்ளப்பட்ட குடிசனப் பரம்பல் மதிப்பீடுகளின்படி மாவட்டத்தின் சனத்தொகை மாற்றத்தினை அவதானிக்கும் போது முஸ்லிம்களின் தொகை படிப்படியாக அதிகரித்து வந்ததுள்ளதுடன், தமிழர்களின் விகிதாசாரம் வீழ்ச்சியடைந்து போகும் நிலையினைக் காணலாம். இவ்வேளையில் சிங்களவர்களின் தொகையில் ஒரு மெதுவான அதிகரிப்பு அவதானிக்கப்படுகிறது.

ஆனால் 1953ம் ஆண்டைய சனத்தொகை மதிப்பீட்டினை அவதானிக்கும் போது மட்டக்களப்பு மாவட்டத்தின் குடித்தொகை பரம்பலில் ஒரு சடுதியான மாற்றத்தினை அவதானிக்க முடியும். இந்தக் கணிப்பீடுகளின்படி மாவட்டத்தில் தமிழர்கள் 48.2வீதமாகவும், முஸ்லிம்கள்39.4வீதமாகவும், சிங்களவர்கள் 11.5 வீதமாகவும் காணப்பட்டனர். இதன்படி தமிழர்களினதும், முஸ்லிம்களினதும், இன ரீதியான விகிதாசாரம் சரியத் தொடங்கும் அதே வேளை சிங்களவர்களின் பங்கு ஒரு திடீர் அதிகரிப்பினை வெளிக்காட்டி நிற்கின்றது. இதற்கு காரணம் சிங்களவர்கள் மாவட்டத்தின் தெற்குப் பிரதேசங்களில் குடியேற்றப்பட்டமையாகும். அதாவது 1953ம் ஆண்டைய கணிப்பீட்டினை மேற்கொள்வதற்கு முன்னராகவே சேனநாயக்காவின் அரசாங்கம் பெரும் குடியேற்றத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தது. கல்லோயாக் குடியேற்றத்திட்டமும் அதன் மூலமாக தென்னிலங்கைச் சிங்களவர்கள் அதிகளவில் குடியேற்றப்பட்டமை, தீகவாபி புனிதப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் என்பன போன்ற பாரிய குடியேற்றத்திட்டங்களின் மூலம் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பகுதி சிங்களவர்களால் நிரப்பப்பட்டது. இந்த நடவடிக்கையினைத் தொடர்ந்து

வரைபு – 2 அம்பாறை மாவட்டம்




கிழக்கு மாகாணத்தின் மூன்றாவது மாவட்டமான அம்பாறை மாவட்டம் 1961.04.10 திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தின் உருவாக்கத்துடன் இரு மாவட்டங்களுக்குமான சனத்தொகை மதிப்பீடுகள் வேறாகவே மேற்கொள்ளப்பட்டது. இந்த அடிப்படையில் நோக்குகின்ற போது மட்டக்களப்பு மாவட்டத்தில் 1963ம் ஆண்டைய மதிப்பீடுகளின் படி தமிழர்கள் 72.2வீதமாகவும், முஸ்லிம்கள் 23.4வீதமாகவும், சிங்களவர்கள் 3.4வீதமாகவும் காணப்பட்டனர். இது முறையே 1971இல் 70.7வீதம், 24.0வீதம், 4.5வீதம் என்ற அளவிலும், 1981ம் ஆண்டுளில் இடம் பெற்ற கணக்கெடுப்பில் 72.2வீதம், 24.0வீதம், 3.2வீதம் எனும் அளவுகளைப் பெற்றுக் கொண்டது. இந்தக் காலப் பகுதிகளில் சிங்களவர்களின் தொகையில் பாரிய மாற்றத்தினைக் காணமுடியாவிட்டாலும், 1981இன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தின் வட திசையில் பாரியளவில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். எதிர் காலத்தில் இன்னொரு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டால் அது மாவட்டதின் சனத்தொகையில் பாரிய மாற்றங்களையே வெளிக்காட்டும். அதாவது மாவட்டத்தின் மொத்த சனத் தொகையில் சிங்களவர்கள், கணிசமான பங்கினை வகிக்கப்போகின்றனர். இதுஎதிர்காலத்தில், அதாவது ஏற்கெனவே மாவட்டத்தின் தென் பகுதி பறிபோனதைப் போன்று வடதிசையில் உள்ள பிரதேசமும் புதிதாக ஒரு மாவட்டம் உருவாக்கப்படுவதுடன் அது சிங்களவர்களின் மாவட்டமாக உருவாகலாம். இதற்கான ஒரு ஆரம்ப தயாரிப்பாகவே வடமுனை போன்ற பிரதேசங்களில் இன்று தீவிரமடைந்துள்ள சிங்களவர்களின் குடியேற்றங்கள் கட்டியம் கூறுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பலில் ஏற்பட்டு வந்துள்ள மாற்றங்களை அட்டவணை 2 மூலமாக விளங்கிக் கொள்ள முடியும்.

அட்டவணை 2
குடித்தொகை (விகிதாசாரத்தில்) – மட்டக்களப்பு மாவட்டம்

| ஆண்டு | தமிழர் | முஸ்லிம்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|
| 1827 | 69.5 | 30.2 | —— |
| 1901 | 55.0 | 37.3 | 5.2 |
| 1921 | 53.3 | 39.8 | 4.6 |
| 1946 | 50.3 | 42.2 | 5.8 |
| 1953 | 48.2 | 39.4 | 11.5 |
| 1963 | 72.2 | 23.4 | 3.4 |
| 1971 | 70.7 | 24.0 | 4.5 |
| 1981 | 72.0 | 24.0 | 3.2 |

அட்டவணையினை நோக்குகின்ற போது 1963ம் ஆண்டு கணிப்பீடுகளின் பின்னரான காலப்பகுதிகளில் தமிழர்களின் விகிதாசாரத்தில் ஒரு அதிகரிப்பு காணப்படுகின்றது. இது எவ்வகையிலும் ஒரு வளர்ச்சி படியினைச் சுட்டவதாக கொள்ள முடியாது. மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து அம்பாறை பிரித்தெடுக்கப்பட்டு தனியான மாவடடமாக உருவாக்கப்பட்டதன் ஒரு வெளிப்பாடே இந்த அதிகரிப்புக்கான காரணமாகும். இதுபோலவே முஸ்லிம்களினதும், சிங்களவர்களினதும் விகிதாசார ரீதியில் ஒரு வீழ்ச்சி நிலைக்கும் இதுவே காரணமாக அமைகிறது.

அம்பாறை மாவட்டத்தினைப் பொறுத்த வரை அது இன்று முழுமையான சிங்கள மாவட்டமாக மாறும் நிலையினை அடைந்து விட்டது. 1963ம் ஆண்டைய சனத்தொகைக் கணிப்பீடுகளின்படி அம்பாறை மாவட்டத்தின் சனத்தொகைப் பரம்பலினை அவதானித்தால் தமிழர்கள் 23.8வீதம் என்ற அளவினைப் பெற்று மூன்றாவது இனக்குழுவாக மாற்றப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் 46.5வீதமாகவும், சிங்களவர்கள் 29.4 வீதம் எனும் அளவினையும் பெற்றுள்ளனர். 1971யில் தமிழர்கள் 22.8வீதமாகவும், முஸ்லிம்கள் 46.6வீதமாகவும் சிங்களவர்கள் 30.2 வீதமாகவும் காணப்பட்டனர். இறுதியாக 1981இல் நடைபெற்ற கணிப்பீடுகளின்படி தமிழர்கள் 19.9 வீதமாகவும், முஸ்லிம்கள் 41.5 வீதமாகவும், சிங்களவாகள் 37.6 வீத அளவினையும் பெற்றுக் காணப்படுகின்றனர். இங்கு தமிழர்களினதும், முஸ்லிம்களகளினதும் விகிதாசார ரீதியான சனத்தொகைப்பரம்பல் தொடர்ச்சியாகவே வீழ்ச்சியடைந்து போகும் அதேவேளை மாவட்டத்தில் சிங்களவர்களின் விதிதாசார ரீதியான அளவு தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லும் போக்கே காணப்படுகிறது. இதனை அட்டவணை 3 மூலமாகவும், வரைபு 2 மூலமாகவும் மேலும் தெளிவாக அவதானிக்க முடியும்.

அட்டவணை 3
குடித்தொகை (விகிதாசாரத்தில்)-அம்பாறை மாவட்டம் (1963-1981)

| ஆண்டு | தமிழர் | முஸ்லிம்கள் | சிங்களவர்கள் |
|---|---|---|---|
| 1963 | 23.8 | 46.5 | 29.4 |
| 1971 | 22.8 | 46.6 | 30.2 |
| 1981 | 19.9 | 41.5 | 37.6 |

இன்று அம்பாறை மாவட்டம் எவ்வாறு படிப்படியாக சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதனை அட்டவணையும், வரைபும் தெளிவாக விளக்குகிறது.

அம்பாறை மாவட்டத்தினைப் பொறுத்த வரை சிங்களவர்களின் தொகை கணிசமாக அளவு தொடர்ந்தும் அதிகரித்துச் செல்லுவதற்கான முக்கிய காரணியாக திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றங்கள் இருக்கின்ற அதேவேளையில், இன்னோர் வகையிலும் மாவட்டத்தில் சிங்களவர்களின் தொகையினை அதிகரிப்பதற்கான வழிமுறையினை ஆட்சியாளர்கள் கையாளுகின்றனர். அதாவது அம்பாறை மாவட்டத்துக்கு அருகில் உள்ள சிங்கள மாவட்டங்களின் சில பகுதிகளை அம்பாறையுடன் இணைப்பதன் வாயிலாக மாவட்டத்தில் சிங்களவர்களின் தொகை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் மொனராகலை மாவட்டத்திலிருந்து பதியத்தலாவையும், மகாஓயாவும் அம்பாறையுடன் இணைக்கப்பட்டது. இதன் மூலமாக மொனராகலை மாவட்டத்தின் பிரஜைகளாக இருந்த சுமார் 26,519க்கு மேற்பட்ட சிங்களவர்கள் அம்பாறை மாவட்டத்தின் பிரஜைகளாக்கப்பட்டனர். இது சிங்கள மயமாக்கல் கொள்கையின் இன்னோர் வழிமுறையாகும்.

எனவே தமிழ் பேசும் மக்களின் அதிலும் முஸ்லிம்களின் தாயகம் எனக் கூறப்படும் அம்பாறை மாவட்டம் இன்று சிங்களடவர்களிடம் தொடர்ந்தும் பறிபோய்க் கொண்டிருக்கின்றது. இந்த நடவடிக்கை தொடர்ந்தும் இடம் பெறுமானால் அங்கு தமிழ் பேசும் இனம் இல்லாது மறைந்து போகும் அபாயமே எதிர்காலத்தில் உருவாகக் கூடும்.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களையும் உள்ளடக்கியதான கிழக்கு மாகாணம் திட்டமிட்ட சிங்களவர்களின் குடியேற்றங்களின் மூலமாக இனரீதியான பரம்பலில் எத்தகையமாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது என்பதனை மாகாணரீதியாக ஒரே பார்வையில் ஒரே பார்வையில் நோக்குகின்றபோது 1827ம் ஆண்டு தமிழர்கள் மாகாணத்தில் 34,758 என்ற தொகையளவிலும், முஸ்லிம்கள் 11,533 ஆகவும், சிங்களவர்கள் 250 என்ற அளவினை மட்டும் கொண்டு காணப்பட்டனர். விகிதாசார ரீதியில் இது முறையே 75.65 வீதம், 23.55 வீதம், 1.3வீதம் என்ற அளவுகளில் காணப்பட்டது. இத்தகைய குடிசனப் பரம்பல் சிங்களக் குடியேற்றங்களின் மூலம் படிப்படியாக மாற்றமடைந்து வந்து இறுதியாக 1981ம் ஆண்டைய மதிப்பீடுகளின்படி தமிழர்கள் 4,09,451 என்ற தொகையளவினையும், முஸ்லிம்கள் 3,15,201 ஆகவும், சிங்களவர்கள் 2,43,358 என்ற அளவிலும் இன்று கிழக்கு மாகாணத்தில் குடிகளாக காணப்படுகின்றனர். விகிதாசார ரீதியில் இதனை நோக்கும் போது தமிழர்கள் 41.9 வீதமாகவும், முஸ்லிம்கள் 32.2வீதமாகவும், சிங்களவர்கள்24.9 வீதம் என்ற அளவுகளைப் பெற்றுள்ளனர். இதனை அட்டவணை 4 மூலமாகவும் வரைபு 3மூலமாகவும் தெளிவாக விளங்கிக் கொள்ள முடியும்


சிங்களப் பிரதேசங்களில் போதியளவு நிலங்கள் இருந்தும் தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் சிங்களப்பேரினவாத அரசாங்கங்கள் சிங்களவர்களினை குடியேற்ற முனைந்தது தமிழ் பேசும் சிறுபான்மை இனங்கள் குடித் தொகைப் பரம்பலினை சிதைத்து, அவர்களின் சொந்த மண்ணிலேயே அவர்களை சிறுபான்மையினராக்கி

—▷15

அட்டவணை – 4 கிழக்கு மாகாணத்தின் சனத்தொகை (1827 – 1981)

| ஆண்டு | சிங்களவர் | % | தமிழர் | % | முஸ்லிம்கள் | % |
|---|---|---|---|---|---|---|
| 1827 | 250 | 1.3 | 34,758 | 75.65 | 11,533 | 23.55 |
| 1881 | 5,947 | 4.5 | 75,408 | 61.35 | 43,001 | 30.65 |
| 1891 | 7,512 | 4.75 | 87,701 | 61.55 | 51,206 | 30.75 |
| 1901 | 8,778 | 4.7 | 96,926 | 57.5 | 62,448 | 33.15 |
| 1911 | 6,906 | 3.75 | 1,01,181 | 56.2 | 70,409 | 36.0 |
| 1921 | 8,744 | 4.5 | 1,03,551 | 53.5 | 75,992 | 39.4 |
| 1946 | 23,456 | 8.4 | 1,46,059 | 52.3 | 1,09,024 | 39.1 |
| 1953 | 46,470 | 13.1 | 1,67,898 | 47.3 | 1,35,322 | 38.1 |
| 1963 | 1,09,690 | 20.1 | 2,46,120 | 45.1 | 1,85,750 | 34.0 |
| 1971 | 1,48,572 | 20.7 | 3,15,560 | 43.9 | 2,48,567 | 34.6 |
| 1981 | 2,43,358 | 24.9 | 4,09,451 | 41.9 | 3,15,201 | 32.2 |

வரைபு – 3 கிழக்கு மாகாணம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"சிங்கள மக்கள் மத்தியில் செறிந்து வாழும் தமிழ் மக்களுக்கு சரியான பாதுகாப்பில்லை. ஒருகொடவத்தை, கொலன்னாவை சம்பவத்தோடு இனவாதம் மேலும் அதிகரித்திருக்கிறது. கொழும்பில் பரவலாக வாழும் தமிழ் மக்களுக்கு எந்தநேரமும் எதுவும் நடக்கலாம் எனும் நிலை. நாங்கள் கூட இந்த நேரத்தில் சமாதானம் பற்றி கதைக்க முடியாத நிலை! இது தணியும் வரை கொழும்பில் வாழும் தமிழ் மக்களை ஒரே இடத்துக்கு கொண்டு வந்து இருக்கச் செய்தால் என்ன?'' இப்படி சமாதான இயக்கமொன்றைச் சேர்ந்த சிங்கள நண்பர் கேள்வியெழுப்பினார்.

தமிழ் மக்களை ஒரே இடத்துக்கு கொண்டு வந்து குவித்தால் பிரச்சினை தீர்ந்து விடுமா? எவ்வளவு காலத்துக்கு அப்படியிருப்பது? இனவாதம் எப்போது தணியுமாம்? தணிவதற்கு எவை காரணியாக தொழிற்படும்? அவர்களது இனவாத மனோநிலை கருத்தியலை அகற்றிவிட ஆளும் சிங்கள வர்க்கத்தால் என்ன செய்து விட முடியும்? இப்படி பல கேள்விகளை எழுப்ப விரும்பினாலும் பயன் என்ன?

''நிலைமை மிகவும் மோசமாக இருக்கிறது. வடக்கில் இப்போது நடத்தும் ஒபரேஷனுடன் வாரத்தில் பிரச்சினையைத் தீர்த்து விடுவதாகவும் இம்முறை பிரபாகரனின் தலையைக் கொண்டு வருவதாகவும் அமைச்சர் உறுதி பூண்டுள்ளாராம். அது மட்டுமல்ல இன்னும் இரண்டு வாரத்தில் கொழும்பில் ஊரடங்குச் சட்டத்தையும் பிறப்பித்து STF இனரையும், அரசாங்கத்தின் உத்தயோக பூர்வ மற்ற ஆயுதப்படையினரையும் பயன்படுத்தி பெரும் தேடுதல் வேட்டை நடத்தி தமிழர்கள் மீது அட்டகாசம் புரியவிருப்பதாக எமக்கு செய்தி கிடைத்திருக்கிறது. நீ மிகவும் கவனமாக இரு. ஏதேனும் என்றால் எங்களுக்கு உடனேயே அறிவி. முடிந்தால் சில வாரங்களுக்கு கொழும்புக்கு வெளியே போய் குடும்பத்தோடு இரு''

இப்படி இடதுசாரி இயக்கமொன்றைச் சேர்ந்த ஒரு சிங்கள நண்பர் ஆலோசனை வழங்கினார். நண்பர்கள் என்கிற ரீதியில் இன்னொருவரின் பாதுகாப்பைப் பற்றி இவர்கள் பதறிய போதும் ஏனைய தமிழ் மக்களின் நிரந்தர பாதுகாப்புக்கான வழி என்ன? சரி, கொழும்புக்கு வெளியே மட்டும் சில காலம் இருந்தால் மட்டும் சரியா? ஒரு பக்கம் சிங்கள இனவாதத்திலிருந்து பாதுகாக்கவும், இன்னொரு பக்கம் அரச பயங்கரவாதத்திலிருந்து பாதுகாக்கவும் சொல்லும் வழிகள் அனைத்தும் தமிழ் மக்களின் நிரந்தரப் பீதியை போக்குவனவாக இல்லையே!

இந்த இனவாத கருத்தியலை தகர்ப்பதற்கு இதுவரை எந்த சிங்கள ஆட்சியாளர்களும் இதய சுத்தியுடனான முயற்சிகள் எதையும் செய்து வந்ததில்லை என்பதே உண்மை. மாறாக அதனை தூண்டினாலே ஒழிய.


இந்நிலையில் ஐ.நா.வின் 50வது வருட பூர்த்தி விழாவின் போது உரையாற்றிய இலங்கை ஜனாதிபதி இப்படித் தெரிவிக்கிறார். ''இது நாங்கள் தொடங்கிய யுத்தமல்ல. யுத்தம் செய்ய தூண்டப்பட்டோம்.. 1983 கலவரம் இனவாத நோக்கில் செய்யப்படவில்லை. அது, சில கொள்ளையடிப்புத் தேவைக்காகவும் அரசியற் தேவைகளுக்காகவும் சில விஷமிகளால் செய்யப்பட்ட ஒன்று. இன்றும் சிங்கள மக்களிடம் இனவாதமில்லை. இனியும் அப்படியான சம்பவங்கள் நடக்காது''

ஜனாதிபதி அங்கு அப்படி உரையாற்றிக் கொண்டிருக்கும் போதே கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் தமிழ் மக்கள் பலர் இனவாத கோரப்பசிக்கு ஆளாகிவிட்டிருந்தனர். சிலர் கோரமாகக் கொல்லப்பட்டும், தாக்குதலுக்கு பலர் இலக்காகியும், பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டும், பலர் கைது செய்யப்பட்டும், இருக்குமிடங்களிலிருந்து துரத்தப்பட்ட சம்பவங்களும் ஏராளமாக நடந்து முடிந்திருந்தன. நடந்து கொண்டிருந்தன. அப்படி இருக்கின்ற போதும் இனவாதத்தை புதிய அரசாங்கம் களையெடுத்து விட்டது என சொல்லிக் கொண்டேயிருக்கட்டும்!

நடந்த சம்பவங்கள் ஏராளம் என்றபோதும் அவையொன்றுமே வெளியிடப்படவில்லை என்பது வேதனையான உண்மை. அரச படையினரால் வடக்கில் 'நாகர் கோவில்' இல் தமிழ் மக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தை வெளியிட அரச தணிக்கை விடாது. ஆனால் எல்லைக் கிராமங்களில் நடக்கும் படுகொலைகளை அரசாங்கமே மாநாடு கூட்டி அறிவிக்கும். இனவாத மனோநிலையைத் தூண்டும். கொழும்பில் நடந்த சம்பவங்களை தமிழ் பத்திரிகைகள் கூட வெளியிடாதது சோகமான உண்மை. ஒரு தேசியப்(!) பத்திரிகை ஓரிரு வரிகளில் ஒரு சில சம்பவங்களை சொல்லி முடித்தது. எனவே இவை கட்டாயம் பதிவு பெறவேண்டும் என்ற நோக்கில் முடிந்தளவு செய்த முயற்சியின் விளைவே இது.

## வனாத்தமுல்லை இரு படுகொலைகள்

வனாத்தமுல்லை பகுதியில் இரு இளைஞர்கள் மிகக் கோரமாக சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்களது கதை இது. இவர்களுக்கு வட கிழக்கு என்ன நிறமென்பது கூட தெரியாத தோட்டப்புற இளைஞர்கள். ஊர் நாவலப்பிட்டி. கொழும்பில் ஐந்து வருடங்களாக தொழில் புரிந்தார்கள்.



ஸ்ரீகாந்த்



ஜெயகாந்த்

# கொலன்னா

கொலன்னாவை எண்ணெய் குதம் ஒக்டோபர் 20ம் திகதி தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த பிரதேசத்தைச் சுற்றியுள்ள பலர் தீ பரவும் அச்சத்தின் காரணமாக இடம் பெயர்ந்தனர். சிலர் மாத்திரம் அங்கேயே இருந்தனர். எண்ணெய் குதம் வெடித்த இடத்திற்கருகிலுள்ள வனாத்தமுல்லை பகுதியில் 'டம்ப்' என்றழைக்கப்படும் 43ம் இலக்க தோட்டத்திலேயே இச்சம்பவம் நடந்தது.

எண்ணெய் குதம் வெடித்த தினமான 20ம் திகதி காலை சிங்களக் காடையர் கூட்டங்கள் சில, பல்வேறு திசைகளில் வேட்டையைத் தொடங்கியது. அதிலொன்று டம்ப் தோட்டத்திற்குள்ளும் நுழைந்தது.

''கோ கொட்டி'', ''கோ தெமளு?''
(''எங்கே புலி?'' ''எங்கே தமிழர்?'')

எல்லாத் தமிழர் வீடுகளுக்குள்ளும் நுழைந்தனர். ஏறத்தாழ 500 பேருக்கும் மேற்பட்ட கூட்டமொன்று கம்பு, பொல்லுகள், வாள், கத்தி, கோடாரி, அலவாங்கு சகிதம் சென்று வீடுகள் சிலவற்றைத் தாக்கியது. சில வீடுகளுக்குள் நுழைந்து (சிங்களத்தில்) அடையாள அட்டையை எடு, 'நீ கொட்டிதானே' 'எங்கே ஆயுதங்கள்' எனக் கேட்டு அடித்தனர்.

நேரம் 10 மணி இருக்கும். வனாத்து முல்லையில் ஒரு வீட்டில் (பொரல்லை E.A.P. எதிரிசிங்கவின் ரெஸ்ரோன்ட்டில் வேலை செய்து வந்த) சகோதரர்கள் இருவரான சதாசிவம் ஸ்ரீகாந்த் (வயது 19) சதாசிவம் ஜெயகாந்தன் (வயது 23) ஆகிய இருவரும் தீபாவளிக்காக மறுநாள் ஊருக்குப் போகப்போகும் உற்சாகத்தில் இருந்தார்கள்.

ஒரு கூட்டம் கத்தி, கம்புகளோடு வந்து கொண்டிருப்பதாக தோட்டத்திற்குள் கதைத்துக் கொள்ளவே ''அண்ணா என்னிடம் ஐடென்ரிற்றி கார்ட் இல்லை நான் போய் ஒளிந்து கொள்கிறேன்'' எனக்கூறிச் சென்று கட்டிலுக்கடியில் ஒழிந்து கொண்டான். இதற்கிடையில் கூட்டம் வந்தது. வீட்டிற்குள் புகுந்த கூட்டம் ஜெயகாந்திடம் அடையாள அட்டையைக் கேட்டது. தன்னிடம் இருந்த தொழில்புரியும் நிறுவனம் வழங்கிய அடையாள அட்டை, கடிதங்கள் என்பவற்றை எடுத்துக் காட்டினான். அதைப் பறித்த ஒருவன் அவற்றை கிழித்து தூர எறிந்தான். '' நீ புலிதானே'' எனக்கேட்டு ஒருவன் அறைந்தான். தொடர்ந்து எல்லோரும் பொல்லுகளால் அடித்தனர். வீட்டில் மற்றவர் எங்கே எனக்கேட்டு தேடிய போது கட்டிலுக்கடியில் ஒழிந்திருந்த ஸ்ரீகாந்தைப் பார்த்து 'இதோ புலி' எனக் கூறி வெளியில் இழுத்தான் ஒருவன். ஒருவன் அலவாங்கினால் ஓங்கி அடித்தான் தலையில் 'அம்மா' என சத்தமிட்டுக் கொண்டு விழுந்த ஸ்ரீகாந்தையும் ஜெயகாந்தையும் கைகள் இரண்டையும் சேர்த்து பின்னால் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள். வழியில் கல்லும், மண்ணும், உடம்பைக் கிழிக்க சூழ, புலி, புலி கொல் கொல் என சத்தமிட்டுக் கொண்டு அடித்த அடிகள் மரண ஓலமாய் ஒலித்தன. இவர்களது பாட்டனார் முனிசாமியை அடித்து ஒரமாக்கியிருந்தனர்.

நேரம் 10.30. இருவரையும் வீதிக்கு இழுத்து கொண்டு வந்திருந்த போது சூழ ஆயிரக்கணக்கானோர் குழுமி நின்றனர். ஊரடங்கு சட்டம் போடப்பட்டிருந்த அந்த நேரத்திலும் கூட்டத்திற்கு குறைவில்லை. தடுத்து நிறுத்த ஒருவரும் இல்லை. ஸ்தலத்தில் பொலிசார் கூட இருந்தனர். கூட்டம் தனது பணியைத் தொடர்ந்தது. கத்தி, வாள், அலவாங்கினால் தாக்கினர். ஓலம் கேட்க அவர்களை கொன்றே போட்டனர்.

ஏற்கெனவே நிர்வாணமாக்கப்பட்டிருந்த அந்த உடல்களில் ஆணுறுப்பு வெட்டப்பட்டிருந்தது. பிணங்களின் கண்கள் தோண்டப்பட்டிருந்தது. பல இடங்களில் வெட்டுக்காயங்கள். தீப்பந்தம் கொண்டு முகம் தலை உட்பட பல இடங்களில் சுட்டனர்.

வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த தெமட்ட கொட பொலிஸார் எல்லாம் 'முடிந்த பின் 'விட்டு விடுங்கோடா' என்றனர்.

''புலியைக் கொன்று விட்ட வீரர்களாக அந்த கூட்டம் ஆரவாரித்தது. தாகம் தணியவில்லை. இறுதியாக கொல்லப்பட்ட இளைஞர்களின் பாட்டாவை இழுத்தனர். கத்தியை ஓங்கிய வேளை அந்த நேரம் பொலிஸ் வாகனத்தில் பொலிஸ் பொறுப்பதிகாரியுடன் வந்திறங்கிய பொலிஸார் அவரைக் காப்பாற்றினார்களாம். பொலிஸார் முதியவரை காப்பாற்றி விட்ட திருப்தியில் திரும்பிச் சென்றனர்.

கண்முன்னே கொலைஞர்கள் கிடைத்தும் கூட அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முற்பகல் 10.30 தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரை இரு இளைஞர்களும் சித்திரவதை செய்யப்பட்டுள்ளனர். ஊரடங்குச் சட்டம் போடப்பட்ட நிலையில் இச்சம்பவம் பொலிஸாருக்கு தெரியாமலிருக்க நியாயமில்லை. பொலிஸார் தெரிந்தும் இப்படி நடந்திருக்கிறார்கள். கொல்லப்பட்டவர்களின் பாட்டனார் அப்பு முனிசாமி இதுபற்றிக் கூறும் போது ''பொலிஸாரால் கூட அதை கட்டுப்படுத்த முடியாதளவுக்கு அந்த வெறிபிடித்த கூட்டம் நடந்து கொண்டது'' உண்மையும் அதுதான். ஆனால் இச்சம்பவங்களுக்கு காரணமும் பொலிஸார் தான் என்கிறார் கொல்லப்பட்டவர்களின் சித்தியான ரங்கன் ருக்மணி. அவர் மேலும் தெரிவிக்கும் போது '' ஏதோ ஒரு சிவில் பாதுகாப்பு என இங்கு எவரெவரையோ நியமித்திருக்கிறார்கள் அவர்கள் தான் பொலிஸார், தங்களை புலிகளை தேடும்படி கூறியிருக்கிறார்கள் என்ற சாட்டில் இப்படி செய்திருக்கின்றனர். எங்கள் பிள்ளைகளை கொன்றுவிட்டு, அதற்குப் பின் எங்கள் வீட்டையும் நாசமாக்கியிருக்கின்றனர். பெறுமதியான சாமான்கள் அனைத்தும் கொள்ளையடிக்கப்பட்டு விட்டது. வீடு இப்போது தரைமட்டமாக இருக்கிறது'' என்கிறார்.

''தீ பரவும் அச்சத்தினால் இவ்விடத்தை விட்டு பலர் இடம்பெயர்ந்தனர். அவர்களில் தீ அணைக்கப்பட்டதன் பின்னர் சிங்கள இனத்தவர் மாத்திரமே மீள குடியேற முடிந்தது. தமிழர்கள் போகாததற்குக் காரணம் அங்கு சிங்கள மக்களால் ஏற்படக்கூடிய விளைவுகளே. நாங்கள் அங்கு போகாமலிருக்கும் இத்தனை நாட்களுக்குள் பல வீடுகள் சூறையாடப்பட்டு விட்டன. சில வீடுகளின் கூரை கூட இல்லை'' என்கிறார் விஜயன் எனும் இளைஞர்.

கொல்லப்பட்ட இளைஞர்கள் தீபாவளிக்காக தைத்திருந்த புதிய ஆடைகள் அவர்களது பிரேதங்களுக்கு மட்டுமே அணிய முடிந்தது. இன்னுமொன்றுமுண்டு இளைஞர்களின் பிரேதம் பொரல்லையிலுள்ள அவர்களது உறவினர்களின் வீட்டிலேயே வைக்கப்பட்டிருந்தது. கொல்லப்பட்டவர்களின் இன்னொரு தம்பியான சதாசிவம் சிவராஜா (வயது 15) சம்பவம் பற்றி ஊரிலுள்ள பெற்றோருக்கு தகவல் கொடுப்பதற்காக சிறியதாய் ருக்மணியுடன் புறப்பட்ட போது பௌத்தாலோக மாவத்தையில் இருந்த STF குழுவினர் மறித்து விசாரித்தனர். அடையாள அட்டை இல்லாத இந்த பையனையும் அடித்து லொறியில் ஏற்றி சேட்டை கழற்றி கண்ணைக் கட்டிக் கொண்டு சென்றுள்ளனர். பையனின் சிறய தாய் எவ்வளவோ கதறியும் அவர்கள் எதனையும் பொருட்படுத்தவில்லை.



அப்பு முனிசாமி



ருக்குமணி

நேரே புல்லர்ஸ் வீதி STF முகாமுக்கு (சரிநிகர் வாசகர்கள் இம்முகாம் பற்றி ஏற்கெனவே கேள்விப்பட்டவர்கள்) கொண்டு சென்று 'எங்கே வாயைத் திற; சயனைட் எங்கே..? எங்கெங்கே ஆயுதங்கள் இருக்கின்றன சொல் எனக்கூறி முகத்தில் குத்தியிருக்கின்றனர். தனக்கு அடையாள அட்டை எடுக்க வேண்டிய வயதில்லை என்பதையும் தனது சகோதரர்கள் கொல்லப்பட்டதைக் கூறியும் கதறியழுத போது அவர்கள் துப்பாக்கியினால் தாக்கி வதை கொடுத்திருக்கின்றனர். இறுதியில் பிரேதங்களுக்காக காத்து நிற்கும் வீட்டுக்கு STF குழுவினரோடு சென்று தேடுதல் நடத்தியிருக்கின்றனர். ஒப்பாரி வீடாக வேதனையின் உச்சத்தில் காட்சியளித்த அந்த வீட்டில், இருக்கின்ற பொருட்களையெல்லாம் இழுத்துப் புரட்டிப் போட்டுவிட்டுப் போயுள்ளனர்.

''உண்மையை கூறாவிட்டால் உனது அண்ணர்கள் போன இடத்துக்கே உன்னையும் அனுப்புவோம். தமிழர்களுகெல்லாம் இது தான் கதி'' என்பது போன்ற வார்த்தைகளையெல்லாம் அவர்கள் பிரயோகித்ததாக சிவராஜா கூறினார்.

இறுதியில் யோகராஜன் எம்.பி.தலையிட்டு

அவரது பிலை...
வித்ததாக வீட்...


பாலத்...

மேற்படி சம்ப...
றையிலும் திரு...
எனும் இளைஞ...
டார். இவரும்...
ஊர் அக்கரை...
கடந்த 5 வருட...
டல் வீதியில் ப...
வரின் சில்லறை...
வந்தவர்.

20ம் திகதி கு...
அடுத்த நாளா...
ளவில் கடைக்...
காக பாலத்து...
கர்ணன். சைக்...
பொருட்கள் வ...
''புலி.. புலி...

கொல்..'' என...
கூட்டம் ஓடிவ...
ஓடி வருபவர்...
னும் ஓடியி...
அதிகரித்திருந்...
கள் சகிதம் வி...
சூழ்நிலையில்...
திக் கொள்ள சி...
ருக்காது போல...
தாண்டி மாதம்...
னார். பெரும்...
முன்னாள் ஏ...
ஆயத்தமாக இ...
ருந்த 'ஸ்ரீ .சங்...
பாடசாலை மதி...
கும் முன்னமே...
பட்டுக் கொண்...
இந்த இளைஞ...
பட்டிருக்கின்ற...
தாக்கியதில் இ...
னின் உடல் மி...
ருக்கிறது.
''அதை எ...

வில்லை. தலை...
தள்ளிக் கொ...
கூட வெட்டி...
வெட்டுக் காயா...
தன. வாய் கி...
கூடத்தில் அ...
வைத்தியர் 17...
பதாக பதிவு செ...



## சிவில் பாதுகாப்பு

**கொழும்பில் நடந்த இப்படிப்பட்ட பல சம்பவங்களுக்கு அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புக்குழுவே காரணம் என்பது பலரது அபிப்பிராயம்.**

**கடந்த மே, யூன் மாதங்களில் விழிப்புக் குழு (Vegelent Committee) எனும் குழுக்களை பொலிஸ் பிரிவு மட்டத்தில் ஆரம்பித்தது அரசு. இந்த விழிப்புக்குழுவில் அந்த பிரதேசத்திலுள்ள சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களையும் சண்டியர்களையுமே பெரும்பாலும் நியமித்திருந்தனர் என்பது தான் உண்மை. அது மட்டுமல்ல சிங்கள இனத்தவர்களை மாத்திரமே இதற்கு நியமித்தனர். கொட்டாஞ்சேனை, கொச்சிக்கடை போன்ற தமிழ் பகுதிகளில் கூட பேருக்கு ஓரிரு தமிழர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழுவுக்கு சந்தேகத்திற்கிடமானவர்களை கண்காணிப்பது, அடையாள அட்டை பரிசோதிப்பது, சோதனை செய்வது அது பற்றி பொலிஸாருக்கு தகவல் கொடுப்பது உட்பட கைது செய்யும் அதிகாரம் கூட உத்தியோக பூர்வமற்ற முறையில் வழங்கப்பட்டுள்ளன.**

**ஆனால் இவர்கள் தங்களது சமூக விரோத நடவடிக்கைகளை தடையில்லாமல் செய்வதற்கும், தங்களது எதிரிகளைப் பழி வாங்குவதற்குமே இக்குழுவைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.**

**இவர்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் உச்ச விளைவாகக் கூட இக் கட்டுரையில் கூறப்பட்ட சம்பவங்களைச் சொல்லலாம். இச்சம்பவங்கள் இதற்கு சிறந்த ஆதாரங்கள்.**

**இதற்கிடையில் சந்திரிகா அரசாங்கம் இன்னும் புதிய குழுக்களை நியமித்திருக்கிறது. ஒன்று, குடியியல் பாதுகாப்புப் படை' (Civil Defence Force) அடுத்தது 'சமுர்த்தி படை' (Samurdhi Force).**

**ஏற்கெனவே கிராமசேவை மட்டத்தில் தங்களது கட்சி ஆதரவாளர்களை வைத்து ஆரம்பிக்கப்பட்டுள்ள சமர்த்தி இயக்கத்தவர்களையே மேற்படி நோக்கத்துக்காக அரசாங்கம் பயன்படுத்த திட்டமிட்டுள்ளது. இவர்களுக்கான 'ஆயுதப் பயிற்சி' கூட தற்போது அளிக்கப்பட்டு வருகிறது. இதில் ஒரு குழு தனது அணிவகுப்பை ஒக்டோபர் 29ம் திகதி ஹவ்லொக் வீதியிலுள்ள பொலிஸ் மைதானத்தில் நடத்தியது.**

**ஒருபுறம் சண்டியர்களைக் கொண்டும் இன்னொரு புறம் இனவாத கருத்தியல் கொண்ட தூய சிங்களவரைக் கொண்டு உருவாக்கப்படும். இத்தகைய குழுக்களுக்கு வழங்கப்படும் அதிகாரம் எதிர்காலத்தில் எங்கு போய் முடியும்?**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



...யனை விடு

...ாலை

...றே பாலத்து
... (வயது 22)
...கொல்லப்பட்
... இளைஞரே.
...ி தோட்டம்.
...ம்பு புளுமண்
...மையா என்ப
...வலை செய்து

...சம்பவத்திற்கு
...லை 9 மணிய
... வாங்குவதற்
...சென்றுள்ளார்
...வைத்துவிட்டு
...ருக்கையில்,
... அவனைக்

னரேயே அத்தனை குத்துக்களும் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார். பிணமான பின்னும் இவ்வளவு கோரத்தனம் செய்திருக்கிறார்கள் என்றால் எவ்வளவு வெறித்தனம் இருந்திருக்கும் என்கிறார்'' கடை சொந்தக்காரரான பழனியாண்டி ராமையா. மேலும் அவர் தெரிவிக்கும் போது

''சம்பவம் நடந்த அன்று சூழ உள்ளவர்கள் எனக்கு வந்து சொன்னார்கள். என்னால் நம்பமுடியவில்லை. ஆனாலும் என்ன நடந்தது என்பதை அறிவதற்காக புறப்பட ஆயத்தமான போது ஒரு கும்பல் வந்து சூழ்ந்து கொண்டு மிரட்டியது. ''இவன் தான் புலியை வைத்துக் கொண்டிருந்தவன். எங்கே உனது அடையாள அட்டையை எடு. வெளியே வா என ஆக்ரோஷமாக பாய்ந்தனர். கடைக்கு வரும் வாடிக்கையாளர்கள் தான் இறுதியில் '10 வருடமாக இவர் இங்குதான் கடை போட்டிருக்கிறார் எனக் கூறி காப்பாற்றினார்கள். நான் பையனுக்கு நடந்ததைப் பார்ப்பதற்காக முகத்துவாரம் பொலிஸ் நிலையம் சென்றேன்.

ஏனென்றால் சம்பவம் நடந்ததாகக் கூறப்பட்ட இடத்துக்கு அந்த நேரம் போகக்கூடிய சூழ்நிலை இல்லாததாலேயே பொலிஸ் நிலையம் போனேன். ஆனால் பொலிஸார் எனது முறைப்பாட்டைத் தட்டிக் கழித்தனர். ''நீ நேரில் பார்த்தாயா? அங்கே போய்ப் பார்த்துவிட்டு புகார் செய்'' என விரட்டினர். பின்னர் கொட்டாஞ்சேனை பொலிஸுக்கு சென்றேன். அவர்கள் என்னை கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையம் போகுமாறும் தாங்கள் தொலைபேசியின் மூலம் அங்கு அறிவிப்பதாகவும் கூறினர். ஆனால் நான் கிராண்ட்பாஸ் பொலிஸ் நிலையம் போன போது அப்படி எதுவும் எங்களுக்கு தெரிவிக்கப்படவில்லை என்றார்கள். இடையில் செல்லச்சாமியின் காரியாலயத்திற்கும் போனேன். அங்கும் நாளை வாருங்கள் எனக் கூறியனுப்பினார்கள். இறுதியில் பொலிஸாரிடம் மன்றாடிய பின் அவர்கள் ஒரு கான்ஸ்டபிளை அனுப்பிப் பார்த்து நிச்சயம் செய்து கொண்டதன் பின்னர்தான் பிரேத பரிசோதனைக்குக் கொண்டு சென்றனர். இதோ பாருங்கள் இந்த கவுன் தீபாளிக்காக ஊரிலுள்ள தங்கைக்கு கர்ணன் வாங்கிய உடை. அவனாலேயே அந்த ஏழை தங்கை சிறிதாவது படிக்க முடிந்தது...'' அழத் தொடங்குகிறார்.

# ...: மறுபக்கம்

...காண்டு ஒரு
...னைப் பார்த்து
...விட்டு கர்ண
... இப்போது
...திகள், கம்பி
...னோ இந்த
...யாளப்படுத்
...ப்பம் இருந்தி
... சந்தியையும்
... நோக்கி ஓடி
...ட்டு தனக்கு
...னைப் பிடிக்க
...டு சந்தியிலி
...த்தியாலயம்'
...வ முயற்சிக்
...லிடம் அகப்
...க தாக்கினர்.
...ும் வெட்டப்
...ரும் சேர்த்து
...அவ்விளைஞ
...தைக்கப்பட்டி

... வ முடிய

## ...ன்.எஸ்.குமரன்

... வெளியே
...ணுறுப்பைக்
... இடங்களில்
...கப்பட்டிருந்
...தது. பிரேத
... பரிசோதித்த
...ங்கள் இருப்
...ானதன் பின்



## மட்டக்குளி - ஸ்ரீ விக்கிரமபுர

மட்டக்குளி - ஸ்ரீ விக்கிரம புர எனும் இடத்தில் வாழ்ந்து வந்த தமிழர்களின் வீடுகளுக்குள் புகுந்த சிங்கள காடையர் கூட்டமொன்று பலரை அடித்து சித்திரவதை செய்து வீடுகளை உடைத்து, கொள்ளையடித்துச் சென்றிருக்கின்றது. இச்சம்பவத்திலும் பொலிசாரின் பங்களிப்பு அதிகமானது என்பது குறிப்பிடதக்கது. இங்கு ஏறத்தாழ 125 வீடுகள் கொள்ளையடிப்பு, வீடுடைப்புக்குள்ளாயிருக்கின்றன.

இச்சம்பவத்தில் அதிக காயங்களுக்குள்ளானவர்களில் ஒருவரான எம்.செல்வகுமார் இதுபற்றி கூறும்போது ''21ம் திகதி காலை 8.30 மணியிருக்கும் நான் கடைக்கு செல்ல வெளியே வந்த போது சமித்தி புர பக்கத்திலிருந்து ஒரு கோஷ்டி வந்தது. அவர்கள் 500 பேருக்கும் மேல் இருப்பார்கள். அவர்கள் கையில் பொல்லுகள், கத்தி கோடாரி போன்றவை காணப்பட்டன. ஏதோ அசம்பாவிதம் நடக்கப்போகிறது என்பதை உணர்ந்த நான் மீண்டும் வீட்டுக்குள் ஓடிவந்து கதவைப் பூட்டிக் கொண்டேன். ஆனால் வந்த கும்பல் கதவை திறக்கும்படி கத்தவே திறந்தேன். அடையாள அட்டையைக் காட்டச் சொல்லி அடித்தனர். வீட்டைச் சோதனை செய்வதாகக் கூறி எல்லாவற்றையும் இழுத்தனர். ''நீ புலி தானே'' எனக் கேட்டு என்னை அடித்தனர். இடையில் கதறிக் கொண்டு தடுக்க முயற்சி செய்த எனது நிறைமாத கர்ப்பிணி மனைவி ராஜேஸ்வரி (வயது 26)யையும் பெண்கள் தாக்கினர். அடிபட்டு விழுந்த என்னை அலவாங்கினால் குத்தினர். தலையில் அடித்தனர் இரத்தம் அதிகமாக ஒழுகியது. கீழே விழுந்த என்னை இழுத்துச் சென்றனர்.

போகும் வழியில் ''கொட்டியாவை பிடித்து விட்டோம்'' எனக் கத்திக் கொண்டே போனார்கள். நேரே பொலிஸுக்கு கொண்டு சென்று கொடுத்தார்கள். பொலிஸார் முன்னிலையில் என்னை அடித்துத் துன்புறுத்தி எனது ஆடைகளை கழற்றி நிர்வாணப்படுத்தினார்கள். நான் மயக்க நிலையில் இருந்தேன். எனது வாயை எல்லாம் திறக்கச் சொல்லி சயனைட் வில்லையைத் தேடினார்கள்.

பொலிஸார் சொன்னதாலேயே இவற்றைச் செய்தோம் என அந்தக் கும்பல் கூறியது. பொலிஸார் முன்னிலையில் அவர்களே கொண்டு போய் கொடுத்ததையும் எனக்கு பொலிஸார் முன்னிலையிலேயே அத்தனை கொடுமைகளையும் செய்ததைப் பார்த்தால் அவர்கள் சொன்னது உண்மை தான். பொலிஸ் நிலையத்தில் கூட ''நாட்டிலுள்ள நிலைமையின் காரணமாக இவற்றையெல்லாம் தவிர்க்க முடியாது என அந்த கும்பலுக்கு சார்பாகவே கதைத்தனர். நான் பட்ட காயங்களினால் ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்று சிகிச்சையளித்ததன் பின்னர் முகத்துவார பொலிஸாரிடம் என்னை ஒப்படைத்தனர். அங்கே என்னை விசாரித்து விட்டு விட்டனர்.

8 மாத கர்ப்பிணியான எனது மனைவி பலமாக தாக்கப்பட்டதன் காரணமாக வயிற்றில் ஏதோ சிக்கலினால் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். 3 வது நாள் என்னை கவனிப்பதற்காக தானே டிக்கட்டை வெட்டிக்கொண்டு வந்து விட்டார். எனது வீட்டில் 6 1/2 பவுண் பெறுமதியான நகை, துணிமணிகள் ரேடியோ, கடிகாரம் என பல பொருட்கள் சூறையாடப்பட்டுவிட்டன'' என்றார்.

தாக்குதலுக்குள்ளான கருப்பையா சுரேஷ்குமாரின் தந்தை சின்னையா கருப்பையா இப்படி தெரிவிக்கிறார். (இவ்விளைஞர் இந்த பகுதியில் சமூக வேலைகளில் ஈடுபட்டு வருபவர்).

''அன்று வந்த கும்பல் 'இவன் தான் முக்கியமானவன். இவன் தான் கொட்டி' எனக் கூறி உள்ளே புகுந்து அடித்து இழுத்துச் சென்றது. நாங்கள் வீட்டில் இருக்கவில்லை. வீட்டின் கதவு கூட உடைக்கப்பட்டிருந்தது. மகனை அடித்தே கூட்டிச் சென்றுள்ளனர். பொலிஸாரும் இவர்களுடன் இருந்தனர். பொலிஸில் மகன் பிரச்சினையில்லை என்று தெரிந்த பின்னர் ''யார் உம்மை அடித்தது' எனக் கேட்டதற்கு 'ஏன் நீங்களும் இருந்தீர்களே. உங்களுக்கு நன்றாக தெரியுமே என கேட்டதற்கு எதுவுமே தெரிவிக்கவில்லை. மகனை வேறு இடம் கொண்டு செல்ல இருந்த போது நாங்களும் ஊரிலிருந்து (கண்டியிலிருந்து) திரும்பியிருந்தோம். பின்னர் அருகிலுள்ள விகாரையிலுள்ள பிக்குவின் உதவியால் மகன் விடுதலை செய்யப்பட்டார். எனது மகனை அடித்து கொண்டு போகும் போதே அவனிடமிருந்த 2500/= பணத்தையும் பறித்து விட்டிருந்தனர். இங்கு நடந்த பல சம்பவங்களுக்காக பலர் பொலிஸில் இதுவரை முறையிடவில்லை. பயப்படுகிறார்கள். நாங்கள் கூட பின்னர் தான் முறைப்பாடு செய்யப் போனோம். போன போது முறைப்பாட்டை மட்டக்குளி பொலிஸார் ஏற்கவில்லை. மாறாக துண்டொன்றைக் கொடுத்து முகத்துவார பொலிஸுக்குப் போய் முறைப்பாடு செய்யச் சொன்னார்கள்''

மட்டக்குளி பொலிஸில் இத்தனை முறைப்பாடுகள் தான் ஒருநாளைக்கு எடுப்பது எனும் ஒரு வரையறை இருக்கிறதாம். கூடினால் முகத்துவாரத்துக்கு அனுப்புவார்களாம். மக்கள் எக்கேடு கெட்டாலும் இவர்கள் அக்கறைப்படுவதில்லை.

தனியாக இருந்த முத்து லஷ்மி எனும் பெண்ணின் வீட்டுக்குள் புகுந்த கோஷ்டி தேடுதல் நடத்துவதாகக் கூறி 4 1/2 பவுண் தாலி, பெறுமதியான கடிகாரம் என்பவற்றை திருடிச் சென்றுவிட்டது. இவர் தூரத்தில் கோஷ்டியைக் கண்டவுடனேயே தாலியை கழற்றி வைத்து விட்டார். ஆனாலும் அதை திற, இதை இழு, என இவரது கவனத்தைத் திசை திருப்பி விட்டே கொள்ளையடித்திருக்கின்றனர். இதைவிட இவர் பொலிஸில் முறைப்பாடு செய்திருக்கவில்லை. பயமே அதற்கு பிரதான காரணம்.


துறைமுகத்தில் Wharf Clerk ஆக தொழில் புரியும் ரி. விக்னேஸ்வரன் (வயது 26) இவர் சம்பவத் தினத்தன்று காலை வேலைக்குப் புறப்படும் போது இடையிலேயே மறித்து விரட்டி வந்திருக்கின்றனர். (இவர் தொழில்



எம்.செல்வகுமார் ராஜேஸ்வரி

காரணமாக 'செல்டெல்' போன் பயன்படுத்தி வந்ததை, இக்கும்பல் புலிகளுக்கு தகவல் கொடுப்பவன் எனக் கூறியே இவரில் குற்றம் சாட்டியிருக்கின்றது) இக்கும்பலிலும் ஆயுதம் தாங்கிய பொலிஸ்ார் இருந்திருக்கின்றனர். விரட்டி வந்த கும்பலிடமிருந்து தப்புவதற்காக விக்னேஸ்வரன் தனது வீட்டு மேல் மாடியின் மேல் ஏறவே விரட்டிச் சென்று கும்பல் அவரைப் பிடித்து அடித்து நொறுக்கி மாடியில் இருந்து தள்ளி விட்டிருக்கின்றனர். மரண வேதனையில் துடித்த போதும் அவரை நொறுக்கியிருக்கின்றனர். கும்பலில் இருந்த பொலிஸாரில் ஒருவர் ''அடித்தது போதும் கொன்று போடாதே அவனிடமிருந்து வாக்கு மூலம் எடுக்க வேண்டும்'' என அந்த நேரத்திலும் கண்ணாயிருந்திருக்கிறார்.

விக்னேஸ்வரனின் தலையில் 6 தையல்கள் போடப்பட்டுள்ளது. கால் முறிவடைந்து இன்னும் படுக்கையில் இருக்கிறார்.




### ஸ்ரீ விக்கிரமபுர

*மட்டக்குளியின் ஒரு மூலையில் இருக்கிறது இந்த ஸ்ரீ விக்கிரமபுர. மட்டக்குளி பொலிஸ் நிலையம் தாண்டி 10 மீற்றர் அளவு தூரத்தில் இடது பக்கமாகத் திரும்பிப் போக வேண்டும் இந்த இடத்துக்கு.*

*முதலில் வரும் சமித்தி புர எனும் சேரிப்பகுதியைக் கடந்தே ஸ்ரீ விக்கிரமபுர போக முடியும். 'ஸ்ரீ விக்கிரமபுர' வீடுகள் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் போன்றவை. இந்த சமித்திபுரவில் சிங்கள இனத்தவரே பெரும்பாலும் வாழ்கின்றனர். அதேபோல் ஸ்ரீ விக்கிரமபுரவில் தமிழரே பெரும்பாலும் வாழ்கின்றனர். இவ்விரு பகுதியினருக்கும் இடையில் இனரீதியாக மட்டுமல்ல வாழ்க்கை நிலைமைகளிலும் பெரும் இடை வெளியிருக்கிறது. ஸ்ரீ விக்கிரமபுரத்தவர்கள் சமித்திபுரவச் சேர்ந்தவர்களை விட வசதி படைத்தவர்கள். எனவே சமித்திபுர வாசிகளிடம் பொருளாதார ஏற்றத்தாழ்வே இனக்குரோதத்தை வளர்க்கவும் செய்துள்ளது.*

*ஸ்ரீ விக்கிரமபுரவில் இருக்கும், ஏறத்தாழ 260 வீடுகளில் 150 வீடுகளுக்கும் அதிகமானவை தமிழர்களுடையவை. சமித்திபுர பாதாள உலகம் என்றழைக்கப்படும் சமூக விரோத நடவடிக்கைகளுக்கு பேர் போனது.*

*ஸ்ரீ விக்கிரம புரவைச் சேர்ந்த தமிழர்கள் பிரதான பாதைக்கு வந்து சேர ஒரு பாதையே உள்ளது. அந்தப் பாதையால் வருவதானால் சமித்திபுரவைக் கடக்க வேண்டும். இதுவே இங்குள்ள தமிழர் மிகவும் அஞ்சுவதற்கு காரணம். சிலர் எமக்கு வாக்குமூலமளிக்க தயங்கினர். வாக்குமூலமளித்தவர்களில் சிலர் பின்னர் சரிநிகர் அலுவலகத்துக்கு தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டு தங்கள் பெயரையும், புகைப்படத்தையும் பிரசுரிக்க வேண்டாம் எனத் தெரிவித்தனர்.*

*1976 ஆம் ஆண்டில் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவின் ஆட்சியின் போது பௌத்தலோக மாவத்தையிலுள்ள பண்டாரநாயக்க சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் அணிசேரா மாநாட்டை நடத்திய போது, அதில் கலந்து கொள்பவர்களை அழைத்து வரும் வழியில் இருந்த சேரிகளை அதற்கு முன்னமேயே அகற்றி அங்கு குடியிருந்தவர்களை இந்த சமித்திபுரவில் கொண்டு வந்து குடியேற்றியிருந்தனர். அவர்களே இன்றும் இருக்கின்றனர்.*

*அதேபோல் 1983 இனக்கலவரத்தின் போது பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் இருந்தவர்களும், பின்னர் இந்தியாவுக்கு அகதிகளாகப் போனவர்களில் மீண்டும் இலங்கை வந்தவர்களும் குடியேற்றப்பட்ட பகுதிதான் ஸ்ரீ விக்கிரம புர என்பதும் குறிப்பிடத்தக்கது.*

## முன்னால் எம்.பி.துரைரட்ணத்தின் மீதான தாக்குதல்

எண்ணெய் தாங்கி தாக்கப்பட்ட 20ம் திகதியன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் (ஈரோஸ்) துரைரட்ணத்தின் குடும்பத்தார் மீது தங்களது வீரத்தை காட்ட முயற்சித்திருக்கின்றனர் சிலர். அவர் வாடகைக்கு வசித்து வரும், வத்தளையிலுள்ள வீட்டிலேயே கீழ் தளத்தில் இன்னொரு சிங்கள குடும்பம் வாடகைக்கு இருக்கிறது. அன்றைய தினம் கீழ் வீட்டுக்காரர் சிறுவர்களை விட்டு துரைரட்ணத்தின் வீட்டின் மீது கல்லெறிய தூண்டியிருக்கிறார். அதுபற்றி பேசப் போன இடத்தில் அவர் தாறுமாறாக பேசியிருக்கிறார். ''உங்களுக்கு இங்கு இடமில்லை. அங்க விடுற சேட்டையை இங்கேயும் விடவா பாக்கிறீர்கள்? உங்களுக்கெல்லாம் சரியான பாடம் படிப்பிக்கணும். தமிழன்களை இருக்க விடக் கூடாது' என்பது போன்ற வார்த்தைகள் உட்பட பலவிதமான வார்த்தைப் பிரயோகமும் செய்யப்பட்டிருக்கிறது. இது முற்றவே கத்தியைக் கொண்டு துரைரட்ணத்தின் மனைவியை குத்த முயற்சித்திருக்கிறார். தடுக்க முயற்சித்த மகன் துஷ்யந்தனை தாக்கியிருக்கிறார். இப்போது சூழ உள்ளவர்களுக்கு 'இவர்கள் புலிகள்' என பிரச்சாரம் செய்து வருகிறார் மனிதர்.

### மத்துகமயில்

'மத்துகம' பகுதியில் நியு கட்டில் தோட்டம் (New Chuttle Estate) எனும் இடத்தில் பல வீடுகள் சூறையாடப்பட்டு பலர் தாக்கப்பட்டுள்ளனர்.

ஒக். 23ம் திகதி தீபாவளி தினத்தன்று இந்த தோட்டத்தை சுற்றியுள்ள குடியிருப்புகளைச் சேர்ந்த சிங்கள காடையர் கோஷ்டியொன்று தோட்டத்திலுள்ள ஒரு கிறிஸ்தவ வீடொன்றிக்குச் சென்று ''எங்கே தீபாவளி வடை? தா!'' என கேட்டு சண்டித்தனம் புரிந்துள்ளனர். அதற்கு அவ்வீட்டைச் சேர்ந்த சந்தனம் ஜோர்ஜ் என்பவர் தாங்கள் கிறிஸ்தவர்கள் என்பதையும் தாங்கள் தீபாவளி பண்டிகை கொண்டாடுவதில்லை என்பதையும் விளக்கியும் கூட வந்திருந்த கோஷ்டி ஆத்திரத்துடன் தாக்கத் தொடங்கியுள்ளனர். மொத்தம் 22 லயன் வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

''கொழும்பில் அல்லது ஏனைய இடங்களில் அசம்பாவிதங்கள் நடக்கும் போதெல்லாம் இந்த தோட்டத்தைச் சேர்ந்த மலையகத் தமிழர்கள் தாக்கப்பட்டு வருகிறார்கள்'' என தொழிற்சங்கமொன்றைச் சேர்ந்தவர் கூறுகிறார்.

சந்தனம் யோசப், கோபால் என்பவர்கள் உட்பட பலர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

### அங்கொட சம்பவம்

21ம் திகதியன்று அங்கொடயில் கொடல்ல மாவத்தை எனும் இடத்தில் தோட்டத்தில் கீரை வெட்டிப் பிழைத்து வந்த ஒரு ஏழையை 'புலி' என்ற சந்தேகத்தின் பேரில் ஊர்வாசிகள் பிடித்து மரத்தில் கட்டி வைத்து கொடூரமாக தாக்கியுள்ளனர். இறுதியில் 'இவரை ரயர் போட்டு எரிக்க வேண்டும் எனக் கூறி ரயர் தேடிப் போனதாக' அந்த ஊர்வாசிகளில் ஒருவர் தெரிவித்தார். கடைசியில் என்ன நடந்தது என்பது தனக்குத் தெரியாது என்றும், ஆனால் எரிப்புச் சம்பவம் அங்கு நடக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்

கீரை வெட்டிப் பிழைத்து வந்த அந்த ஏழை வீடற்றவர். பாதையிலேயே தங்கி வாழ்பவர் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# வாடையில் எழுந்த அலை

அடம்பன் கொடி படர்ந்து கிடக்கும் மணற்பரப்பு. காற்றில் அள்ளுண்டு, ஆங்காங்கே குவித்து விட்டதுபோன்ற வெண் மணற் கும்பிகள். அதன் மேலே இராவணன் மீசைக்கொடிகள் கிளைவிட்டுக் கிடந்தது. இடையிடையே இருந்த ஈரப்பரப்பில் பட்டிப்பூக்கள் நாவலாய்ப் பூத்துக்கிடந்தன. என்னால் கட்டிப்பிடிக்க முடியாத கரும்பனைக்கூட லில் வாடைக்காற்றில் தூசாய்ப்பறக்கும் கடற்கரை மணல் அப்பிக்கிடந்தது.

கரையில் சாதாளையும், தாமரம் கொட்டையும், கரிக்கட்டையும், கணவாய் ஓடுமாய் ஒதுக்கித்தள்ளி நுரைத்துக் கொண்டு கிடக்கறது இந்து சமுத்திரம்.

குடவிலிப்பாறையில் ஓங்கி அடிக்கும் கடல் அலை குரைத்துக்கொண்டு எழுகிறது. காவோலைகள் ஒன்றையும் பனையில் விடாமல் தறித்துக் கொட்டிக்கிடத்தி விட்டிருக்கிறது இந்த வாடைக்காற்று.

மாவிலித்துறை வெளிச்சக்கூடும் பனங்காணிமுனைக் கூடல் பனைகளும் ஆடிப்போனகாலம் இது.

''தொழிலுக்குப்போன பறுநாந்து மாமாவும் ஆட்களும் சுக்கான் உடைஞ்சு கடலில தத்தளிச்சுப் போச்சினமாம். தண்டேல் செபமாலைதான் கெட்டித்தனமாய் வள்ளத்தைக் கரைக்குக் கொண்டந்தவராம். ''

''தோமையப்பர் கோவில் சிலுவையும் ஐயனார் கோவில் மணிக்கோபுரமும் உடைஞ்சு விழுந்து கிடக்காம்''

''யூனியர்ஸ் கூலுக்கு முன்னால் நிண்ட கோணற் புளியமரங்களெல்லாம் முறுஞ்சு தெருவில கிடக்காம்''

மணற்கிணத்துக்கு தண்ணியள்ளப்போன மணியக்கா மண்பானையை போட்டுடைச் சிற்றாவாம்.''

''கொட்டு வாக்காட்டுக்குள்ள நிண்ட அந்தப் பெரிய புளியமரம் கூட பிரண்டு போச்சாம்.''

எல்லோரும் பேசிக்கொண்டார்கள். 'என் சீவியகாலத்தில் வாடைக்காற்று இப்படிப் பெரிசாய் அடிக்கவில்லை' என்று தீவிலேயே வயதில் கூடியவரான 'பெத்தார் மகன்' சொல்லிப்போட்டார்.

உலகப்படத்தில் இந்திய மாலைக்கும் இலங்கை மாங்காய்க்கும் இடையே கிடக்கும் அந்த நீண்ட தீவில் அன்று வாடைக்காற்றின் சதிர் ஆட்டம் பலவாறாய்த் தெரிந்தது.

கிழக்கே குடவிலியிலிருந்து மேற்கே பனங்காணி முனைவரையான தீவின் வடகரையும் அதை அண்டிய பகுதிகளும் வாடைக்காற்றில் சிதைக்கப்பட்ட அந்த நாளுக்கு மறுநாள் காற்று மெதுவாய் அடங்கிப்போனது போல் இருந்தது. ஆனாலும் இரைந்து கொண்டிருக்கிற கடலும், பாறைகளில் மோதும் அலைகளின் குரைப்பும் தொடர்ந்தது.

வழமைபோல் நாளொன்றுக்கு இரண்டு தடவைகள் மாவிலித்துறைக்கு வந்து போவதும் எங்கள் தீவை இலங்கைத்தீவுக் குள் தொடர்பு படுத்துவதுமான அந்தக் குமுதினி படகு சேவை, குறிகாட்டுவானிலி ருந்து, ஏழாற்றில் மலைமுகடாய் எழுகின்ற கடல் அலைகளின் உச்சிகளை கிழித்துக்கொண்டும், இந்து சமுத்திர உறுமலைச் சகித்துக்கொண்டும், எந்த இழப்புகளுக்கும் இடம் கொடுக்காமல் நீண்ட காலமாய் தொடர்ந்தது.

பனை உயரத்துக்கு எழும் மாரிக்காலக் கடலிலும் நேர்த்தியாய் படகோட்டி கரைக்குக் கொண்டுவரும் எத்தனை தண்டேல்களின் பெயர்களை எம் தீவின் சனம் வாய் நிறையப் பேசுவார்கள்.

முன்னர் இருந்த ராஜேஸ்வரியை விட மனமின்றி குமுதினியைப் பெற்றுக்கொண் டவர்கள் எம் ஊர் மக்கள்.
சீக்கிரியான் பள்ளத்துக்கு எதிரே இருந்த வெட்டுக்கழியில் சிறையா மீன்கள் துள்ளுகின்றகாலம். போன வருஷத்துக்குப் பின்னர் கோழிக்குஞ்சுகளை அடைச்சு வைத்திருந்த கரப்புக்களை ஐயா பழுதுபார்க்கத்தொடங்கிற்றார்.

எனக்கும் கூடவே சிறையா மீன்களின் பொக்கணமும் பாற்சொதியும் நினைவுகளாகிவிட்டது.
சொந்தைக்கயிற்றை இடுப்பில் கட்டிக்கொண்டு கரப்பை முதுகில் சாத்தி ஒற்றைக்கையால் பிடித்துக்கொண்டார். பின்னர் என்னை கூப்பிட்டு 'வா போவம் என்றார்'
அவர் பின்னால் நான். ''சின்னத்தம்பியும் வாறான் என்னோட'' என்று அம்மாவிற்கு குரல் கொடுத்தார்.

கழிக்கரையில் பொந்துக்களுக்குளிருந்தும் எட்டி பார்ப்பதும் பெருங்கால்களைக் கிளப்பிக் கொண்டு ஓடுகின்ற அந்தச்சிவத்த நண்டுகளைத்துரத்திக்கொண் டும், வெள்ளைக்கழிமண்ணை உருட்டி உருவங்கள் செய்து கருத்துக்கிடந்த முருகை கற்களில் ஒட்டி வைத்துக்கொண்டு மிருந்தேன் நான்.

ஐயா குளத்தில் இறங்கி துரத்தித்துரத்தி கரப்பைக்குற்றி சிறையா மீன்களைப்பி டித்து சொத்தைக்குள் போட்டுக்கொண்டி ருந்தார். திரண்டு கிடந்த அவர் வெறும் தேகம் வேர்த்து வடிந்தது.

கலங்கிய வெள்ளைக்கழி நீரில் சிறையாக்களின் ஓட்டத்தைக்குறிப்பார்த்து கரப்புகுற்றுவது எவ்வளவு கஷ்டமானது என்று எனக்கு அப்போது விளங்கவில்லை.

வெட்டுக்கழிக்குத் தெற்கே பகிர் கடைப்புக்குள் இருந்த வளவில் பெரியக்காவின் அத்தார் வெங்காயம் நட்டிருந்தார். வெங்காயத்தாள்களைத் தடவி விடுவதும் தாள்களுக்கு அடியில் நுரைத்துப்போயிருக்கும் பனிநீரை ஊதிவிடுவதும் ஒரு காலத்தில் எனக்கு விளையாட்டாய் இருந்தது. பருமனாய் திரண்டு நாலா பக்கமும் வெடித்துக்கிடந்த

அந்த வெங்காயப் பல்லுகளை அத்தாருடன் சேர்த்து உழக்கியும் விட்டிருக்கிறேன்.

அந்தப்பருத்த வெங்காயக்கட்டுக்களையும், பறுநாந்து மாமாவிட்ட வேண்டிய கருவாடுகளையும் கட்டிக்கொண்டுதான் அத்தார் குமுதினியில் ஏறிப்போனார்.

''கொழும்பில வெங்காயம் நல்ல விலையாம்'' ஐயாவும் மற்றவையும் கதைத்ததை நான் கேட்டிருக்கிறேன். 'அத்தார் கொழும்புக்குத்தான் போயிட்டார்' எனக்குள்ளே முடிவாய்ப் போனது.
ஐயா குளத்தை விட்டு வெளியே வருவதாய் இல்லை.
நானும் கரையில் இறங்கி தண்ணீரில் விளையாடினேன்.
வேகமாய் தண்ணீர் அடித்து ஓடினேன். முகம் கழுவினேன். வாய் கொப்பளித்தேன்.
கழித்தண்ணீர் கய்ப்பாய் இருந்தது. குறவை வடிக்கிற தாமளாப்புக்குளம், குண்டலவர் மகன் செத்த வெட்டுக்குளம், வண்ணான் குளம் எல்லாமே நல்ல தண்ணீக்குளங்கள்- எத்தனை தடவை ஒல்லித்தேங்காய்களைக்கட்டிக் கொண்டு நீந்தியிருக்கிறேன்.

வெட்டுக்கழியிலிருந்து வடக்கே கால்வாய் ஒன்று கடலை நோக்கிப்போனது. அதன் அருகே காவோதிச் செடிகளை ஊடறுத்துஒற்றையடிப்பாதையில் வேகமாய் நடந்து போனேன்.

அகலமான அந்த வாய்க்கால் மணற்கிணறுகளுக்கு மேற்காய் இருந்தி

டச்சுக் கோட்டைக்கு அருகாய்ப் போய் கடலில் விழுந்தது.
குஞ்சு மீன்கள் தெளிந்த நீரின் ஓட்டத்தை எதிர்த்துக் கொண்டு கூட்டமாய் ஓடித்திரிந்தன.
சிதைந்துபோன கோட்டைக்குள்ளே வளர்த்து கிடந்த இத்திமர வேர்கள் கோட்டையின் செங்கற் சுவரிலும் படர்ந்து கிடந்தது. கோட்டைக்குள் பேய்கள் இருக்குமோ என்ற பயமும் ஐயாவின் ஞாபகமும் ஒன்றாய் வர திரும்பி கழிக்கரையை நோக்கி ஓடினேன். நீட்டிக் கொண்டு கிடந்த கல் ஒன்று சின்னி விரலைப்பதம் பார்த்தது.

ஐயா அப்போதுதான் கரையை நோக்கி வந்து கொண்டிருந்தார்.
அந்தப் பனை ஓலைச் சொத்தை ஐயாவின் இடுப்பை இழுத்துக் கொண்டு கிடந்தது. கரையில் சிறையாக்களை அடுக்காய் நார்களின் கோர்த்துக் கொண்டு நானும் ஐயாவும் திரும்பி வீட்டுக்கு வந்தோம்.

ஐயாவுக்கு மட்டுமில்லை. எனக்கும் இன்று சந்தோஷமான நாள்தான். என்னோடு விளையாடும் எல்லோருக்கும், பாதிரி கோவில் பள்ளியும் 'நான் கரப்புக்குத்தக் கழிக்குப் போனேன் என்றும், இடிஞ்சகோட்டை பார்த்தேன் என்றும் சொல்லாம்.'

எதிரே இருந்த குடிலில் அப்பு கடகம் பின்னிக்கொண்டிருந்தார்.
அப்பு அம்மாவின் அப்பர். அப்புவிற்கு வயது போய் விட்டாலும் இன்னும் திடகாத்திரமாய் ஊசாடித்திரியும் மனிதராய்தான் இருக்கிறார். அவரிடம் தான் ஊர் விழப்பங்களை அடிக்கடி கேட்பேன் சொந்தங்கள் பற்றியும் உறவுமுறை பற்றியும் சொல்லித்தருவார்.

இப்போது எனக்குள்ளே கேள்விகளாய் இருந்தவை 'கழித்தண்ணி ஏன் கய்க்கிறது' என்பதும் 'டச்சுக்கோட்டைக்குள் பேய் இருக்குமா?' என்பதும்தான்.
சத்தகக்காம்பால் நீக்கி கடகத்துக்கு நார்பொத்திக்கொண்டிருந்த அவரை நெருங்கினேன்.
''சின்னவா நல்ல மீன் பிடிச்சியா'' என்று வினவினார்.
''ஊருப்பெட்ட மீன் ஐயாதான் பிடிச்சவர்'' என்றேன்.
''இண்டைக்குக் கூழ்காச்சுவமடா'' அம்மா ஒடியல் இடிச்சு அரிச்சுக் கொண்டு அதற்கான ஆயத்தத்தில் இருந்ததை அவர் கவனித்திருக்கிறார்.

அதன் பின்னர் அவரிடம் செல்லங்கு ழைந்து என் சந்தேகங்களை கேள்விகளாக் கிக் கொண்டேன்.

''என்ர கொப்பாட்டான் காலத்தில டச்சுக்காரன் வந்து பிடிச்சு தீவில கோட்டையையும் குதிரையங்களையும் கட்டிப்போட்டான். அவங்கள் தங்களிட உல்லாசத்துக்கும் பொழுதுபோக்குக்கும், பாதுகாப்புக்குமெண்டு கடலில இருந்து கால்வயாள வெட்டி தீவுக்குள்ள இருந்த குளங்களோட இணைச்சுப்போட்டாங்கள்'' என்று கோபப்பட்டுக்கொண்டார்.

''நீ நடந்து போனியே அந்தக்கால்வாய் அதுதான் நோளன் கால்வாய்' அது அவங்கிட காலத்திலதான் வெட்டினாங் கள். நல்ல தண்ணி வளமும், ஆடு மாடு வளர்ப்பும், விவசாயமும் நல்ல செழிப்புமாயிருந்த எங்கட தீவை உப்புக்கய்க்கும் காஞ்ச நிலமாய் மாற்றிப்போட்டுப் போயிட்டாங்கள்.''

''அதுக்குப் பிறகு இங்கிலாந்துக்காரனும், சுதந்திரம் கிடைச்சு எங்கட ஆட்களும் வந்தவங்கள்: என்னும் ஒண்டும் எங்களுக்கு மாறயில்லை'' என்று புறுபுறுத்துக்கொண்டார்.
''கோட்டைக்குள் பேயில்ல. அது அந்தரத்துக்கு கக்கூசுக்கு போற இடம்'' என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.
எல்லாவற்றையும் கேட்டு முடித்து மூலதறைக்கு விளையாட ஓடினேன்.
கொடி எடுப்பு விளையாட்டில் களைத்துப்போய் கிட்டிப்புள்ளு விளையாட்டில் நின்ற போ்து, அம்மா பெருங்குரலில் கத்தி தலையில அடித்துக்கொண்டு ஓடினா. நாங்களும் பின்னால் ஓடினோம்.
தீவின் மூன்று குறிச்சிச்சனமும் மாவிலித்துறையில் கூடி நின்றது.

பொம்பிலிளையள் பலர் நிலத்தில் விழுந்து அழுதனர்.
''போக்கறப் போறவன்கள் திண்டு தண்ணி குடிக்கிறான்கள்'' என்று சின்னப் பொந்தி ஆச்சி மண்ணை அள்ளித்திட்டி எறிந்தா.

பெரியக்கா நெஞ்சு நெஞ்சாய் அடித்துக்கொண்டு விக்கி விக்கி அழுதா. ஐயா அக்காவைத்தடவிக்கொண்டு அழுதார்.
எனக்கும் அழுகை அழுகையாய் வந்தது. மாவிலிப்பாலத்துடன் அணைக்கப்பட்ட குமுதினிப்படகிலிருந்து வெட்டுக்காயங்க ளுடன் இரத்தம் தோய்ந்த பிரதேங்களை மாவிலி மடத்தின் குறுக்கே அடுக்கினார் கள்.
''நேவிக்காரன் குமுதினியில வந்த ஆக்களை வெட்டிப்போட்டாங்கள்''
''ஏழாற்றுப்பிரிவு கழிஞ்ச பின்னர் ஆயுதங்களோட வந்த அவங்கள் குஞ்சு குருமன்களைக்கூட வெட்டியிருக்கிறான் கள்''
''கட்டையில போவார் மிருகப்பிறப்பா யெல்லோ பிறந்திருக்கிறான்கள்''
'பெண்டு பிரசைகளைக்கூட விட்டு வைக்கயில்லை''
கொழும்புக்குப்போன பெரியத்தார் கோரமாய் நெஞ்சிலும் தோளிலும் தலையிலும் வெட்டப்பட்டுச் செத்திருக்கிறார். பார்க்கப், பார்க்க எனக்குள்ளே கோபமும் வன்மமும் கூடிக்கொண்டே வந்தது.
பெரியவர்களும் எனக்கு மூத்தவர்களும் கோபமும் வேகமும் கொண்டு குமுறிக்கொடிந்தார்கள்.
திளக்கூர், மேற்கூர், நடுக்குறிஞ்சி அடங்கிய மூன்று குறுச்சிகளிலும் அன்று ஒரே நாளில் முதன் முதலாக இவ்வளவு சாவீடு நடந்து முடிந்தது.
என் படிப்பிலும், வகுப்பிலும் எதிலும் கவனமெடுக்க என்னால் முடியவில்லை. எனக்கும், என்னோடொத்தவர்களுக்கும் அந்தச் சம்பவம் மறக்க முடியாதபடி பதிந்து போய்விட்டது. மீண்டும், மீண்டும் அந்தக் கோரச் சம்பவம் பற்றி நாம் பல தடவை சேர்ந்து கதைத்து விட்டோம். விளையாடும் போது கூட அந்த நினைவுகள் அடிக்கடி வந்து போனது. பெரியக்கா எப்போதும் அழுது கொண்டிருந்தா. அத்தாரின் நினைவுகளை

அவவால் எப்படி மறக்கமுடியும். முசுப்பாத்தியும், கலகலப்பும், ஆதரவு மிக்கவர் அவர்.
நெசவுக்கோ, பன்ன வேலைக்கோ போகுமாறு அம்மா வற்புறுத்தியும் அக்கா போகவில்லை.
என் சிநேகிதர்கள் பலர் வெவ்வேறு முடிவுகளோடு இருக்கிறார்கள்.
ஆனால் என் ஐயாவும், அம்மாவும் என்னை மிகக்கவனமாகக் கண்காணிப் பதை என்னால் அவதானிக்க முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# சினிமா ரசனை

## சினிமா விமர்சனம்

### இருவரின் கருத்துக்கள்



நாம் பல வருடங்களாகச் சினிமாப் படங்களைப் பார்த்து வருகிறோம். அவற்றை 'ரசிக்கவும்' செய்கிறோம். அது போதாதா? சினிமா ரசனை என்கிற பெயரில் புதிதாக நாம் எதனைத் தெரிந்து கொள்ளப் போகிறோம்? என்ற கேள்விகள் நம்மிடையே தோன்றும்.

ஆனால் இதே போன்று நாம் சங்கீதத்தைப் புரிந்து கொள்ள சங்கீதம் கேட்டால் போதாதா? ராகம், தாளம் ஆகியவற்றைப் பயில வேண்டுமா? ஓவியத்தைப் புரிந்து கொள்ள அதனைப் பார்த்தால் போதாதா? வண்ணம் கோடு ஆகியவற்றின் செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ள வேண்டுமா, என்று கேட்கிறோமா?

இல்லை. ஏன்?

ஏனென்றால் சினிமா நீங்கலாகப் பிறகலைகளை நாம் ரசிப்புத்தன்மை என்னும் கோணத்திலிருந்து பார்க்கிறோம். எனவே அக்கலைகளை ரசிக்க நமக்கு ரசனை என்னும் அம்சம் அத்யாவசியமாயும் உயர்வு மிக்கதாயும் தோன்றுகிறது. ஆனால் சினிமாவை நாம் ரசனை என்னும் கோணத்திலிருந்து அணுகவில்லை.

வியபபாக இருக்கிறதல்லவா?

ஆனால் அதுதான் உண்மை

ஒரு புதுப்படம் ரிலீஸானவுடன் நாம் அப்படத்தைப் பார்த்தவர்களிடம் என்ன கேள்வி கேட்கிறோம்? 'படத்தின் தரம் எப்படி?' என்றா கேட்கிறோம்? இல்லை. 'படம் நூறு நாள் ஓடுமா' என்றதான் கேட்கிறோம். ஒரு படம் நூறு நாள் ஓடினால் என்ன நூறு காட்சி ஓடினால் என்ன? நமக்கேன் இந்த வீண் அவஸ்தை? இதுபற்றியெல்லாம் நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

அது மட்டுமா?

யாராவது தமிழ்ப் படங்கள் கலைநோக்குடன் எடுக்கப்படுவதில்லை என்று விமர்சனம் செய்தால் நாம் உடனே, 'கலை நோக்குடன் படம் எடுத்தால் இன்றைய நிலையில் படம் ஓடாது. முதலீடு செய்த பணம் திரும்பி வராது, என்ற பதில் தருகிறோம். நாம் எத்தனை தமிழ்ப் படங்களுக்கு முதலீடு செய்துள்ளோம்? அப்படியே அவை நன்றாக ஓடினாலும் அதன் தயாரிப்பாளரிடம் நாம் இலாபத்தில் பங்கு கேட்கவும் போவதில்லை. எனவே அதன் இலாப நஷ்டம் பற்றி நாம் ஏன் அக்கறைப் பட வேண்டும்?

இவ்வாறான முதலீடு செய்யாத - இலாப பாத்யதையும் வேண்டாத விசித்திர மனோபாவம் நமக்கு மற்ற எதன் மீதும் கிடையாது. இதற்கான காரணங்களை நாம் இப்போதைக்கு ஆராய வேண்டாம். இதிலிருந்து விடுபட என்ன வழி என்பது பற்றி மட்டும் நாம் கவனங்கொள்வோம்.

நல்ல சினிமாவை இனங்கண்டு கொள்வது ஒன்றே இதிலிருந்து தப்புகிற வழி, நமது பழைமையான கலாசாரமோ, தத்துவமோ, கல்வியறிவோ, சமய உணர்வோ, நமக்கு நல்ல சினிமா எது என்பதை போதிக்காது. மாறாக அவையாவும் தரமிழந்த சினிமா ...கரம் செய்யப்பட்டு வருகின்றன. ஒரேயொரு உதாரணம் மட்டும் பார்ப்போம்.

நமக்கு முந்தைய தலைமுறையைச் சேர்ந்தவர்களில் பலரும் சினிமா பார்ப்பதைக் கெட்ட பழக்கம் என்று கூறி அதனை வெற்றிகரமாக ஒதுக்கி வந்தனர். ஆனால் அவர்கள் இன்று சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம் டெலிவிஷனை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதாவது சினிமா, நாடகம் ஆகிய வேறொரு ரூபத்தில் அவர்களையும் மீறி அவர்கள் வீட்டிற்குள்ளேயே புகுந்துவிட்டது.✱

(✱ மேலும் இதன் தொடர்பாய்ப் பார்க்கும் பொழுது பழைய தலைமுறையினர் தம் காலத்தில் சினிமா மீது வெறுப்பை வெற்று வீறாப்பாய்த்தான் கொண்டிருந்தனர் என்பதையும் சினிமா தியேட்டரில் பகிரங்கமாக அமர்ந்து, தங்களிடம் புதைந்துள்ள தங்களது மேலோட்டமான ரசனையைப் பறைசாற்றிக் கொள்ள பயந்தனர் என்பதையும் நாம் அறியலாம். இதனுடன் மறுபுறம், மாறி வரும் சமூகத்தையும் டெலிவிஷன் வீடியோ கலாசாரத்தின் மூலம் புரிந்துகொள்ள முடிகிறது. சமூகக் கூடலில் விருப்பற்ற மனிதர்கள் தியேட்டருக்கு செல்லாது வீட்டினுள் ஒதுங்குவதன் மூலம் தங்களை அந்நியப்படுத்திக் கொள்வதையும் டெலிவிஷன் சாத்தியப்படுத்தியுள்ளது.)

தரமிழந்த சினிமாவை விரட்டியடிக்க தரம் வாய்ந்த சினிமாவால் மட்டுமே முடியும் என்பது இப்போது நிரூபணமாகிவிட்டது. தரம் வாயந்த சினிமாவை ரசிக்க நாம் நம்மைத் தயார் செய்யத்தான் வேண்டும். நாம் இதுகாறும் பார்த்த படங்களைத்தான் யாதொரு ரசனையுமின்றிப் பார்க்க முடியும்.

சினிமா ரசிக்கத் தகுந்த ஒரு சாதனம். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் நல்ல திரைப்படங்கள் வருகின்றன. ஓவியம் போன்று சங்கீதம் போன்று சினிமாவும் ரசனைக்குரிய சாதனம் என்ற எண்ணத்தை அப்படங்கள் நமக்குப் புகட்டும்.

சினிமா கலைசாதனம் என்பது எவ்வளவு உண்மையோ அதே போல் அது ஒரு விஞ்ஞான சாதனம் என்பதும் பேருண்மையாகும். இப்பாகுபாட்டினை நன்கறியவும் நாம் சினிமாவை ரசிக்கத் தெரிந்து கொள்ள வேண்டிய்து அவசியம்.

**அம்ஷன் குமார்**

***காயத்திரி சட்டர்ஜி: இந்திய தொலைக்காட்சி நிறுவனத்தின் பேச்சாளர். சினிமாவில் விசேட ஈடுபாடு கொண்டவர். சினிமா தொடர்பாக இவர் எழுதிய நூலுக்காக "ஸ்வர்ணகமல்" தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டவர். அவருடைய பேட்டி கீழே தரப்படுகிறது.***

***திரைப்படம் ஒவ்வொன்றை விமர்சனம் செய்ய தேவையானவை என நீங்கள் கருதும் விதிமுறைகள் அல்லது அளவு கோல்கள் எவை?***

சினிமாவின் சம்பிரதாயங்களை நாம் முதலில் அறிந்திருத்தல் வேண்டும். அவ் அவ் நாடுகளின் சம்பிரதாயங்கள் சினிமாவிலும் பிரதிபலிக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். இதன் பிறகே கதையின் சினிமாத் தன்மை பற்றி அறிதல் வேண்டும். அந்த சம்பிரதாயங்க்ளுக்கு ஏற்றவைகள் முறையாக எவ்வாறு மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ளது என்பதை அங்கு விமர்சித்தல் வேண்டும். முதன்மையாக, நாம் குறுந்திரைப்படங்களை விமர்சிப்பது ஒருவகையான விதிமுறைக்கு உட்பட்டே, வாராந்தப்படம் ஒருவகையில், டப்பிங் படங்கள் ஒருமுறையில், பேசும் படங்கள் ஒரு விதத்தில் இவ்வாறு சினிமா சம்பிரதாயங்களுக்குள் பேதங்கள் தெளிவாகத் தென்படும் முறையில் விமர்சித்தல் வேண்டும்.

***ஒரே மாதிரியான வியாக்கியானங்களைக் கொண்ட திரைப்படங்களை வேறுபடுத்துவது எவ்வாறு சினிமா விமர்சகன் அது தொடர்பான விமர்சனத்தை எவ்வாறு முன் வைப்பது?***

முதலில் விளங்கிக் கொள்ள வேண்டியது, ஒவ்வொரு சினிமா சம்பிரதாயங்களுக்குள்ளும் நடைபெறும் மிகப் பிரதானமான வேறுபாடுகளை ஆகும். உதாரணமாக பிரான்ஸின் புதிய எல்லைகளை எடுத்தால், அதன் பொதுத்தன்மையைக் கவனிக்கவேண்டும். ஜேர்மனிய சினிமா அல்லது கொலிவூட் சினிமாவை விட வேறுபாடான இத்தாலிய நவீனவாத சினிமாவின் நீண்ட தூர காட்சிவிதானிப்பைக் (Long time duration shots) அவதானிக்க வேண்டும். ஐரோப்பிய சினிமாவின் நீண்ட தூர காட்சி விதானிப்பை விட வேறுபட்டதாக 'த பஷன் ஒவ் ஆஹ்' (The fashion of arc) என்னும் படம் அமைவதை காணலாம். நிஷப்தமான திரைப்படங்களில் அண்மிய திரைக்காட்சிப் பாவிப்பானது (Close up) ஹொலிவூட் திரைப்பட அண்மிய திரைக்காட்சி பாவிப்பை விட வேறுபாடானது. இவ்வாறாக வெவ்வேறு விதமான



காட்சி சம்பிரதாயங்களையும் அரசியல் பின் புலத்தையும் ஒவ்வொரு நபர்களுக்கான தனித்துவத்தையும் இனங்கண்டு புரிந்து கொள்ள வேண்டும். விமர்சகர் மொழி தொடர்பான வேறுபாட்டைக் கருதாது. திரைப்படம் என்னும் கலை தொடர்பான அம்சங்களை விமர்சனப்படுத்த வேண்டும். ஒரே கதையை இரு வேறு இயக்குனர்கள் படமாக்குவது இரண்டு தனிப்பாணிகளிலேயே ஆகும். அவ்விருவரினதும் தனித்துவம், அரசியல் நிலைப்பாடு என்பன வேறுபாடானதாக அமையும் போது அங்கு வெளிப்படும் திரைப்பட வடிவமும் , கதை புரிந்து கொள்ளப்படும் தன்மையும் வேறுபடும். இவற்றை விமர்சகர் புரிந்து கொள்ள வேண்டும்.

***சினிமாப் படங்களில் தேசியத்தன்மையை நீங்கள் எவ்வாறு விளங்கிக் கொள்கிறீர்கள்?***

வெவ்வேறு நாடுகளின் கலாசார, வரலாறுகளின் அடிப்படையில் எழுகின்ற சிற்சில இலட்சிணைகளை நாம் தேசியத்தன்மை என்கின்றோம். ராய், சங்க் ஆகியோரின் படைப்புக்களில் வங்காள சினிமா இலட்சிணைகள் தென்படுகின்றன. எந்த இயக்குனர் படைத்தாலும் ஹொலிவூட் திரைப்படங்கள், ஹொலிவூட் திரைப்படங்கள் தாம். ஆனால் சில சந்தர்ப்பங்களில் அவ் இலட்சணைகளை மீறிய படைப்புக்கள் உருவாவதும் உண்டு.

***திரைப்படத்தின் மாதிரி மற்றும் உள்ளடக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்வது; இதில் எதனை முதன்மைப்படுத்துவது?***

வடிவத்துக்கோ அல்லது உள்ளடக்கத்துக்கோ முக்கியம் கொடுக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. முக்கியத்துவம் ஏற்படுவது சினிமாத்தயாரிப்பாளனது நோக்கத்தாலும், அவசியத்தாலும் ஆகும். விமர்சகனினது அல்லது ரசிகனின் தொழிற்பாடு, அதை யதார்த்தத்துக்கு ஏற்ப உணர்த்துக் கொள்வதாகும். தன்னுடைய படைப்புக்கள், அனுபவங்களை பிரயோசனப்படுத்த சினிமாத் தயாரிப்பாளருக்கு சுதந்திரம் உண்டு. அப்போது அவன் மாதிரிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கலாம். இல்லாவிட்டால் உள்ளடக்கத்துக்கு முன் இடம் கொடுக்கலாம்.

உதாரணமாக, பதேர் பாஞ்சாலி திரைப்படம் ஆழமான மனித எண்ணங்களை ஸ்பரிசித்துச் செல்கின்றது. ஆனால் 'நட்சத்திரப் போர்' (Star wars) படம் பணச்செலவுமிக்க ஆடம்பரமான காட்சிகளை காட்டுகின்றது.

எப்படியாயினும் உள்ளடக்கத்துக்கும், திரைப்பட வடிவத்துக்கும் சமத்துவத் தன்மை ஏற்படுத்துவது இயக்குனரின் பணியாகும்.

***சமீப காலமாக இலங்கையின் பல விமர்சகர்கள் (Middle Cinema) சமாந்தர சினிமா தொடர்பாக தமது கவனத்தைத் திருப்பி உள்ளார்கள். இந்தியாவிலும் இப்படியான தன்மைகள் காணக்கிடைக்கின்றதா?***

நான் காணும் விதத்தில் சமாந்தர சினிமா என்பது நடுநிலைத்தன்மையைக் கொண்டதல்ல. அதேவேளை இது வணிகரீதியானது என குறிப்பிட கூடியதுமல்ல. இந்தியாவில் சமாந்தர சினிமாவின் பண்பு பரம்பரையான சினிமாவின் பெறுமானங்களை விலக்கியே உள்ளது.

***சினிமாவை தொழில் என்று கருதும்போது மூன்றாவது மண்டல நாடுகள் என்ற ரீதியில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும் என சிலர் கூறுகின்றனரே?***

தொழில் ரீதியாக நடைமுறைப்படுத்துவதை, அடையாளம் கண்டு கொள்வதை நான் எதிர்க்க மாட்டேன்.

சினிமாக்காரர்கள் தமக்கும், தம்துறைக்கும் தேசியத்துக்கும் பக்கபலமாக இருக்கும் முசமாக வணிப எல்லைகளை கடந்து முன்னேறுகின்றனர். அதில் ஒரு நிலையே சமாந்தர சினிமா என்கிறோம். இது துறைக்கும் நன்மையானதே. அதேவேளை, வாணிபரீதியாக பயன் தரக்கூடியது. உதாரணத்துக்கு "சத்" கூட செய்தது கலையை வாணிப ரீதியாக வெற்றி கொள்ளவே. அப்படியிருந்தும் அவருக்கு யதார்த்தமான திரைப்படங்களை வெளியிட முடிந்தது.

***புதிய தேர்ச்சியாகக் கருதப்படும் பிரபலமான கலாசாரம் (Pupular Culture) , பல்வேறு கலைத்துறையினராலும் கட்டி எழுப்பப்படுவதைக் காணலாம். சினிமாவுக்குள் இது அடங்குவது எம்முறையில் நவீன சினிமாவிற்கும் பிரபல சினிமாவிற்குமான வேறுபாட்டை நீங்கள் எவ்வாறு காண்கின்றீர்களா?***

சங்கீதம் பாடல் போன்ற விடயங்களை அவதானிப்பதன் மூலம், இதனை தெளிவாகக் காண முடியும். மை போன்ற கேல் ஜெக்சன் நபர்கள் புதிய பரம்பரையினர். அதுபோலவே பிரபலமானவர்கள். சினிமாவிலும் இவை இரண்டும் ஒன்றுபட்ட சந்தர்ப்பங்கள் உண்டு. ஆனால் இந்தியாவில் அல்ல.

அமெரிக்காவில் இந்தியாவிலும், சில திரைப்படங்கள் நவீன பிரபல இலட்சிணைகளை வெளிப்படுத்தியமையை காணக்கூடியதாக உள்ளது. மணிரத்தினத்தின் "ரோஜா", பாலச்சந்தர் ஆகியோரின் படங்களை உதாரணம் கூறலாம். நவீன சினிமாவைக் காணக்கூடியது தொழினுட்பத்தின் மூலமே. முன்னேறிய வேலை நாட்டுத் திரைப்படங்கள் மூலம் நடைமுறை ஆதிக்கத்தில் உள்ள கலாசாரம், சங்கீதம், நடனம் என்பவை பளிச்சிடுகின்றன.

***தமிழில்: ரதினா***


*நன்றி: ராவய*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# விஞ்ஞானம் மனிதன் படைப்புலகம்

கொ. றொ. கொன்சன்ஸ்ரைன்

விஞ்ஞானம் மனித முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது. விஞ்ஞான அறிவியல் வளர்ச்சி இருபதாம் நூற்றாண்டில் மிகவும் முக்கியமான ஒரு பரிமாணமாகும். இருபதாம் நூற்றாண்டின் ஈற்று அந்தலையில் நின்று நோக்கும் பொழுது இந்த நூற்றாண்டில் விஞ்ஞானத்தின் செல்வாக்கினைக் கண்டு பிரமிப்பு அடையாமலிருக்க முடியாது.

இருந்தாலும் அந்த வளர்ச்சியெல்லாம் மனித குலத்தில் ஒரு எதிர்மறையான தாக்கத்தை அவ்வப்போது காட்டவே செய்கிறது. விஞ்ஞான வளர்ச்சி பற்றி ஆர்ப்பரிக்கும் அதே வேளை அதன் தாக்கம் பற்றியும் எதிர்கால மனித குலம் பற்றியும் நாம் சிந்தித்துப் பார்ப்பது இந்தக் காலகட்டத்தின் தேவையென்றே படுகிறது.

எந்த ஒரு மனித முயற்சியும் மனித வாழ்வின் முன்னேற்றத்தையும் பரஸ்பரம் புரிந்துணர்வையும் மேம்படுத்தும் பொருட்டே மேற்கொள்ளப்படுகிறது. இருப்பினும் மனிதனது சுயநல இச்சைகளின் வலிமை பல சந்தர்ப்பங்களில் எதிரான திசையில் மனிதனை இட்டுச் செல்கிறது. இந்தவித மனித நிர்ணயத்தை கருத்திற்கொண்டே Alvin Toffler 'Man is by Nature a Jeopodised animal' எனக் கூறினார்.

மனிதன் தனது சூழலிலும் சக மனிதரிடத்தும் மேலாதிக்கம் செலுத்தும் இச்சை அவனை எப்பொழுதும் ஏதோ ஒரு விதத்தில் மேலாதிக்கம் செலுத்தத் தூண்டுகிறது. இந்த 'மேலாதிக்க மனோபாவம்' தான் இன்று உலகில் நிலவிவரும் பல்வேறு பிரச்சினைகளினதும் அடிப்படைக்காரணமாயமைந்து நிற்கிறது. இந்த மேலாதிக்க மனோபாவத்திற்கு பல சந்தர்ப்பங்களில் விஞ்ஞானம் துணை போகிறது.

விஞ்ஞானம் அடிப்படையில் மனிதனுக்கு இயற்கை அமைத்திருக்கும் வரையரைகளை, தடைகளைத்தாண்டுவதற்கான ஒரு வழிமுறையாகவே பயன்படுகிறது. அதாவது விஞ்ஞானம் அடிப்படையில் மனிதனது இயற்கையான வறையரைகளின் மீது மேலாதிக்கம் செலுத்த உதவும் வழிமுறை எனலாம். இப்படிச் சொல்வதானால் இது விஞ்ஞானத்திற்கெதிரான கருத்தென்றோ அல்லதுவிஞ்ஞான வளர்ச்சி தீவினை எனக் கருதுவதாகவோ ஆகிவிடாது. மாறாக விஞ்ஞான வளர்ச்சிப்பற்றி புறவயமாக நோக்கும் ஒரு முயற்சியே இது.

இந்த இடத்தில நாம் ஒன்றை நினைவு கூர வேண்டும். அதாவது 20ம் நூற்றாண்டில் விஞ்ஞான வளர்ச்சிதான் வரலாற்றில் இது வரை காணாத அளவிற்கு மனிதனையும் சக மனிதர்களுடன் நெருக்கமடைய உதவியது. தொடர்புசாதனங்களின் வளர்ச்சியும் பல்வேறுவகையான பயணங்களின் வளர்ச்சியும் மனிதரிடையே நிலவிவந்த இடைவெளியை குறைத்துள்ளன. இதுவே முழு மனித குலத்தையும் ஒரு 'உலகளாவிய கிராமம்' (Global Village) என்ற கருத்து நிலை இருப்பிற்குள் தள்ளுகிறது. இப்படியான ஒரு சூழலில் மனிதன் ஒரு பொதுவான வகைமாதிரியைப் பின்பற்றி ஒரு பொதுநிலமையை அடைவதன் மூலம் மனித குலம் சமநிலையை அடையலாம், என்ற கருத்து பலரிடம் நிலவிவருகிறது.

இருப்பினும் 20ம் நூற்றாண்டில் பெருமளவு நிகழ்ந்த கண்டுபிடிப்புகளும் வளர்ச்சிகளும் மனிதனுக்கு ஏனைய சமூகங்கள் மீதும் சக மனிதன் மீதும் இயற்கை மீதும் மேலாதிக்கம் செலுத்த உதவும் ஒரு சாதனமாகவே விஞ்ஞானம் பயன்பட்டுள்ளது. கணினியின் (Computer) வருகை 20ம் நூற்றாண்டு விஞ்ஞானத்தின் மிகவும் முக்கியமான ஒரு திருப்புமுனையாகக் கொள்ளப்படலாம்.

கணினி மனிதனின் பல்வேறு தொழிற்பாடுகளை சுலபமாக்கியுள்ளது. அதன் பாவனை பற்றியும் பாவனைக்காக்கான எதிர்கால சாத்தியப்பாடுகள் பற்றியும் பக்கம் பக்கமாக எழுதிக்கொண்டே செல்லலாம். ஆனால் 90 களிலே கணினியின் பரவலான பாவனையுடனும் அதன் புதிய பயன்பாடுகளுடனும் பல சந்தேகங்களும் குழப்பங்களும் மேற்கிளம்பவே செய்கின்றன.

கணினி காலப்போக்கில் மனிதனை அவனது மனிதத்தன்மையிலிருந்தும் உலக யதார்த்தத்திலிருந்தும் பிரித்துவிடும் அபாயம் என்றுமில்லாதவாறு உணரப்படுகிறது. மனிதனை இயற்கையிலிருந்து பிரித்த விஞ்ஞானம் இன்று மனிதனை அவனது மனிதத் தன்மைகளிலிருந்து பிரித்து விடுமா? என்ற கேள்வியாகவே படுகிறது.

தனிப்பட்ட கணினிகள் (Personal Computer) உபயோகம் எல்லாம் செல்வந்த நாடுகளில் இப்பொழுது மிகவும் சாதாரணவிடயம் அதன் பயன்பாடுகளும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. தனிப்பட்ட கணினிகளின் பயன் பாட்டின் ஒரு முக்கிய திருப்பம் தான் ''கணினி வழி வலைப்பின்னல் தொடர்பு முறை'' (Cinterntet) இந்த வலைப்பின்னல் தொடர்பு முறை கணினிக்கென்ற பிரத்தியேகமான ஒரு தொடர்புச்சாதன முறையாகும்.

இந்த வலைப்பின்னல் தொடர்பு முறையின் செயற்பாடு அடிப்படையில் எளிமையானது. நாட்டுக்கு நாடு வலைப்பின்னல் மையங்கள் உண்டு. இலங்கையில் உள்ளதை 'LankaInternet' எனப்படுகிறது. இந்த மையங்களுடன் தனிப்பட்ட கணினி வைத்திருப்பவர் தொலைத்தொடர்பு பொறி மூலம் தொடர்பு கொள்ளலாம். அதே வேளை இந்த மையங்கள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. இப்படியான இணைப்பு வாயிலாக பிற நாட்டு தொடர்பு மையங்களுடனும் அவற்றுடன் தொடர்புடைய பிறநாட்டு தனிப்பட்ட கணினிகளுடனும் ஒருவர் வீட்டிலிருந்தபடியே தொடர்பு கொள்ளலாம்.

இந்த வலைப்பின்னல் தொடர்புசாதன முறைமை நாளுக்கு நாள் புதுப்புது உத்திகளை அறிமுகப்படுத்தி வருகிறது. இதில் வார்த்தைகளும் எழுத்துகளும் மட்டுமன்றி ஒலிஒளி வடிவங்களும் பரிவர்த்தனை செய்யப்படலாம். இந்தத் தொடர்பு சாதன முறைமை பரவலாக்கப்பட்டு மேலும் வளர்ச்சியடையும் தருணத்தில் ஒருவர் இன்னொருவருடன் தொடர்பு கொள்வதற்கு அவரை நேரடியாகச் சந்திக்காமல் தொலைக்காட்சி மூலமே உரையாடலாம். அதே போல் வேலைத்தளத்திற்கு செல்லாது வீட்டிலிருந்தபடியே தனது தொழிலைச் செய்யலாம். தனக்குத் தேவையான பொருட்களை வீட்டிலிருந்தபடியே தொலைக்காட்சிமூலம் பார்த்து தெரிவு செய்து கொள்ளலாம்.

ஒரு நாட்டிலிருக்கும் ஆய்வாளர்கள் அல்லது விஞ்ஞானிகள் இன்னொரு நாட்டிலிருக்கும் நூலகத்திலோ அல்லது ஆய்வாளரிடமிருந்தோ தனக்குத் தேவையான நூல்களையும் கட்டுரைகளையும் பெற்றுக்கொள்ளலாம். இப்படியாக இதன் பயன்பாட்டை சொல்லிக் கொண்டே போகலாம்.

இருப்பினும் இதில் ஒரு அடிப்படையான விடயத்தை நாம் காணத்தவறக்கூடாது. அதாவது இது யதார்த்ததிற்கு புறம்பான 'இயந்திரத்தால் கட்டுப்படுத்தப்பட்ட காலவெளிக்குள்' (Cyber space) மனிதனை இட்டுச் செல்கிறது. இந்த் கால வெளி மனிதனது அறிவியல் பரிணாமத்தை பெருமளவு ஆக்கிரமிக்க வல்லது.

மனிதன் பௌதீக யதார்த்த உலகில் இருந்து கொண்டே இந்த 'இயந்திர கால வெளிக்குள்' சஞ்சரிக்கிறான். இந்த வெளிக்கூடாக அவன் வேண்டியவர்களுடன் தொடர்பு கொள்ளலாம். ஆற்ற வேண்டிய கருமங்களை ஆற்றலாம்.

இங்கே நேரடியான மனிதத் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் மனிதரிடையே தொடர்பு ஏற்படும் போது பரிமாறும் அந்த மனிதத்துவ உறவு மனிதத்துவ புரிதல் தேவையற்ற ஒன்றாகிவரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது படிப்படியாக மனிதன் மனிதனுடன் தொடர்பு கொள்வதிலிருந்து மனிதன் இயந்திரத்துடன் தொடர்பு கொள்ளும் நிலைக்கு இட்டுச் செல்கிறது.

கணினி உலகின் விஸ்தரிப்பும் வியாபிப்பும் இத்துடன் நின்று விடவில்லை. அணமைக் காலங்களாக இது இன்னொரு படி முனனே சென்றுள்ளது. இதுவரை பௌதீக யதார்த்த உலகில் இருந்து கொண்டு 'இயந்திர கால வெளிக்குள்' சஞ்சரித்த மனிதனை இப்பொழுது இயந்திரத்தால் உருவாக்கப்பட்ட 'ஏறக்குறைய யதார்த்த உலகிற்குள் '(Vertual Reality system) இட்டுச் செல்கிறது இந்தக் கணினி யுகம்.

உலகின் யதார்த்தை அதன் தன்மையை நாம் எமது புலன்களின் வாயிலாக உணர்ந்து கொள்கிறோம். எமது அனுபவங்களெல்லாம் எமது புலன்கள் வாயிலாகவே எமக்குக் கிடைக்கின்றன. ''ஏறக்குறைய யதார்த்தம்'' எனப்படும் இந்த கணினி உலகை உருவாக்க எமது எல்லா புலன்களும் செயற்கையாக கணினிமூலம் தூண்டப்படுகின்றன.

தலைக்கு தலைக்கவசம் அணியப்பட்டு காதுகளும் கண்களும் மறைக்கப்படுகின்றன. கண்களுக்கு முன்பாக முப்பரிமான திரை அதாவது தொலைக்காட்சித் திரையை ஒத்த இரு சிறிய திரைகள் பொருத்தப்பட்டு ஒரு செயற்கையான உலகக்காட்சி காண்பிக்கப்படுகிறது. அதே வேளை காதுகளும் அந்த செயற்கையான உலகின் சத்தங்களைக் கேட்கிறது. கைகளுக்கு கையுறைகள் அணிவிக்கப்பட்டு செயற்கையாகக் கொடுக்கப்படுகிறது.

இப்படியாக சகல புலன்களும் கணினியின் உதவியுடன் அமைக்கப்பட்ட செயற்கை உலகை உருவாக்கும் பொருட்டு தூண்டப்படுகின்றன.

இவையெல்லாம் ஒரு காலத்தில் விஞ்ஞானக் கற்பனைக் கதைகளில் மட்டும் இடம் பெற்று வந்தது. இப்பொழுது உண்மையிலேயே இப்படியான செயற்கை அமைப்புக்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இந்த 'ஏறக்குறைய யதார்த்த உலகு', 'வலைப்பின்னல் தொடர்பு முறை', இயந்திர கால வெளியை (Cyber space) போல்லல்லாது மனிதனை புறம்பான மழுமையான ஒரு பௌதீக அறிவியல கால வெளிக்குள் இட்டுச் செல்கிறது.

இப்படியான வளர்ச்சி மனிதனை அவனது உயிரியல் தன்மையிலிருந்தும் மனிதத்துவத்திலிருந்தும் பிரித்து ஒரு வித இயந்திர நிலைக்கு இட்டுச் செல்லும் அபாயம் உள்ளது. இது ஒரு வேளை 'தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலும்' என்ற கூர்ப்புக் கொள்கையின் (Theory of Evolution)
ஒரு பரிமாணமோ எனவும் சிந்திக்கத் தோன்றுகிறது. காரணம் இன்னமும் சில காலங்களில் கணினி அறிவு அற்றவர் தப்பிப்பிழைத்தலுக்குத் தகுதியற்ற நிலைக்குத் தள்ளப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.


ஆனாலும் இதுவரை காலமும் கூர்ப்பில் உயிரியல் ரீதியில் அனுகூலமான வளர்ச்சியைப் பெற்ற உயிரிகளே தப்பிப்பிழைத்தலுக்கான தக்க இசைவாக்கமடைந்தனவாக கொள்ளப்பட்டு அவைதான் ஈற்றில் வெற்றி கொண்டன.

மனிதன் தற்பொழுது கணினியின் உதவியுடன் அடைந்திருக்கும் நிலை இதனின்று முற்றிலும் வேறுபட்ட உயிரியல் சாராத தனித்த பௌதீக ரீதியான வளர்ச்சி. ஆக கணினிவாயிலாக மனிதன் அடைந்துள்ள வளர்ச்சி நெறி டாவிவின் கூர்ப்புக் கொள்கையின் வெளிப்படாக அன்றி ஏதோ ஒரு விதத்தில் Alvin Toffler இனது கருத்தை வலியுறுத்தும் ஒரு போக்காகவே கருதத் தோன்றுகிறது..

# தணிக்கையும் அரசியல் விளைவும்

அரச சார்பற்ற நிறுவனங்களை சுயாதீனமாக இயங்க விடாது தன் அதிகாரத்தை அரசு திணிக்க முயலுவது தூரநோக்கற்ற ஜனநாயக விரோதச் செயலே அதே போல் அரசினால் அவசர காலச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட செய்தித் தணிக்கையும் ஜனநாயக விரோதச் செயலாகும்.
கொள்கை ரீதியில் இந்த நடவடிக்கையானது கருத்து வெளியிடும் சுதந்திரத்தையும் பிரஜைகளுக்கு தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையையும் மீறுகின்றது. மனித உரிமைகளுக்காக போராடும் அனைவரும் இத் தணிக்கையை எதிர்த்து நிற்கவேண்டும். இன்று நான் இப்பிரச்சினையை இவ் அடிப்படையில் நோக்காமல், தணிக்கையால் ஏற்படக்கூடிய பயங்கரமான அரசியல் விளைவுகளின் அடிப்படையில் நோக்குகின்றேன்.
அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைத்துள்ளது. தீர்வின் நோக்கம் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதாகும். அது தொடர்பாக குறிப்பிட்ட இன மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில், சுயாட்சியை வழங்குவதற்கு அரசு விருப்பம் தெரிவித்துள்ளது. இப்படியான நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் சாதாரண உரிமைகளை பெற்றுக்கொடுக்கலாம் என அரசு எண்ணுகின்றது. இச் செயல் மூலம் உடன்படிக்கையை மீறியது தொடர்பான எண்ணங்களை மக்கள் மனத்திலிருந்து நீக்கி விட்டு அரசு மீதான நம்பிக்கைத்தன்மையை அரசு மக்கள் மனதுள் ஏற்படுத்த வேண்டும். யுத்தம் செய்வதாக இருப்பின் அது ஆயுதங்களற்ற சிவில் சமூகத்தினருக்கு எதிராக அல்ல என உறுதி செய்தல் வேண்டும். யுத்தச் செய்தி தணிக்கை இச் செயல்களுக்கு எதிரானதாகும். இதனால் மக்களுக்கு ஏற்படும் தீமை தகவல் அறியும் உரிமை தமக்கு இல்லை என்ற எண்ணமாகும்.
சிங்கள நோக்கில் அவதானித்தாலும், தணிக்கையின் பலன்கள் தீமையாகவே உள்ளன. அரசின் தீர்வு யோசனைகள் தொடர்பாக சிங்கள மக்கள் மத்தியில் பல விவாதங்கள் காணப்படுகின்றன. இவ்விவாதங்கள் சென்ற இரண்டு மூன்று மாதங்களில் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளன.
'அதிகாரப்பிரிவினையை அர்த்தம் நிறைந்ததாக அனைவரும் கருதுகின்றனர். மாதுளுவாவ சோபித தேரோ அவர்களும், தினேஷ் குணவர்தன அவர்களும் கூட அதிகாரப்பிரிவினையை ஏற்றுக்கொள்கின்றனர். விவாதமானது அதிகாரப் பகிர்வின் அளவிலும் ஒற்றையாட்சிலுமே தங்கியுள்ளது. இவை பயங்கரமான பிரச்சினைகள் என்பகை ஏற்றுக்கொள்கின்றேன். ஆனால் ஒற்றை ஆட்சி தேவை எனறு பிரச்சினையை ஆரம்பித்த பலர் இன்று அந்நிலையிலிருந்து விலகியுள்ளனர். அதிகாரப்பிரிவினையை குணதாச அமரசேகர போன்றச் சிலரே எதிர்க்கின்றனர்.
சிங்கள இனவாதம் சிறுபான்மையினரின் உரிமைகளை அங்கீகரிக்கும் நிலைக்கு இறங்கியுள்ளது என்பது எனது அபிப்பிராயமாகும்.
எப்படியாயினும் மக்களும் தீர்வுயோசனைகள் பற்றி தமது அபிப்பிராயங்களை, கருத்துக்ளை தெரிவிக்கும் சந்தர்ப்பம் ஏற்படும். இத்தீர்வு யேசானைகள் தற்கால பிணக்குகளுக்கு தீர்வாகவும் யுத்தத்திற்கு தீர்வாகவும் அமைந்துள்ளது. தீர்வுயோசனையை நடைமுறைப்படுத்துவதன் மூலம் தமிழர்களின் உரிமைகளை எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதுடன் தமிழர் விடுதலை தொடர்பான புலிகளின் நீண்ட நோக்கும் தகர்த்தெரியப்படலாம். இவ்வாறான அமைப்பின் ஆயுத நிர்பந்தத்திற்கு உடன்படாது தமது உரிமைகளை வென்றெடுக்கலாம் என்ற நம்பிக்கை தோன்றினால் புலிகளின் சார்புத் தன்மை நீக்கப்படலாம்.
இதன்படி தீர்வு யோசனைகளின் அடிப்படையிலான யுத்தமும் அரசியலும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. யுத்ததின் யதார்த்தத்தை யுத்தத்தின் பயங்கரமான விளைவுகள், யுத்தம் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்முடியாமை என்பவற்றை சிங்கள மக்கள் புரிந்துக்கொள்ள வேண்டும். யுத்தம் தொடர்பான புத்திசாலித்தனமான விளக்கம் இருப்பின் மூலமே அரசியல் தீர்வுத் தொடர்பான முக்கியத்துவத்தை அறிந்துக்கொள்ளலாம். அது தொடர்பான யதார்த்த நிலமை அவர்களைச் சென்றடைந்தல் வேண்டும். யுத்ததின் உண்மை நிலையை மக்களுக்கு அறிவிக்காமையினால், உண்மையான இராணுவ இழப்புக்களை தெரிவிக்காமையினால் யுத்தம் தொடர்பான தீர்வை, தீர்வுயோசனைகள் தொடர்பான முடிவை மக்களால் தெரிவிக்க முடியாத நிலை ஏற்படும்.

யுத்தத் தணிக்கை காரணமாக இச் செயல்கள் அதிகம் பாதிப்டையலாம். தணிக்கை நீண்ட காலமாக இருப்பின் மக்களின் யுத்தம் தொடர்பான அறிவு விகாரமடையக்கூடும். அப்படியாயின் அரசியல் தீர்வுகளின் காரணமாகவும், அரசு தோல்வி அடைய நேரிடும். இதனால் கொள்கை ரீதியாகவும், பிரயோகரீதியாகவும் தணிக்கை தேவையற்ற தொன்றாகும்.



சாள்ஸ் அபேசேகர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நாமிருக்கும் நாடு நமது

யாழ்ப்பாணத்தில் நாடகம் என்றால், நாடக அரங்கக்கல்லூரி உடனே நினைவு வந்து விடும். 1977இன் பின்னர் **குழந்தை ம.சண்முகலிங்கம், அ. தாசீசியஸ்** ஆகியோரால் தாபிக்கப்பட்டு இன்றுவரையும் தமிழ் நாடகத்துறைக்கு வளம் சேர்த்து வரும் கல்லூரி இது. தற்போது **க. சிதம்பரநாதன்** அவர்களால் கல்லூரி நாடகத்திற்கு புதிய அர்த்தம் கொடுத்து வருகிறது. இவ்வகையில் சிதம்பரநாதன் அவர்களால் இறுதியாக நெறியாள்கை செய்யப்பட்ட நாடகமே **"நாமிருக்கும் நாடு நமது"** என்பதாகும். நாடகத்தின் பல்வேறு பரிணாமங்களை இவர்களின் பரிசோதனை முயற்சிகள் மூலம் காணமுடிகிறது. யாழ்ப்பாணத்தின் தற்போதைய சூழ்நிலையில் பொருண்மிய மேம்பாடு இங்கு மிக அவசியமானதொன்று. இம்மேம்பாட்டுக்கான அரங்க ஆற்றுகையே **"நாமிருக்கும் நாடு நமது"**



தேசத்தை நேசிக்கும் ஒரு பெருங்கூட்டம் அவர்களிடையே ஒரு 'அம்மல்' கூட்டம் (தேசத்தை நேசிக்காத ஆனால் தேசத்தின் முதுகெலும்பு தாம் தான் எனப் பறைசாற்றிக் கொள்பவர்கள்.) தேசத்தை நேசிக்கும் கூட்டத்தை சூழ்ச்சியால் நசுக்க முனையும் பெரிய ஐயா, இரண்டு பகுதியினரையும் வென்று தேசத்திற்கு பச்சை சாத்துகிறார்கள் இதுதான் அளிக்கையின் சாராம்சம்.

அளிக்கையின் ஆரம்பத்தில் சுதேச உணர்வைத் தட்டியெழுப்ப வரும் ஆத்மா நல்லம்

இது நாடகத்தின் ஆரம்பத்திலிருந்தே பார்வையாளர்களுக்குத் தேவையான உணர்வைத் தூண்ட உதவுகிறது. தொடர்ந்து வரும் 'அம்மல்' கூட்டம் நகைச்சுவையாளர்களாகவே காண்பிக்கப்படுகின்றனர். எனினும் பார்வையாளர்களின் உள்ளுணர்வில் (Sub Conscious) அம்மல் கூட்டத்தின் மீது இவ்வம்சம் வெறுப்பைத்தூண்டலாம். இவர்களைப் பயன்படுத்தி பொருண்மியத்தை மேம்படச் செய்ய எண்ணும் நம்பி நம்பிக்கை தருபவராக இருக்கிறார். சலுகைகள் வழங்கி பொருண்மிய மேம்பாட்டைத் தடுக்க நினைகும் பெரிய ஐயாவை பார்வையாளர்களும் சேர்ந்து விரட்டியது அளிக்கையின் வெற்றிதான். இந்நாடகத்தின் இறுதியில் 'பச்சை சார்த்துதல்' எனும் காட்சிப் பகுதியை கலைஞர்கள் நடித்தார்கள் என்று சொல்வதை விட செய்தார்கள் என்று கூறுவதுதான் மிகப் பொருத்தமாகும். அப்படி ஒரு உணர்வுடன் செய்தார்கள்.

இவ்வரங்க ஆற்றுகையானது சாதாரண நாடக சமன் பாட்டை நிராகரித்திருந்தது.

இது சகல அம்சங்களிலும் அப்பாலுக்கும் அப்பாலான அரங்க அளிக்கையாகும். இப்படைப்பு எதிர்பார்ப்பையும், திடீர் திருப்பத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தைக் கைவிட்டிருந்தது. மேலும் இது பார்வையாளர்களை செயல் ஊக்க நிலைக்கு உற்சாகப் படுத்துகின்ற தளை நீக்கத்துக்கான அரங்கு (Theatre for Liberation)எனலாம்.

**அரங்கன்**

இவ்வாற்றுகையில் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாகப் பார்வையாளர்களுடன் கலந்துரையாடச் சந்தர்ப்பம் இருந்தது. இவ்வாறான கலந்துரையாடல்களினூடாக நாடகத்தின் அழகியல் அம்சங்கள் குறைக்கப்பட்டு அல்லது இல்லாமற் போவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் இருந்தன. இதனால் பார்வையாளர்களுக்கு இந்நிகழ்வானது சலிப்பைக் கொடுத்திருக்கலாம். என்பதையும் மறுப்பதற்கில்லை. இதனையும் சுவாரஸ்யமாகச் செய்தால் இன்னும் நன்று.

இப்படைப்பினூடாக நாடக அரங்கக் கல்லூரிக் கலைஞர்கள் இன்னொரு பரிணாமத்தைத் தொட்டிருக்கிறார்கள் என்பதைத் துணிந்து கூறலாம். இக்கலைஞருக்கு வழிகாட்டிய அல்லது நெறிகையாள்கை செய்த சிதம்பரநாதன் மிகக் குறிப்பிட வேண்டிய ஒருவர். இவர்களது இத்தகைய முயற்சிகளுக்கு வரலாறு கட்டாயம் கைமாறு செய்யும்.

# செத்தாத் தான் சுடுகாடு தெரியும்

சரிநிகர் இதழ் 77இலும், 82இலும் பூவரசு, நந்தலாலா இலக்கிய அமைப்புக்கள் பற்றி இடம் பெற்ற இரு குறிப்புக்களையும் பற்றி இவ்விதழில் நானுமொரு சிறு குறிப்பை முன்வைக்கலாம் என எண்ணுகிறேன்.

பூவரசு இலக்கிய அமைப்பின் ஏற்பில் "மலையகத்தமிழ் இலக்கியம் அன்றும் இன்றும்' 'எனும் தலைப்பில் ரி. ஜோதிக்குமார் பேசியதாக ஒரு குறிப்பு வந்தது. ஆனால் அவர் அங்கு என்ன பேசினார் என்பது பற்றி எமக்குத் தெரியாது. ஆனால் அவரின் ஆளுகைக் குட்பட்டதாக வெளிவந்த தீர்த்தக்கரை (ஐந்து இதழ்களும்) நந்தலாலா (3இதழ்களும்) இன்றும் அனைவராலும் மதிக்கப்படுகின்றன.

அவ்வாறு மதிப்பை ஏற்படுத்திய சஞ்சிகைகள் வெளிவரக்காரணமான ஜோதிக்குமார் அங்கு ஆனந்தனால் கேட்டகப்பட்ட மூன்று வினாக்களுக்கும் செ.யோகராஜாவினால் கேட்கப்பட்ட இரு வினாக்களுக்கும் விடையளிக்காதது கண்டு மலையக இலக்கியவாதிகளுக்கு மட்டுமல்ல, ஆர்வலர்களுக்கும் விசனத்தையும் மனவருத்தத்தையும் அளித்தது. ஏனெனில், இவ்வினாக்களுக்குரிய விடைகள் மலையக இலக்கியத்தில் ஈடுபாடுடைய அனைவராலும் பதிலளிக்கக்கூடியவையே.

இதுவொரு புறம் இருக்க 82வது இதழிலும் மற்றுமொரு குறிப்பு. மலையகத்தில் இதுவரை மொத்தமாக 17 சிறுகதைத் தொகுப்புக்கள் வெளிவந்துள்ளன. அவைகளில் தரமான தொகுப்புக்களில் ஒன்றாக தீர்த்தக்கரைச் சிறுகதையும் உள்ளது. என்பதனை துணிந்து கூறலாம். ஏனைய பிரதேச சிறுகதைகளுக்கு உருவ உத்திகளில் நிகரானது எனக் கூறாது விட்டாலும் மலையகத்திலிருந்து வெளிவந்தவைகளில் தரமானவையே!

நுனிப்புல் மேய்பவர்களை அல்லது மேய்பவர்கள் போல் நடிப்பவர்களினால் எவ்வாறு ஒரு காத்திரமான விமர்சனத்தை நிகழ்த்த முடியும். இது யாருடைய குறைபாடு? நந்தினி சேவியர் பற்றிய கணிப்பை அவர் பேணிவிட்டார். மண்டூர் அசோகா பற்றிய கணிப்பை அவர் நிரூபித்து விட்டார்.

ஒரு கதை கூட இத்தொகுப்பில் எழுதாத ஜோதிக்குமாரை எப்படி பதிலுரையாற்ற அழைக்க முடியும் என தவராசா ஒரு வினாவையும் எழுப்பியுள்ளார். தவராசா அவர்கள் இதனைப்பற்றி அலசி ஆராய்ந்த பின்பு எழுதியிருக்க வேண்டியவிடயமிது. இத்தொகுப்பில் 5 எழுத்தாளர்கள் வேறுவேறு பெயர்களில் எழுதியுள்ளார்கள். அவர்கள் ஏதோவொரு காரணம் கொண்டு அதனை வெளியிடவிரும்பவில்லை. அதில் ஜோதிக்குமாரும் ஒருவர் என்பது மட்டும் உண்மை. குறை கூற முன் சற்று யோசியுங்கள்.

ராமையா முருகவேள் பற்றிய கணிப்புக்கு நன்றி. இத்தொகுப்பில் மிக இளையவராக இவர் காணப்படுகிறார். 90களில் மலையக சிறுகதைக்கு வளமூட்டுபவர்கள் எனும் போது நிச்சயமாக இவரையும் குறிப்பட வேண்டும். நந்தலாலா 3வது இதழில் வெளிவந்திருக்கும் "மோனத்திருக்குதடி வையம்" எனும் சிறுகதை இதற்கு மேலும் வலுவூட்டுகிறது.

மலையக இலக்கியமானது ஈழத்தின் ஏனைய பிரதேச இலக்கியங்களை விட தனித்துவமானது. அதேவேளை ஒப்பீட்டு ரீதியில் பின்நிற்கின்றது என்பதும் உண்மை. ஆனால் இதற்கு பின் புலமாக பல காரணங்களும் உள. விமர்சனம் எனும் போது அதனையும் கவனத்திற் கொள்ள வேண்டும். பத்து ஆண்டுகளுக்கு முன்னால் மட்டக்களப்பு இலக்கியம் எப்படிப்பட்டது. கல்முனைப் பிரதேசம் நீங்கலாக என்பதனையும் எண்ணிப்பார்க்கவேண்டும்.

இங்கு நந்தலாலா மலையக இலக்கிய அமைப்பாகவும், பூவரசு மட்டக்களப்பு இலக்கிய அமைப்பாகவும் உள்ளதனால் கருத்துக்களை முன்வைக்கும் போது கவனம் தேவை.ஏன் தான் இவ்வாறு பூவரசு மூக்குடைபடும் வேலைகளில் ஈடுபடுகின்றதோ தெரியாது.

ஒரு பிரதேச இலக்கிய வளர்ச்சிபற்றி இன்னொரு பிரதேசத்தினர் அறிய முற்படும் போது அதற்கு மிகப் பொருத்தமானவர்களையும் அதற்குரிய பூரணத்துவமான வேலைகளையும் செய்யவேண்டும். இல்லாவிட்டால் ஒக்.16 அன்று ஊர்கோலம் நிகழ்ச்சியில் எம்.என்.ராஜா என்பவர் மலையக இலக்கிய வளர்ச்சிப் பற்றி மலரன்பன், மு. சிவலிங்கம், மல்லிகை சி.குமார் என்போரிடம் பேட்டி எனும் பேரில் நடத்திய கேலிக் கூத்தாகவே முடியும். "முன்னே பின்னே செத்தாத்தான் சுடுகாடு தெரியும்" எனும் பழமொழிதான் இவைகளை எண்ணும் போது என் நினைவுக்கு வருகின்றது,

ச. மணிசேகரன்

# திறந்த வெளிநாடகங்கள்

## புதிய பரிமாணங்களை நோக்கிச் செல்ல வேண்டும்

### மனுபந்து வித்தியாபதி

**தமிழில் ரத்னா**

அஜித் கலப்பதி வருவதற்கு நேரமாகிவிட்டது.

அந்த மாலைவேளையில் கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னால் உள்ள பாதையில், மனுவும் நானும் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிந்தோம். பதுளைக்கான புகையிரதத்தில் ஏற முடியாதா?..... எங்கள் மனம் குழப்பத்தில் ஆழ்ந்து விட்டது. நாங்கள் எதிர்ப்பார்ப்பைக் கைவிட்ட அந்த இறுதி நிமிடத்தில் அஜித்தின் வருகை இடம் பெற்றது. நாங்கள் பயணத்லதை ஆரம்பித்தோம். சரி... நாம் தொடர்பு கொண்டது எந்த மாதிரியான பயணத்திற்கு? பெரும் பாலான தொடர்பூடகவியலாளர்கள் போக விரும்பாத பயணத்துக்குச் செல்லவே நாம் முற்பட்டோம். இந்நாட்களில் அதிகம் வெளிப்படாத ஓர் நாடக சம்பிரதாயம் தொடர்பான எங்கள அனுபவங்களை உங்களிடம் பகிர்ந்தளிக்கவே முயலகிறோம். அது தெரு வெளி அரங்கு தொடர் பானது எனக் கூறினால் நாடக இரசிகர்களுக்கு கீழ்தரமான எண்ணங்கள் ஏற்படுமா?

நான் நினைப்பது அப்படித்தான் அன்ரன் மிஹிந்துகுல அவரின் சகோதர்கள் அடங்கியதே 'தாரண' தெரு வெளி அரங்க நாடகக் குழுவாகும். எங்கள் அபிலாஷைகள் எனன வென்றால் அவர்கள் எப்படித் திறந்த வெளி அரங்கு நாடகங்களைத் தாயாரிக்கின்றாரகள மக்கள் இவர்களின் நடிப்பு மொழி என்பன வற்றைத் தெரிந்து கொள்கின்றனரா? என்பன வற்றை ஆராய்ந்துப் பார்ப்பதாகும்.

'தாரண' திறந்த அரங்க குழுவினர் ஒவ்வொரு [illegible] காட்டிக் கொண்டிருந்த போது ஹற்றனில் நாம அவர்க ளோடு இணைந்துக் கொண்டோம. நடுநிசியில் கடுங்குளிரின் மத்தியில் நெருப்புப் பந்தத்தின் துணையோடு நாம் அவர்களின் இருப்பிடத் துக்குச் சென்றோம். எங்களைக் கண்டவுடன் அன்ரன் ஆச்சரியமடைந்தார். உண்மையில் அவர்கள் எங்களை எதிர்ப்பார்க்கவில்லை. பத்திரிகையாளர்களின் மேல் வெறுப்போடு அவர்கள் இருந்துள்ளனர். அவர்கள் அப்படி நினைப்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதே. ஏனெனில் எமது தொடர்பூடகங்கள் இவ்வாறன வர்களைக் கண்டு கொள்வதே இல்லை. பெருமளவு பிரபல்யங்க ளுக்கு மத்தியில் அன்ரன் போன்ற நபர்க ளுக்குக் கிடைப்பது சிறிய இடமாகும்.

அன்ரனினதும். திறந்தவெளி அரங்குக் குழுவினதும் செயற்பாடுகளை ஆராய முற்படும் போது. இலங்கையில் திறந்த வெளி அரங்கு குழுக்கள் பெற்றுள்ள முன்னேற்றத்தைக் குறிப்பிடல் வேண்டும். பிறப்பிலிருந்து மனிதன் வித்தியா சங்களை விரும்புகிறான். திறந்த வெளி அரங்கு நாடகங்களில் உள்ள சம்பிரதாயங்கள் நம்மை மேடை நாடகத்திலிருந்து தூர விலக்குகின்றன.

திறந்த வெளி அரங்க நாடகங்கள் அபூர்வமான வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றன. அந்த வேறுபாடுகள் நகரங்களுக்கும். பிரதேசங்களுக்கும். ஏற்ப வேறுபடுகின்றன. எப்படி இந்த வேறுபாடுகள் ஏற்படுகின்றன. இதை நாங்கள் ஆராய. நகரங்கள் பலவற்றுக்குச் சென்றோம். ஹற்றன். ஒக்கம்பிட்டி பதுளை. பண்டாராவளை. கதிர்காமம். ஆகிய நகரங்களுக்குச் சென்றோம். மக்கள் இந்நாடகங்களை ரசிப்பது வெவ் வேறு பட்ட விதங்களில் என்பதை அறிய [illegible] அனுபவங்கள். மூலம் வேறுபட்ட ரசனைகளை கொண்டிருக்கிறார்கள்.

இந்நாடகங்களை ரசித்த பெரும்பாலானவர்களுக்கு இது மாறுபட்ட அனுபவமாக அமைந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

நாங்கள் ஹற்றன் நகருக்குச் சென்றது அதிகாலையில் மழைதூரிக் கொண்டிருந்த போதாகும். அன்ரன் குழுவினர் பாடலைப் பாடிக்கொண்டு. மக்களை அழைக்கும் போது மக்கள் சந் தோஷத்தோடு பார்க்கத்தொடங்கினர். நாடகத்தை பார்ப்பவர்கள் பெரும்பாலும். தமிழர்கள் ஆவர். திறந்த வெளி நாடகங்கள் பெரும்பாலும் வசனங்கள் மூலம் நடித்துக் காட்டப்படும் இயல்பைக் கொண்டவை. இதற்குக் காரணம் நமது படச்சட்டமேடை நாடகச்சம்பிரதாயம் ஆகும்.

நடிப்பதைத் தவிர பாடல்களையாவது தமிழில் பாட முயற்சிக்காதது. நமது மனதுக்கு சிரமாக இருந்தது.

ஒக்கம்பிட் டிய. பதுளை மொனராகல. கதிர் காமம் ஆகிய நகரங்களில் வெவ்வேறு ரசிக்கத் தன்மை யைக் கொண்டமக்கள் பிரிவினரைக் காணக் கூடியதாக இருந்தது. எப்படி இருப்பினும் நம் ரசிகர்களுக்கு எதையும். ரசிக்கும் தன்மையும் விளங்கிக் கொள்ளும் தன்மையும் சிறப்பாகவே காணப்படுகிறது.

திரைப்படம் ஒன்றை பார்க்க வேண்டுமாயின் வெகுதூரத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது. அப்படிச் சென்று திரைப்படத்தை ரசிக்க எங்களுக்கும் விருப்பம் இல்லை.

ஒக்கம்பிட்டியாவில் இருந்து மீண்டும் பஸ் ஏறும் போது படச்சட்டமேடையை விட்டுவிலகி வெளியே செய்யக்கூடியது எவ்வளவோ உண்டு என நினைத்தேன் போல் கொழும்பைத் தவிரப்பிற இடங்களில் மக்கள் கலைப்படைப்புக்களை ரசிப்பதற்கு சந்தர்ப்பங்கள் அற்று இருக்கிறார்கள் என்பதை அறியக்கூடியதாக

முழு வாழ்க்கை காலத்திலும். இவ்வாறான நாடகங்களை முதன் முறையாகப் பார்க்கவென பல சகோதர சகோதரிகள் கூடி நின்றனர்.

ஹற்றனில் நாடகத்தை கண்டு களித்த பல சகோதரர்கள் நாடகத்தை ரசித்தும். எங்களை பார்த்தும். ஏதோ வேற்றுக் கிரகத்தில் இருந்து வந்தவர்கள் என்ற நினைப்பில் ஆகும். [illegible] எமக்கும். அன்ரன் குழுவினருக்கும் பெரும் சந்தோஷத்தை அளித்தன. அன்று அப்படி நடந்ததற்கு காரணம் அங்கு குழுமியிருந்தவர்கள் பலருக்கு சிங்களம் தெரியாமை ஆகும். மிகவும் பிரயத்தனப்பட்டு நாடகத்தை

இந்த அறிவு எங்கள் இப்பயணம் மூலம் தெளிவடைந்ததாகும். ஒக்கம்பிட்டியக் கிராமத்தில் இருப்பது பெரும்பாலும் அகழ்வுத் தொழிலாளர்கள். அவர்களில் பெரும்பாலனவர்கள் அன்றாட பத்திரிகைகளைக் கூட படிக்காதவர்கள். அவர்கள் வாழ்வது பெரும் பாலும் ஒக்கம்பிட்டி என்ற உலகத்திலாகும். ஒக்கம்பிட்டியில் உள்ள பல் கலைக்கழக மாணவர் ஒருவர் நமது நாடக நிகழ்த்திக் காட்டலின் பின் சிறிய சொற்பொழிவொன்றை ஆற்றினார். "நீங்கள் எங்கள் கிராமத்திற்கு வந்து நாடகத்தை அரங்கேற்றி யதன் மூலம் பெரும் சேவை புரிந்துள்ளீர்கள். நாங்கள் விருந்தது. அவர்க ளுக்காக நாம் என்ன செய்ய முடியும்? அன்ரன் குழு பல பிரச்சினைகளுக்கு மத்தியிலும் செய்யும் இவ்வாறானகலை நிகழ்ச்சிகளை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. பணம் அதிகாரம். பிரபல்யம். வஞ்சனை ஆகியவற்றின் மூலம் தீர்மானிக்கப் படும் நமது மேடை படைப்புக்களை மீறி. மக்களை அடைய முற்படும் இவர்களது முயற்சி அருமை என்றே கூற வேண்டும்.

எப்படியாயினும் திறந்த வெளி அரங்கு நாடகங்கள் தமது எல்லைகளைக் களைத் தெறிந்து விட்டு எப்போது முன்னேறும்? மறைவாகாக நடக்கும் இந்நாடக சம்பிரதாயத்தை எப்பொழுது முன்னேற்றுவது? திறந்த வெளி நாடகங்கள் புதிய பரிணாமங்களை நோக்கி செல்ல வேண்டும் அல்லவா? இவற்றுக்கான தீர்வுகள் சிறந்த திறந்த வெளி அரங்க நாடகங்கள் மூலமே வழங்கப்பட வேண்டும்.

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# வரவு




இலண்டனிலிருந்து வெளிவரும் உயிர்ப்பு ஐந்தாவது இதழ் வெளிவந்துள்ளது. சிங்கள இனவாதம் தமிழ் தேசம் குறித்து கட்டமைத்துள்ள ஐதீகங்கள் - தேவதாஸ். அழகியலும் அரசியலும் - ஆதி. புரட்சிகர மாற்றை உருவாக்கும் முயற்சிகளில் தன்னியல்புவாதம் ஏற்படுத்தியுள்ள இடையூறுகள் பற்றிய பிரச்சினை - ஏகலைவன் ஆகிய பிரதானமான மூன்று கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

- நிர்வாக மற்றும் நிபுணத்துவத்துறையில் தமிழரின் ஆதிக்கம்.
- பாடசாலைகள், கல்வி வாய்ப்புக்கள் யாவும் தமிழருக்கே.
- தமிழ் பிரதேசத்தில் சிங்கள குடியேற்றம் பற்றி
- தமிழர் சுதந்திர இயக்கத்தின் விரோதிகள்
- பெரும்பான்மை சிறுபான்மை ஐதீகங்கள்
- மலையக தமிழர் குறித்த இனவாத புனைவுகள்
- குடியுரிமை வாக்குரிமை பறிப்புக்களும், இடது சாரிகளின் போராட்டங்களும்

மேற்குறித்த தலைப்புக்களில் தமிழ் தேசம் குறித்து சிங்கள இனவாதம் கட்டமைத்துள்ள ஐதீகங்களை ஆராய்கிறார் கட்டுரையாளர் தேவதாஸ். இதிலிருந்து ''தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம் பற்றி என்ற தலைப்பிலான பகுதியை கீழே தருகிறோம்.

உயிர்ப்பு இலங்கையில் இலவசம். வேண்டுவோர் கீழுள்ள முகவரியுடன் தொடர்பு கொள்க.

YUIRPU
BM BOX 4002
LONDON WCIN 3XX
UNITED KINGDOM

**ஐதீகம்**

- இலங்கை பிரசைகள் யாவரும் எங்கும் வாழும் உரிமை உடையவர்கள்.
- வடக்கு கிழக்கிற்கு சிங்களவர் சுதந்திரமாகவே குடிபெயர்ந்தனர்.
- கிழக்கு மாகாணம் மிகவும் ஐதான சனத்தொகையை கொண்டதும், நீர் வளம் மிக்கதும் ஆகும். எனவே சிங்களவர் இயல்பாகவே இப்பகுதியில் குடியேறினர்.
- குடியேற்ற திட்டங்களுக்குச் செல்ல தமிழர் அக்கறை காட்டவில்லை.
- கிழக்கில், கடலோரம் இருந்து பத்து (10) மைல்களுக்கு அப்பால் தமிழ், முஸ்லிம் குடிகள் காணப்படவே இல்லை.

எமது தாயகத்தில் திட்ட மிட்ட சிங்கள குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதை நியாயப்படுத்துவதற்காக இந்த ஐதீகங்கள் சிங்கள இனவாதத்தால் பரப்பப்பட்டுள்ளன. வரலாற்று ஆய்வு என்ற வடிவில் இப்போதும் கூட இது நடைபெறுகின்றது.

இந்த அம்சங்களை ஒன்வொன்றாக எடுத்துக் கொள்வோம். 1930களுக்கு முந்தியதும் இரண்டு வீதத்திற்கும் உட்பட்டதாக அமைந்ததுமான இயல்பான சிங்கள குடிவரவும், பிற்பட்ட காலங்களில், சிங்கள அரசின் (1931 டொனமூர் அரசியல் யாப்புடன் அரசானது சிங்களமயமாக்கம் பெறத் தொடங்குகிறது) நேரடி ஏற்பாட்டின் பேரில் மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சிங்கள குடியேற்றமும் அடிப்படையில் ஒன்றல்ல. அரசும், சர்வோதய போன்ற சிங்களவர் நலம் பேணும் ஏனைய நிறுவனங்களும், ஆயிரக்கணக்கில் கொண்டு வரப்பட்ட இந்த சிங்கள குடியேற்றவாசிகளுக்கு மிகவும் கவர்ச்சியான உதவிகளையும், வாய்ப்புகளையும் ஏற்படுத்திக் கொடுத்தன. காணி, வீடு, உழவுக்கு எருதுகள், கிணறு, விதைதானியங்கள், நீர்பாசனம், பராமரிப்பு செலவுகள் உட்பட பல்வேறு மானியங்கள் குடும்ப ரீதியில் வழங்கப்பட்டன. திட்டமிட்ட இந்த குடியேற்றங்களின் விளைவாக கிழக்கு மாகாணத்தில் 1921ம் ஆண்டில் 8744 (4.69 வீதம்) என இருந்த சிங்களவர் தொகை 1981ம் ஆண்டில் 2,55,843 (25.8வீதம்) ஆக பெருக்கமுற்றது. கல்லோயா, அல்லை- கந்தளாய் குடியேற்றத் திட்டங்கள் அரசின் வரவு செலவு திட்டத்தில் மிகப் பெருந்தொகை பணத்தில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்களாகும்.


தமிழர் தாயகத்தை துண்டாடும் நோக்கில், மணலாறு போன்ற இராணுவ கேந்திர முக்கியத்தும் வாய்ந்த பிரதேசங்களில் ஆயுதம் தரித்த சிங்களகிரிமினல் குற்றக்கைதிகள் குடியமர்த்தப்பட்டனர். குறித்த தண்டனைக்காலத்திற்கு முன்னரே இக் கைதிகளை விடுதலை செய்வதற்கு, கண்டிப்பாக இவர்கள் மணலாறில் குடியேற வேண்டும் என அரசினால் முன் நிபந்தனை விதிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. ''எங்கும் வாழ்வதற்கான சுதந்திரம்'' என்று கோசத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிக்க மேற்கொள்ளப்பட்ட ஓர் அப்பட்டமான துணை இராணுவ முயற்சியாகும்.

கிழக்கு மாகாணமே சனத்தொகை செறிவில் மிகவும் குறைந்த பிரதேசமாகவும் அதே வேளை நீர்வளம் மிக்கதாகவும் இருந்தது. எனவே சிங்களவர் குடியேறியதில் தவறில்லை என்ற வாதம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும். உண்மையில் கிழக்கு மாகாணத்தை விடவும் மொனராகலை, பொலநறுவை, அனுராதபுரம் போன்ற மாவட்டங்கள் ஒப்பீட்டளவில் சனத்தொகை அடர்த்தி மிகவும் குறைவாயும் அதிக நீர்பாசனம், குளங்கள் என்பவற்றை கொண்டதாகவும் இருந்தன. எனினும் சிங்கள் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு கிழக்கும், வன்னியும் அரசின் குறியாக அமைந்ததற்கு தனியான உள்நோக்கம் அடிப்படையாக இருந்துள்ளது. மாறாக சனச்செறிவு, நீர்வளம் எனப்பேசுவதெல்லாம் அப்பட்டமான கபடத்தனமாகும்.

குடியேற்றத்திட்டங்களுக்கு செல்ல தமிழர் அக்கறை காட்டவில்லை என்பதை எடுத்துக் கொள்வோம். சிங்கள குடியேற்றவாசிகளுக்கு அரசினால் வழங்கப்பட்ட எந்த விதமான சலுகைகளும், மானியங்களும் இல்லாதபோது கூட, தமிழ் மக்கள் தாமாகவே விரும்பிச் சென்று விவசாயக்குடியிருப்புக்களை அமைத்துக்கொண்டபோது, இவர்கள் அரசு அதிகாரிகளாலும், படையினராலும், குறிப்பாக சிங்கள அரசியல்வாதிகளின் அடியாட்களாலும் அடித்து விரட்டப்பட்டன. பதவியாவில், கல்லோயாவில், திரியாயவில், தென்னை மரவாடியில், கந்தளாயில், புளியடிச்சோலையில் காலத்துக்குகாலம் நிகழ்ந்தவை இங்கு சில எடுத்துக்காட்டுக்களாகும்.

புதிய குடிகள் மட்டுமல்ல, ஆண்டாண்டு காலம் நிரந்தர குடிகளாக இருந்த தமிழர்களும் கூட வீடுகள் உடைக்கப்பட்டு, வர்த்தக நிலையங்கள் கொள்ளையிடப்பட்டு, அடித்து விரட்டப்பட்டுள்ளனர். மலையகத்திலிருந்து தாக்குலுக்கு உள்ளாகி வெளியேறி வந்து கிழக்கில் வன்னியில் குடியிருந்த தமிழ் அகதிகள் புனர்வாழ்வுத்திட்டங்களும் தகர்க்கப்பட்டன. இத்திட்டங்களை மேற்கொண்டு வந்த காந்தீயம் தொண்டர் அமைப்பு தலைமையகமும் திட்டமிட்டு தரைமட்ட மாக்கப்பட்டது. 1956, 1958, 1977, 1981, 1990களில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவொழிப்பு நடவடிக்கைகளுக்கு - குறிப்பாக குடியேற்றத்திட்டங்களுக்கு அண்மித்த பகுதிகளில் - சான்றுகள் தேவை இல்லை.

பெரும்பாலான இத்தகைய தாக்குதல்களில் முனைப்புடன் ஈடுபட்டவர்கள் யார்? அவர்களின் உள்நோக்கம் என்ன? சிங்கள அரசியல்வாதிகள் இவற்றின் சூத்திரதாரிகள் ஆகும். இந்த அரசியல்வாதிகளால் ஏவப்பட்ட படையினரும், அரசியல்வாதிகளின் எடுபிடிகளான அரச ஊழியர்களும், அடியாட்கள்கூட்டமுமே இவ்வாறு முனைப்புடன் ஈடுபட்டவர்களாகும். என்பது குறிப்பான முக்கியத்துவம் உடையது. சிங்கள குடியேற்றங்களின் பிரதான உள்நோக்கம் பாரம்பரிய தமிழ், முஸ்லிம் பிரதேசங்களின் குடிப்பரம்பலை மாற்றியமைப்பதாகும். (Demographic Allteration) இதற்கான அடித்தளம் 1931 டொனமூர் அரசில் யாப்புடன் பலமாக இடப்பட்டது. பிரதேசவாரி பிரதிநிதித்துவமும், சர்வசன வாக்களிப்பு முறையும் நடைமுறைக்கு வந்ததுடன் தமிழ் முஸ்லிம் இனச் சுத்திகரிப்புடன் கூடிய திட்டமிட்ட சிங்கள குடியேற்றம் எமது பாரம்பரியப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டது. நிலம், நீர்வளம், சனச்செறிவு குறைவு, சுதந்திரமாக குடியேறும் உரிமை என்பதெல்லாம், சிங்கள இனவாதத்தில் நேரடியான அரசியல் உள்நோக்கத்தினை மறைக்கும் கபடத்தனமாகும். சிங்கள இன வாத அரசியல்வாதிகளின் இந்த உள்நோக்கமானது, புதிய அம்பாறை மாவட்டம் உருவாக்கம், புதிய சேருவிலை தொகுதி, வன்னி தெற்கு உதவி அரச அதிபர் பிரிவு உருவாக்கம், மணலாறை வெலிஓயா சிங்கள மாவட்டமாக்கும் திட்டம், திருகோணமலை மாவட்ட தமிழ் முஸ்லிம் மக்களின் சனச்செறிவை மாற்றியமைக்கும் நோக்கில் தமிழ் முஸ்லிம் கிராம சேவகர் பிரிவுகளை அனுராதபுரத்துடன் இணைத்தமை, சிங்கள கிராமசேவகர் பிரிவுகளை பலவந்தமாக திருமலை மாவட்டத்துடன் இணைத்த நடவடிக்கைகள் என்பவற்றின் மூலம் தெளிவாக புலப்படுகின்றது.




## ASPECTS OF CULTURE IN SRI LANKA

K.S.SIVAKUMARAN

இலங்கையின் கலாசாரம் தொடர்பாக, கே.எஸ்.சிவகுமாரனுடன் ஜப்பானிய பல்கலைக்கழக விரிவுரையாளர் லீரோய் ரொபின்சன் (Le. Roy Robinson)நடத்திய கலந்துரையாடலை கே.எஸ்.சிவகுமாரன் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார்.

இலங்கை கலாசாரத்துடன் ஈடுபாடுடையவர்களை செவ்வி கண்டு ஜப்பானிய மக்களுக்கு அறிமுகம் செய்யும் பணியில் ஈடுபாடு கொண்டவர் லீ ரோய் ரொபின்சன். அமெரிக்கரான இவர், ஜப்பானில் உள்ள நாகசாஹி பல்கலைக்கழகத்தில் பொருளியல் கற்பிப்பவர். இவர் இது தொடர்பாக முப்பதுக்கு மேற்பட்ட செவ்விகளை நடத்தியுள்ளார். இவற்றுள் ஒன்றே கே.எஸ். சிவகுமாரனுடன் நடத்திய கலந்துரையாடல். இச் செவ்வி அங்குள்ள பல சஞ்சிகைகளில் வெளியானவை என்பது குறிப்பிடத்தக்கது. இப்புத்தகத்தில் அறிமுகவுரையை அஜித் சமரநாயக்க எழுதியுள்ளார். மேலும், ஜேம்ஸ். எச்.லனரோல், எட்மன்ட் ரணசிங்க காமினி வீரக்கோன் ஆகியோர் கே.எஸ்.சிவகுமாரனைப்பற்றி சிறு குறிப்புகளை எழுதியுள்ளனர்.

இவருடைய செவ்வி ஐந்து பகுதிகளாக வெளியாகியுள்ளது. தமிழ் நாடகம், கவிதை, சிறுகதை, நாவல், திரைப்படங்கள், ஓவியம், கலாசாரம் தொடர்பான பல தகவல்களும், சிங்கள கலை, கலாசாரம், கலைஞர்கள், தொடர்பான அறிமுகமும் இதில் உள்ளடங்கியுள்ளது.

பாலுமகேந்திராவின் புகைப்படக் கருவியுனுள் அகப்பட்ட கே.எஸ்.சிவகுமாரனுடைய படம் ஒன்றும் புத்தகத்தின் பின் அட்டையில் அழுத்தப்பட்டுள்ளது. இப்புத்தகத்தைப் பெறவிரும்புவோர், கே.எஸ். சிவகுமாரன், 21,முருகன் பிளேஸ், கொழும்பு-6 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளலாம்.




## 2000ம் ஆண்டில் மலையகம்

2000ம் ஆண்டில் மலையகம் என்ற பெயரில் பண்டாரவளையில் உள்ள லீயோமார்கா ஆஸ்ரமம் ஒரு சிறு நூலை வெளியிட்டுள்ளது.

இந்த நூலில் முதலாவதாக காணப்படுவது ஆசிரியர் கருத்து. இதை அருட்திரு. எஸ். கீதபொன்கலன் எழுதியுள்ளார். இதில் '' தோட்டத் தொழிலாளர்கள் லயன் வாழ்க்கை மரபிலிருந்து விடுபட்டு மேல்நிலை நோக்கி ஒரு சமூக அசைவியக்கத்திற்காக தொழிற்படத் தொடங்கியுள்ளனர். இந்த அசைவியக்கத்தை மக்கள் மத்தியில் வலுப்படுத்தி அதை முன்னெடுத்துச் செல்வதற்காகவே ''மலையகம் 2000'' என்ற இந்தச் சிற்றேட்டை மலையக சமூகத்திற்கும் மலையக மக்களின் முன்னேற்றத்தை விரும்பும் சகலருக்கும் சமர்ப்பிக்கின்றோம் எனக் குறிபிட்டுள்ளார்.

மற்றும் ''உட்புகுமுன்.....'' என்ற சிறு தலைப்பின் கீழ் ......175 ஆண்டுகளாக அரை அடிமைத்தனத்தில் சிக்கி வாழ்வின் சகல பகுதிகளிலும் பின் தங்கியவர்களாக வாழ்கின்ற மலையக மக்களுக்கும் 2000 ஆண்டில் ஒரு புதிய விடியல் தோன்ற வேண்டும் என்ற நோக்குடன் ''2000ஆம் ஆண்டில் மலையகம் என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இதில் 2000ஆம் ஆண்டின் மலையக அரசியல், கல்வி, சுகாதாரம், கோட்பாடுகள், பெண்கள்,சமயம், மக்கள் அமைப்புடன் சமூகம், பொருளாதாரம் ஆகிய பத்து விடயங்களில் மலையகம் மாற்றத்தைக் காணவேண்டும் என்ற கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அதன் தொகுப்பே இச் சிறுநூல்'' எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு தலையங்கத்தின் கீழும் இன்று மலையகத்தின் நிலையும், 2000 ஆண்டில் எப்படி இருக்க வேண்டும் என்பது ஒப்பிட்டு எழுதி வெளியிடப்பட்டுள்ளது.




## சொந்தச் சுமைகள்

**கவிதைத் தொகுப்பு**

**நவதர்சிகள்**

நவதர்சிகளே! சுமைகள் உங்களுக்கு கவிதைகளாகியிருக்கின்றன. சிலருக்கு கவிதைகளே சுமைகளாகிவிடும் காலத்தில்.

தமிழ் நாட்டின் ஜனரஞ்சக கவிதைத் தீனியும் உங்களில் சிலரில் கலந்து போய் உள்ளது.

ஆனால் நவதர்சிகளே! நவீன கவிதை என்பது சாதாரண சொற்களைக்கொண்ட நேரடி அமைப்பு என்பதை நீங்களே இங்கு நிரூபித்திருக்கிறீர்கள்.

எளிமையான சொற்களை நேரடித்தன்மை மிக்கதான கவிதைகளில் கையாளுதல் கத்தி விளிம்பில் நடப்பது போன்றதாகும். எளிமையான சொற்களுக்கு வலுவைக்கொடுப்பது கவிதையின் இறுக்கமான அமைப்பே.

**முன்னுரையில் -கவிஞர் சண்முகம் சிவலிங்கம்.**




## மாடும் வீடும்

**மல்லிகை சி. குமார்**


மல்லிகை சி. குமாரின்,மாடும் வீடும் என்ற கவிதைத்தொகுப்பை, கிறிஸ்தவ தொழிலாளர் சகோதரத்துவம் என்ற அமைப்பு எளிமையான முன் படத்துடன் வெளியிட்டுள்ளது. இதில் இவரது 22கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகத்திற்கு கவிஞர் வைரமுத்து அணிந்துரை எழுத மு. நேசமணி வாழ்த்துரை தெரிவிக்க அந்தனி ஜீவா கவிஞரை அறிமுகம் செய்து வைக்க கவிஞர் குமாரின் நன்றியுரையுடன் புத்தகம் முழுமை பெற்றுள்ளது. இதன் விலை 50 ரூபாவாகும்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## கிண்ணியா: வைத்தியசாலையில் நடந்தது இதுதான்

சரிநிகர் இதழ் 83ல் கிண்ணியா ஆஸ்பத்திரியில் இளந்தாய் எங்கே? என்ற தலைப்பில் வெளிவந்த செய்தி உண்மைகளை மறைத்து கிண்ணியா மாவட்ட வைத்திய சாலை அதிகாரியான ஏ.ஜே.எம். உவைஸ் மீதும் அவரது நிர்வாக உத்தியோகஸ்தர், ஊழியர் மீதும் பிரதேச தேசிய ரீதியில் அபகீர்த்தியை ஏற்படுத்தும் முகமாக சிலரால் மக்களையும், உயர் அதிகாரிகளையும் தவறான விதத்தில் வழி நடாத்தும் விதமாக எழுதப்பட்டவையாகும்.

கர்ப்பிணியான பெண் தகுந்த பாதுகாப்பின்றி அனுப்பப்பட்டதனால் இடைவழில் குழந்தை பிறந்ததாகக் குறிப்பிடப்பட்டது. உண்மையில் அப்பெண்ணுக்கு Ante Partum Heamorrage எனப்படும் பிரசவத்திற்கு முன் இரத்தப்போக்கு ஏற்பட்டது. அதனைக் குணப்படுத்த வசதிகள் வைத்தியசாலையில் கிடையாது. எனவேதான் அவசரமாக திருமலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அடுத்ததாக சகோதர் முபாரக் உடனான பிரச்சினை யாதெனில் குறிப்பிட்ட நபர் தனது உறவினரை (அவரது பழைய விசர் நாய்கடியின் காரணமாக) ஆபத்தாக இருப்பதனால் ஒக்.10 அன்று இரவு 9.45 மணி அளவில் வந்து வைத்திய அதிகாரியை வீட்டிற்கு வந்து பார்க்கும்படி அழைத்த போது அவர் மறுத்து, வாட்டிற்கே கொண்டுவரும்படி வேண்டினார். எனவே இருவருக்குமிடையேயான வாக்குவாதம் கைகலப்பளவுக்கு வந்த போது உடனிருந்தவர்களால் தவிர்க்கப்பட்டது. ஒக்.11 அன்று ஆஸ்பத்திரி ஊழியர்கள் தமது மேலதிகாரிக்கு அடிக்க முற்பட்ட சம்பவத்தை காரணம் காட்டி காலை 8-10மணி வரை அடையாள வேலைநிறுத்தம் செய்தனர். நலன்விரும்பிகள் தலையிட்டு குறிப்பிட்ட நபர் மன்னிப்பு கேட்டதுடன் நிலைமை சுமூகமாகியது.

அடுத்து காணமல் போன பெண்விடயமாவது ஒக்.10 அன்று பிற்பகல் 5-05 அன்று திருமதி ராஹிலா அனீஸ் - வயது- 22 என்பவர் குழந்தை பிறந்து 10 நாட்களின் பின்பு Postpartum Depression & Infected Epis என்ற நோய்கண்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ஒக். 11 அன்று இரவு 11.55 மணியளவில் குறிப்பிட்ட நோயாளி வைத்திய சாலையிலிருந்து காணாமல் போய் விட்டார். குறிப்பிட்ட வாட்டில் அன்று பொறுப்பாக இருந்த தாதி திருமதி தயாபரன் ஆவார். அத்தாதியிடம் இதுபற்றி வினவிய போது அருகே இருந்த அறையில் இருந்ததாகவும் இரவு 12.00 மணியளவில் அப்பெண்ணுக்கு ஊசி ஏற்றக்காத்திருந்தாகவும், இரவு 11.55 அளவில் குறிபிட்ட நோயாளியுடன் இருந்த பெண் ஓடிவந்து நோயாளியைக் காணவில்லை என்று முறையிட்டதாகவும் குறிப்பிட்டார். உண்மையில் குறிபிட்ட நோயாளியின் பாதுகாவல் பெண் சிறிது கண் அயர்ந்த நோது அவரது தலைக்கருகில் இருந்த செருப்பை எடுத்துக் கொண்டே நோயாளி தப்பிச் சென்று இருக்கிறார். இரவு 12.20 மணி அளவில் வைத்திய அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டதுடன் எல்லா ஊழியரும் நோயாளியைத் தேடலானார்கள். பொலிஸிற்கும் அறிவிக்கப்பட்டு, உறவினருக்கும் அறிவிக்கப்பட்டது.

வாயிற்காப்பாளனான எம்.எஸ். அபூபக்கரின் தகவலின்படி வாயிற்கதவு பூட்டப்பட்டிருந்ததாகவும், அதனைத்தாண்டி நோயாளி செல்லவில்லை என்றும், வாட்டின் பிரதான வாயிலருகே தொடர்ந்து இருந்த விஷர் நாய்க்கடிக்குள்ளான நபரின் இரு உறவினர்கள் நோயாளி அதனூடாக வரவில்லை என்றும் உறுதிப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் அப்பெண் கம்பிகளற்ற யன்னல் வழியாக அல்லது வாட்டிற்குரிய மலசல கூடசுவரால் சென்றிருக்க வேண்டும். இந்நிலையில் ஒக். 12 அன்றும் அனைவராலும் எங்கும் தேடப்பட்ட நிலையில் சிலரால் தவறாக வழிநடத்தப்பட்ட பொதுமக்களும், உறவினர்களுமாக 200 பேரளவில் சேர்ந்து அன்று மாலை 4.30மணியளவில் வைத்தியசாலை முற்றுகையிடப்பட்டு தவறான பராமரிப்பால் நோயாளி இறந்துள்ளதாகவும் உடலை உடன் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரியதுடன் ஊழியரை பயமுறுத்தி எங்கும் சல்லடைபோட்டுத் தேடினர். நிர்ப்பந்தத்தால் சில பூட்டுக்கள் கூட உடைக்கப்பட்டன. கிணறு, நீர்தாங்கிகள் கூட பரிசோதிக்கப்பட்டது.

விடயத்தைக் கேள்விப்பட்ட வைத்திய அதிகாரி ஆஸ்பத்திரிக்கு விரைகையில் வழியில் ஏ.எல். பைத்துல்லாஹ் என்ற பொலிஸ் உத்தியோகத்தரை சந்தித்து விடயத்தை விளக்கி, கிண்ணியா ஓ.ஐ.சி. யையும் அழைத்து சமரசம் செய்ததுடன் ப்ாகாப்பும் போடப்பட்டது.

ஒக்.13 அன்று வைத்திய அதிகாரியினால் விடயம் சகல உயர் அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டு அவர்களால் பொலிஸிற்கும் அறிவிக்கப்பட்டது. ஒக்.13 காலை 11 மணி வரை வெளிநோயாளர் பிரிவு சிகிச்சைக்காக திறக்கப்பட்டிருந்ததுடன் மாலை இரு உதவி வைத்திய அதிகாரிகளும், இரு ஆண் தாதிகளும் பதற்றத்தினால் சுகயீன லீவில் சென்றனர். ஒக். 13 அன்று அகில இலங்கை ரீதியான வைத்திய வேலை நிறுத்தம் என்பதும் குறிபிடத்தக்கது.

ஒக். 14 அன்று ஊர்பிரமுகர்கள், கிராம அதிகாரிகள், பள்ளிவாசல் தலைவர்கள், பொலிஸ் ஓ.ஐ.சீ. நலன்விரும்பிகள் என 200 பேரளவில் ஒன்றுகூட்டப்பட்டு விடயம் வைத்திய அதிகாரியானால் விளக்கப்பட்டு அனைவராலும் ஏற்கப்பட்டதுடன் வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. இது இவ்வாறு இருக்க ஒக்.13 - ஒக்.17 வரை வைத்திய சாலை இயங்கவில்லை என்பதும், ஊர்ச்சனம் வைத்திய அதிகாரியை வழிமறித்ததனால் பொலிஸ் உதவி நாடப்பட்டது என்பதும் நோயாளிகளை வெளியேற்றி வைத்தியசாலை இழுத்து மூடப்பட்டது என்பதும் வைத்திய அதிகாரிக்கு வீட்டில் கூட தங்க முடியாத நிலை ஏற்பட்டது என்பதும் சமூகத்தையும், உயர் அதிகாரிகளையும் தவறான வழியில் வழிநடாத்த உருவாக்கப்பட்ட விமர்சனமாகும்.

உண்மையிலே வைத்திய அதிகாரி ஏ.ஜே. எம். உவைஸ் கிண்ணியாவின் முதல் வைத்தியரும், 2ம் வகுப்பின் கீழ்ப்பிரிவில் திறமையாக சித்திபெற்றவரும் ஆவார். உயர்கல்வி புலமைப்பரிசில் பெற வாய்ப்பிருந்தும் தனது சமூகத்திற்காக அவற்றை தியாகம் செய்து வந்தவர் என்பது குறிப்படத்தக்கது. அவர் இளையவர், புதியவர் சில தவறுகள் ஏற்படுவது சகஜம் இவற்றைக்கருத்தில் கொள்ளாது உண்மைக்குப் புறம்பான தகவல்களை எழுதி சமூகத்தை தவறாக வழிநடாத்த முயற்சிப்பவர்கள் தமது சமூகத்திற்கே துரோகம் செய்கின்றனர் என்பதனை மறந்து விடக்கூடாது.

**செயலாளர் அபிவிருத்திச் சங்கம்**
**மாவட்ட வைத்தியசாலை**
**கிண்ணியா.**

**இவ்வறிக்கை கிண்ணியா மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.ஜே.எம். உவைஸ் இனாலும் அபிவிருத்திச் சங்க செயலாளராலும் நேரில் சரிநிகருக்கு கையளிக்கப்பட்டது.**
**ஆ-ா்.**

## ...ளிகிற வீட்டில்......

***இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற முயற்சிப்பதாக அரசாங்கத்தலைவர்கள் வெளிப்படையாகக் கூறுகின்றனர். இதற்கான தயார் நிலைகளும் காணப்படுகின்றன. யாழ் மக்களின் இது தொடர்பான கருத்து என்ன?***

இதுத் தொடர்பாக மக்களிடம் பொது அபிப்பிராயம் நிலவுகிறது. ஒரு லட்சம் இந்திய துருப்புக்கள் செய்ய முடியாததை 50ஆயிரம் இராணுவத்தினரால் செய்ய முடியுமா? என்று. புலிகள் இராணுவத்தினரிடம் இருக்கும் சக்தி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியவுடன் குறைந்த விடும் என்கின்றனர். இதை மக்களும் நம்புகின்றனர்.

***ஆனால் புலிகள் இன்று சர்வதேச ரீதியாக தனித்து விடப்பட்டுள்ளனர். இதை மக்கள் அறிவார்களா?***

ஆம். ஆனால் சில குறிப்பிடத்தக்க வெற்றிகளின் பின்னர் மறைந்து விடும் என்றுக் கூறுகின்றர்.

***ஆனால் சென்ற கிழமைகளில் புலிகள் அதிகமாக தோல்விகளைச் சந்தித்தனரே?***

இது முக்கியமான கேள்வி. புலிகள் 150 பேர் இறந்த போது இராணுவத்தினர் அச்சடலங்களை புலிகளிடம் கையளித்தனர். அதையும் தமக்கு சாதமான விதத்தில் புலிகள் மாற்றிக் கொண்டனர். இந்து மகளிர் கல்லூரியில் இறந்தவர்களுக்கான சடங்குகளை மிகப்பெரிய நடாத்தினர். துக்கத்தை ஏற்படுத்தி இளைஞர்களை தம் பக்கம் இழுத்துக்கொண்டனர்.

இவ் உளவியலை தெரிந்துக்கொள்ள தென்னிலங்கையினரால் முடியாதுள்ளது. இதற்கு நல்ல உதாரணம் 150 சடலங்களை பொறுப்பேற்கும் நிகழ்ச்சி.

***அவர்கள் அரசின் தீர்வுகளை பற்றி யாது நினைக்கிறார்கள்?***

ஆம், தீாவுகள் சிறந்தவை. ஆனால் ஏன் தீர்வுகள் தமக்கு அனுப்பப்படவில்லை எனக் கேட்கின்றனர். அரசாங்க அதிபருக்குக் கூட இத்தீர்வுப் பொதி அனுப்பிவைக்கப்படவில்லை.

நான் பாலசிங்கத்தோடு உரையாடிய வேளை, தலையில் குண்டு விழும் போது, அதைப்பற்றி எங்களால் யோசிக்க முடியாது எனக் கூறினார். எப்படியாயினும், யுத்தம் காரணமாக அரசியல் தீர்வு அவர்களிடத்தில் முக்கியத்துவம் பெறவில்லை. என்றே கூறலாம்.

## இனி கடவுள் எரிவார்

என். ஆத்மா


*சில யுகங்களின் பின் இன்றுன்*
*நினைவுகள் அலர்ந்தன என் இறைவனே*
*சிறு பராய அதீத பக்திகள் யாவும்*
*அறைப்புள்ளியாய்த் தேய*
*வாய் விட்டு உனைச் சபிக்கிறேன் இன்று.*

*நிலா நாட்களில் வாசற் படிக்கட்டில்*
*மடியிற் கிடத்தித் தலைமயிர் கோதி*
*மூத்தம்மா செப்பிய மதமும்*
*அரேபியக் கதைகளும் நபியும்*
*சிலையில் எழுத்தாகா தழிந்தன*
*இறைவனே.*

*விஷம் கக்கும் பாம்புகளும்*
*வேறு கொடிய ஜந்துகளும்*
*சதையைப் பொசுக்கிக் கருக்கும்*
*நெருப்பும்*
*பாவிகள் வீரிட*
*அலற*
*தூக்கித் தூக்கி இராட்சத அடி*
*அடிக்கும்*
*ஸபானியாக்களும் நிறைந்த உன்*
*நரகம் பற்றிய பேய்ப் பயங்களும்*
*போயின தான்.*
*ஆதாமுக்கு நீ விலக்கிய கனியை*
*சுவைக்க வேண்டுமென்ற கனவும்*
*உன் சுவனத்தின் பாலாறுகளிலும்*
*தேனாறுகளிலும் எனக்கிருந்த*
*பிரமிப்புகளும்*
*விதம் விதமான பொன் பவளக்*
*கிண்ணங்களில்*
*ஏற்கனவே அங்கு*
*ஊற்றி நிரப்பப்பட்டுள்ள*
*மது வகைகள் மீதிருந்த ஈர்ப்பும்*
*ஹூர்லின் கன்னியர் பற்றிய*
*மயக்கங்களும் தான் அழிந்து*
*சிதிலமாகின இப்போ.*

*இன்று நானுனைத்*
*தொழவும் போவதில்லை.*
*உன் இருப்பு பற்றியொரு*
*இலத்திரன் வளியளவு ஐயமாயினும்*
*எனக்கிலாதிருப்பினும்*
*ஒரு இனவாதியாக அல்லது*
*மனித நேயமற்றவனாக என நீ*
*சிருஷ்டியாத நன்றிக் கடனிருப்பினும்*
*இன்று நானுனைத் தொழமாட்டேன்*

*அபாபீல் குருவியினங் கொண்டு*
*யானைச் சேனைகள் அழித்த உன்*
*அதி வல்லபத்திலும்*
*உலகத்து எல்லா சக்தியும் உன்*
*ஆற்ற லெனும் பெரு வெளியில் வைத்த*
*சிறு வளைய மெனும் உவமையிலும்*
*நான்புல்லரிக்கிறேன்*
*விதிர் விதிர்க்கிறேன்.*



*எனினும் என் நெற்றி இன்றுன்*
*சஜூதில் விழாது*
*மசூதி மினாராக்களின்*
*உச்சி முகடுகளிருந்தெழுகிற உன்*
*நாமம் ஓராயிரம் முறை என்*
*செவிகளில் மோதித் தெறிப்பினும்*
*சரியேஎன் செவிப்பறை வெடித்துச்*
*சிதறினும் சரியே.*

*என் மனங் கொதித்து உலை மூடிகளைத்*
*தூக்கி எறிகிற ஆவியில் காற்று*
*உருகுகிறது*
*இன்று தான் விரிந்த தளிர்களும்*
*மலர்களும் கருகுகின்றன.*
*நீ எனக்கிழைத்த அநீதி*
*மிகக் கொடியது*

*மஹ்ரமிகளின் பாலுறவின் போது*
*அர்ஷ் நடுங்குவதாய் அறிவேன்*
*அதனிலும்*
*கொடிய துயரிது.*
*என் பெரு மூச்சின் அதிர்வில் ஓர் நாள்*
*சேடனின் கொம்புகள் தாங்கும்*
*உன் ஏவலாளர்.*
*பற்றிய தம் கைகளைத் தவறுவர்*
*பூவான என் மனத்தின்*
*மென்னிதழ்கள் வெடித்து*
*வேதனையின் குருதி சிந்துகிறது*
*வெப்பத்தின் கண்ணீர் கசிகிறது*

*நான் அர்த்தநாரீஸ்வரத்தின் ஆண்பாதி*
*தீயின் குழம்பு உலகினிடை*
*எத்தனை காலங்கள் அலைந்திதன்*
*ஒற்றை விழியுடனும் இமையுடனும்*
*என் பாதித் தொண்டையும் வறளும் வரை*
*நான் கூவிய ஓலம்*
*ஏன் உன் செவிகளில்*
*விழாமலேயே போயிற்று.*
*கோடி. கோடி யுகங்களின் பின்*
*அதுவும் பொருத்த முடியாதபடி*
*சிதைத்தா*
*என் பெண் பாதியைக் காண்பிப்பது நீ?*

**சேடனின் கொம்புகள் - அகிலத்தின் மூலைகள்**
**நபி - இறைதூதா.**
**ஸபானியா - நரகத்தில் வேதனை செய்பவர்கள்.**
**ஹூர்லின் - சுவர்க்கத்துக் கன்னியர்.**
**அபாபீல் - ஒரு வகைக் குருவியினம்.**
**சஜூது - பூமியில் நெற்றியைப் பதித்து கடவுளைத்தொழுவது.**
**மினாரா - மசூதிகளின்கட்டடக்கலையமைப்பில் உயரமாக அமைக்கப்படும் கோபுர அமைப்பு**
**மஃறமி - திருமணம் புரிய முடியாத உறவினர்**
**அர்ஷ் - கடவுள் அமைந்திருக்கும் பீடம்**

என். ஆத்மாவின் வெளிவரவுள்ள "பொன்னத்தா பூவத்தா" கவிதைத் தொகுப்பிலிருந்து ஒரு கவிதை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்
SARINIHAR

# ஜனநாயகமும் பயங்கரவாதமும் தீர்வும்!

கொலன்னாவையில் விடுதலைப்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ள எண்ணை தாங்கிகள் பற்றி எரிந்து கொண்டிருந்த நேரம். முழு நாடுமே -குறிப்பாக கொழும்பு மாநகரமே அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது. பெருந்தீச்சுவாலையிலிருந்து கிளம்பிய புகை மண்டலத்தில் அது தவித்துக் கொண்டிருந்தது.

ஜனாதிபதி அவர்கள் திட்டமிட்டபடி தமது பயணத்தை -ஐ.நா.சபையின் பொன்விழாக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் தனது பயணத்தை தொடர்கிறார். இங்குள்ள பத்திரிகையாளர்களும் சில எதிர்க்கட்சி வயிற்றெரிச்சல்காரர்களும் அவர் வெளியேறியது பற்றி முணுமுணுத்த போதும், அவர் திட்டமிட்டபடி தமது பயணத்தை மேற்கொண்டார்.

அவர் செய்தது மெத்தச் சரியே என்று பிறகு முன்னாள் ஜனாதிபதியும், சந்திரிகா அவர்களால் அண்மையில் மிகவும் மோசமாக விமர்சிக்கப்பட்டவருமான ஜே.ஆரே பாராட்டியிருந்தார்.

ஐ.நா.கூட்டத்தில் அவர் பயங்கரவாதம் தொடர்பாக பேசிய பேச்சு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரனுக்கு ஜனநாயகத்தின் மீதும், சர்வதேச பயங்கரவாதத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதிலும் உள்ள அக்கறைக்கு சற்றும் குறைவில்லாத விதத்தில் ஜனாதிபதி சந்திரிகா அவர்களும் தமது அக்கறையை வெளிக்காட்டினார்கள்.

ஒருவகையில், பயங்கரவாத நிகழ்வொன்று நடந்து கொண்டிருக்கையில் அவர் வெளியேறியதும் கூட, சர்வதேச மட்டத்தில் பயங்கரவாதத்தை கட்டுப்படுத்தும் அவரது சர்வதேசியத் தன்மையின் சிறப்பான வெளிப்பாடு என்றே நாம் கொள்ள வேண்டும். அக்கூட்டத்தில் பேசுகையில் வர் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி கிளின்ரனின் அக்கறையைப் பாராட்டிப் பேசினார்.

ஆனால்,

இதே பொது ஜன ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் இடதுசாரிகளும், பிற ஜனநாயகவாதிகளும் அன்று வரையில் சொன்னவற்றையெல்லாம் மறக்கத்தான் எமக்கு முடியவில்லை.

சர்வதேச பயங்கரவாதத்தின் ஊற்றுமூலம் அமெரிக்கா. உலக நாடுகளின் சுதந்திரத்திற்கும் ஜனநாயகத்துக்கும் அச்சுறுத்தலாக இருக்கும் நாடு அமெரிக்கா என்றெல்லாம் அவர்கள் கூறியதைத்தான் மறக்க முடியவில்லை. இவற்றை எல்லாம் யோசிக்கும்போது தான் எம் கண்முன்னால் ஜனநாயகத்தின் பேரால், பயங்கரவாத ஒழிப்பு என்பதன் பேரால் அமெரிக்கா கொன்று குவித்த கோடிக்கணக்கான மக்களின் வரலாறுகள் ஞாபகத்துக்கு வருகின்றன. ஐ.நா.சபையை தனது கைப்பொம்மையாகப் பாவித்துக் கொண்டு அமெரிக்கா ஆடிவரும் நரவேட்டை நாடகத்துக்கு இப்போது சந்திரிகா அவர்களும் தமது ஆதரவை தெரிவித்துள்ளார்கள்.

வாழ்க சந்திரிகா ஜனநாயகம்!

வளர்க அவரது 'மனிதாபிமான' அரசியல்!

இந்தப் பின்னணியில் நியூயோர்க் நகரில் வைத்து ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் புலிகளுடனான பேச்சுவார்த்தைக்கு முன்வைத்துள்ள மூன்று நிபந்தனைகளை விளங்கிக் கொள்வது மிகவும் சுலபமானது. ஜனாதிபதி முன்வைத்த இந்த நிபந்தனைகள் பத்திரிகைகளில் முக்கிய செய்தியாக வெளியிடப்பட்டுக் கொண்டிருக்கும் அதேவேளை, விடுதலைப்புலிகள் உடனடியாக ஜனாதிபதியின் அந்தக் கோரிக்கைகளை கணக்கிலெடுக்க வேண்டும் என்ற த.வி.கூ. எம்பிக்களின் கோரிக்கையும் பத்திரிகைகளில் வெளிவந்துள்ளன. யாழ்ப்பாணத்தில் மக்கள் பட்டினிச் சாவை எதிர்நோக்கும் இவ்வேளையில் இந்தச் சந்தர்ப்பத்தை புலிகள் பயன்படுத்தியாக வேண்டும் என்பதே த.வி.கூவினரின் அபிப்பிராயமாகும்.

உண்மைதான்! இராணுவம் நீர்வேலி வரை முன்னேறிவிட்ட நிலையில் அகதிகளாகியுள்ள லட்சக்கணக்கான மக்கள் போக்கிடமின்றிப் பரிதவிக்கும் இந்நிலையில் யுத்தம் நிறுத்தப்பட்டு பேச்சுவார்த்தை தொடங்குமானால் அதற்காக சந்தோசப்படாதவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள். ஆனால் நியூயோர்க்கில் வைத்து ஜனாதிபதி அறிவித்த கிளின்ரன் பாணி நிபந்தனைகள், அங்குள்ளவர்களது காதில் பூ வைக்கவும், தமது யுத்த மமதையை வெளிக் காட்டவுமே பயன்படும் என்பதைத்தவிர வேறு எதையும் சாதிக்கப் போவதில்லை. உண்மையில் சமாதான நோக்கம் இருப்பின், 'தாம் விரும்பாத யுத்தத்துள் தம்மை புலிகள் இழுத்து விட்டுள்ளதாகக் கூறியபடியே யாழ்ப்பாணத்தை நோக்கி படை நகர்த்த வேண்டியதில்லை. பல்லாயிரக்கணக்கில் மக்களை அகதிகளாக்கிக் கொண்டிருக்கும் ஒரு யுத்தத்தை நடத்த வேண்டிய அவசியமும் இல்லை.

அரசு தரப்பில் சமாதானத்துக்கான தீர்வாக முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனைகள் பற்றி இப்போது யாரும் பேசுவது கூட இல்லை. முழு அரசாங்கத்தினதும் பிரதான பாணியாக இருந்த அரசியல் தீர்வு வேலைகள் இப்போது அமைச்சர் ஜி.எல்.பீரிசின் கீழ் இயங்கும் ஒரு 'டிவிசனாக' மாறிவிட்டது. பெரும்பாலான சமயங்களில் இந்த டிவிசன் தூங்கிக் கொண்டே தான் இருக்கிறது. மறுபுறத்தில் யுத்தம் முழு நாட்டினதும் பிரதான அம்சமாகி விட்டது. யுத்தத்தின் மூலம் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கு முழு நாட்டையும் யுத்தத்திற்குரிய நிலையில் வைத்திருக்க வேண்டுமென்று கூட அபிப்பிராயங்கள் அமைச்சரவை மட்டத்தில் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இவை பற்றி எதுவும் பேசாமல் இருக்கும் அரசாங்கத்தின் வால்களில் ஒன்றான கூட்டணி, இப்போது சந்திரிகா முன்வைத்துள்ள நிபந்தனைகள் பற்றி பேசாதிருப்பதுதான் சிரிப்புக்கிடமான விடயம்!

சமாதானம் பற்றி பேசவும், அதை அடைவதற்கு தான் சரியென்று கருதுகிற வழிக்கு மற்றவர்களும் வரவேண்டும் என்று கூறவும் இந்த ஜனநாயக நாட்டில் யாருக்கும் உரிமை உண்டு.

'நாங்கள் எதையும் அவசரப்பட்டு தீர்மானிக்கமாட்டோம். ஏனென்றால் நாம் ஜனநாயக முறைப்படி நடப்பவர்கள் என்ற சந்திரிகாவின் புகழ் பெற்ற ஜனநாயக மரபுக்கேற்ப அவரின் எடுபிடிகளான கூட்டணியும் கொஞ்சம் நடந்துகொண்டிருக்கலாம். அதுதான் அவர் முன்வைத்த நிபந்தனைகளை கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்பது.

அவர் முன்வைத்த நிபந்தனைகள் இவைதான்:

1.முற்று முழுதான மோதல் தவிர்ப்பு

2. அடையாள ஆயுதக் கையளிப்பு

3. பேச்சுவார்த்தை நடாத்தி முடிப்பதற்கான காலவரையறை!

இந்த மூன்று நிபந்தனைகளில் 1ம் 3ம் நிபந்தனைகளைப் பார்த்தும் கூட த.வி.கூவினருக்கு புரியவில்லை. கடந்த பேச்சுவார்த்தைக் காலகட்டத்தில், எந்தக் காரணங்களுக்காக பேச்சுவார்த்தை குழம்பியதோ அவற்றை அரசு மீண்டும் 'நல்லபிள்ளைத்தனமாக' முன்வைத்துள்ளது. கடந்த பேச்சுவார்த்தை காலத்தை நினைவு கூர்பவர்கள் முற்று முழுதான மோதல் தவிர்ப்பும், பேச்சுவார்த்தைக்கான கால வரையறையைப் போடுவதும் நடைமுறைக்கு வராமல் இழுத்தடித்து வந்தது இந்த அரசாங்கமே என்பதைப் புரிந்து கொள்வர். ஆயுதங்களை கையளிக்க சொல்வது, பழைய யூ.என்.பி காலக் கோரிக்கை, ஆக இந்தக் கோரிக்கைகள் புலிகளை பேசவைக்கும் நோக்குடனான கோரிக்கைகள் அல்ல, மாறாக இராணுவரீதியாக தாம் வெற்றி பெற்றுவருவது குறித்த மமதையால் செய்யப்படும் எக்காளம் ஆகும். றேகன், புஷ், பில்கிளின்ரன் பாணி அமெரிக்க ஜனநாயக மரபின் எக்காளம் ஆகும்!

ஆனால் கூட்டணிக்கும் சரி, சந்திரிகாவுக்கும் சரி அல்லது சந்திரிகா அரசாங்கம் பிடித்துத் தந்தபின் போயிருந்து ஆட்சி நடாத்த துடித்துக் கொண்டிருக்கும் பிற தமிழ் கட்சிகளுக்கும் சரி விளங்காத விடயம் ஒன்று உண்டு.

யுத்தம் தொடரும் ஒவ்வொரு நிமிடமும் சமாதானத்துக்கான வாய்ப்புகள் பின்னோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன என்பது தான் அது.

அடிமை வாழ்வுக்கு தயாராகிவிட்டவர்களுக்கு, சமாதானம் என்பது சமத்துவத்தின் மீது வருவதல்ல; திரி அடிக்காமல் விட்டாலே வந்துவிடும்.

புலிகளுடன் பேசுவது இருக்கட்டும்; தமிழ் மக்களுக்கு அரசு கூறும் பதில் என்ன என்பதை இவர்களால் சொல்ல முடியுமா?

புலிகள் பேச வராதவரை மக்களை கொல்வதும் அகதி முகாம்களை உருவாக்குவதும் தான் அரசின் கோட்பாடு என்றால், அதற்கும் வால்பிடிப்பதுதான் இவர்களது திட்டமா?

மற்றவர்களை விமர்சிக்க முதல் தங்கள் வயிற்றுப்பிழைப்பு அரசியலை கொஞ்சம் விமர்சித்தால் பல நியாயங்கள் அவர்களுக்கு விளங்கும்!

## அரிசி மூட்டையை தணிக்கை செய்யும் ஓட்டமாவடி ப.நோ.கூட்டுறவுச் சங்கம்!

இலங்கையில் இருக்கின்ற கூட்டுறவுச் சங்கங்களில் ஓட்டமாவடி ப.நோ.கூ. சங்கம் மிகவும் சாதனை படைத்துள்ளது. 4 தசாப்தங்களை ஆயுளாகக் கொண்டாலும் இரண்டு பழைய இசுசு லொறிகளுடன் ஒரு நூதனசாலை ஒன்றையும் ஆரம்பம் செய்யவுள்ளது. புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் பணிப்பாளர் சபையை விரட்டியடிப்பதற்கு எவ்வளவோ பிரயத்தனங்களை மேற்கொண்டும் வெற்றியளிக்கவில்லை. ஏனெனில் சுமார் 15 வருடகாலமாக இருந்து வரும் யானை சார்பான பணிப்பாளர் சபை தில்லு முல்லு வேலைகளில் திறமையாக உள்ளூர், வெளியூர் பயிற்சி நெறிகளை முடித்துள்ளதால் குறிப்பாக பணிப்பாளர் சபைக்கு சவுக்கடி கொடுக்க முனையும் முஸலிம காங்கிரஸின் ஓட்டமாவடி பிரதேச முன்னணி உறுப்பினர்களுக்கு சற்று தடங்கலான விடயமாக இருக்கின்றது. இருந்தும் அவர்களால் முடியாத காரிமும் அதுவல்ல.

அண்மையில் ஒரு சுவாரஸ்யமான சம்பவம் இடம் பெற்றது. சுமார் 300 மூடை அரிசியினை கொள்வனவு செய்யுமாறு மட்டக்களப்பு மாவட்ட கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் ஓட்டமாவடி கூட்டுறவு சங்கத்தை வேண்டிக்கொண்டது. அரிசி கொள்வனவு செய்யப்படும் இடம் காத்தான்குடியில் உள்ள ஒரு அரிசி ஆலையாகும். ஒரு மூடைக்கு 2கிலோ வீதம் குறைத்து அனுப்புமாறும், ஒவ்வொரு மூடைக்குரிய இரண்டு கிலோ அரிசிக்குரிய பணத்தை இரகசியமாக தங்களுக்கு தருமாறு வேண்டிக்கொண்டனர் சங்கத்தின் அதியுயர் பீடத்தினர்

இரண்டு கிலோ தணிக்கை செய்யப்பட்ட சுமார் 300 மூடை அரிசி ஓட்டமாவடி கூட்டுறவு சங்கத்தை வந்தடைந்தது. அரிசியை விற்பனைக்காக பாரமெடுக்கச் சென்ற கிளை முகாமையாளர்கள் ஒவ்வொரு மூடையையும் நிறுத்த போது தலா இரண்டு கிலோ அரிசி குறைவடைந்தது. விடயம் அம்பலமானது. தற்போது தணிக்கை செய்யப்பட்ட அரிசி மூடைகள் களஞ்சிய சாலையில் உறங்குகின்றன. இது ஒரு சாதாரண தில்லு முல்லு மட்டுமே.

நௌ

## முழு நாடும் யுத்தத்திற்கு தயாராகிறது!

முழு நாட்டையுமே யுத்தத் தயாரிப்பிற்குத் தயார் நிலைக்கு (War Footing) உட்படுத்த ஜனாதிபதியின் வரவின் பின் அரசு உறுதியான முடிவொன்றை எடுக்குமென நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைக்கிறது.

நாட்டின் உள்ளே யுத்தத் தாயாரிப்பொன்றை ஏற்படுத்த வேண்டுமென்ற யோசனையை அமைச்சரவையில் முன்வைத்த போது, அதற்கு எவருமே எதிர்ப்பு தெரிவிக்கவில்லையென, யோசனைகளை முன்வைத்த அமைச்சர் சி.வி.குணரத்ன தெரிவித்தார்.

இதன் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான அறிக்கையொன்றை ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்கவிடம் முன்வைக்க அமைச்சரவைச் செயற்குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

குழுவிலுள்ள அமைச்சர்கள்- அனுருத் ரத்தவத்த, இந்திக்க குணவர்தன, எம்.எச்.எம். அஷ்ரஃப், மங்கள சமரவீர, லக்ஷ்மன் ஜயக்கொடி, சி.வி.குணரத்ன, தர்மசிறி சேனாநாயக்க.

இதனூடாக எதிர்பார்க்கப்படுவது மக்களை யுத்த களத்திற்கு அழைத்துச் சென்று போராட உத்தரவிடுவதன்று எனவும், இதன் பிரதான நோக்கம் வட பகுதியில் வீரத் துருப்பினர்கள் ஈடுபட்டுள்ள யுத்தம் தொடர்பாகப் பொதுமக்களை அறிவூட்டி அதற்கு அவர்களின் உள ரீதியானதும், உடல் ரீதியானதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வது எனவும் சி.வி.குணரத்ன கூறினார்.

வட பகுதியில் உக்கிரமான யுத்தமொன்றில் ஈடுபட்டுள்ள துருப்பினர் நாட்டைக் காப்பாற்ற முயற்சி எடுக்கும் போது, தென் பகுதியில் உள்ள மக்கள் பொறுப்புடன் செயற்படுவது மிக முக்கியமானதென்பதால் அதற்காக அவசியமான சூழலொன்றை இதனூடாக ஏற்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

தான் எதிர்க்கட்சியில் இருக்கையில் நாடு முழுவதிலும் யுத்தத்தயாரிப்பொன்றை ஏற்படுத்துமாறு அரசிடம் கோரியிருந்தாலும், அது நிறைவேற்றப்படவில்லையெனவும், அதற்குப் பதிலாக அவர்கள் ஆயுதங்களிலிருந்து ''கொமிஷன்'' பெற்றபடி, புலிகளிற்கு இராணுவ உபகரணங்களைக்கூட வழங்கியதாக சி.வி.குணரத்ன கூறினார்.

யுத்தத்திற்காக அனைவருமே ஏதாவது அன்பளிப்பைச் செய்யவேண்டுமென்பதுடன், நாடு பூராவிலுமே யுத்தத் தயாரிப்பொன்றைச் செயற்படுத்துவதனூடாகக் களியாட்டங்கள், விழாக்கள், கேளிக்கைகள், போன்றவற்றை நிறுத்தலாமெனவும் அவர் கூறினார்.

விழாக்கள் போன்றவற்றை நிறுத்துவதனால் அவற்றிற்குச் செலவாகும் பணத்தையும் யுத்தத்தில் ஈடுபடுத்தி விரைவாகவே அதில் வெற்றிபெற வைக்க வேண்டுமெனவும் தெரிவித்த சி.வி.குணரத்ன அறிக்கையினூடாக உருவாக்கப்படும் பணிப்புரைகள் எவையெனத் தற்போதே தெரிவிக்க முடியாதெனவும் தெரிவித்தார்.

## பாதுகாபபு பிஸ்ரல்கள்!

ஈ.பி.டி.பி. இயக்கத்தின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்பது பேரிற்கும் அவ்வாறு தனிப்பட்ட பாதுகாப்பிற்காக வழங்கப்பட வேண்டிய பிஸ்ரல்கள் இது வரை வழங்கப்படவில்லை.

இது தொடர்பாகப் பாதுகாப்பு அமைச்சு, பிஸ்ரல்கள் முடிவடைந்துள்ளதால், மீண்டும் இறக்குமதி செய்யப்பட்ட பின்பு வழங்கப்படுமெனத் தெரிவிக்கிறது.

லக்பிம - 19951029

## இது யாருடைய பணம்?

இந் நாட்டுப் பாதுகாப்புப்படைகளினதும், வைத்தியசாலைகளினதும் பயன்பாட்டிற்கெனக் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் ஒரு கோடி ரூபா பெறுமதியான துணி வகைகளை விற்பனை செய்ய முடியாததால் அவை கொழும்பு ஜாவத்தை வீதியில் அமைந்துள்ள சலுசல தலைமையகத்தில் குவிக்கப்பட்டுள்ளன.

இவற்றுள் 45,000 மீற்றர் துணி வைத்தியசாலைகளுக்காவும், மேலம், 10,000 மீற்றர் பாதுகாப்புப்படையினருககாகவும வரவழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பாதுகாப்புப் படையினருக்காகக் கொண்டு வரப்பட்டுள்ள துணி வகையின் தரம் மிகக் குறைவாக இருப்பதால் அதிகாரிகள் அவற்றை விலைக்கு வாங்க மறுத்துள்ளதுடன், தற்போது நடைமுறையிலுள்ள பாதுகாப்புச் சட்ட திட்டங்களின் கீழ் அவற்றை வெளியாருக்கு விற்பனை செய்யவும் இயலாதுள்ளது.

லக்பிம - 19951029

## இலங்கையில்...

இதுதான். அரச சார்பற்ற வானொலியில் புலிகள் ஒரு சந்தர்ப்பத்தில் பயங்கரவாதிகள், இன்னொரு சந்தர்ப்பத்தில் இனவாதிகள், பிற சந்தர்ப்பத்தில் ஆயுத இளைஞர்கள். சிங்கள தொடர்பூடகம் இவ்வாறு எனின் தமிழ் தொடர்பூடகங்கள் பற்றிக் கூறத்தேவை இல்லை.

பாலம் பத்தியை வாசிக்கும் வெளிநாட்டுத் தமிழர்களும் உள்ளனர். அவர்கள் இலங்கையுடன் நேரடி தொடர்பின்றி வாழ்பவர்களாதலால் பாலம் அவர்களுக்கு எவ்வாறுள்ளதோ தெரியாது? பல வெளிநாட்டு வாசகர்கள் இலங்கையைப் போன்ற ஜனநாயக சூழ்நிலையில் வாழ்பவர்கள் ஆதலால், ''வசதிபடைத்த ஜனநாயகத்தை'' தவிர்ந்த செயல்களில் ஈடுபட அவர்களால் முடியாது. ஆனால் ஜனநாயகத்தை இறைஞ்சும் அரசியல்வாதிகளின் நிலையைப் பாருங்கள்.

டக்ளஸ் தேவானந்தா என்ற ஈ.பி.டி.பி. தலைவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக விசாரணை நடாத்தச்சென்ற பொலிஸ் அதிகாரிகளை ஈ.பி.டி.பியினர் தடை செய்ய முயன்றுள்ளனர். தடைகளை ஏற்படுத்த வேண்டாம் என்று பொலிஸார் - தேவானந்தாவைக் கேட்டுக் கொண்டனர். டக்ளஸின் பாதுகாவலர்கள் பொலிஸாரை தவிர்க்க முற்பட்டுள்ளனர். ஆனால் டக்ளஸ், புலிகள் பாஸிஸவாதிகள் என்று கூறியுள்ளார். அவர்களை பாஸிஸவாதிகள் என்று கூறிக்கொண்டு தன்னுடைய பாஸிஸவாதத்தையும், பாதுகாவலர்களின் சண்டித்தனத்தையும் தெரியாதிருப்பது நகைப்புக்குரிய விடயமாகும்.

இலங்கையின் ஜனநாயகம் தொடர்பான நம்பிக்கைகள் வலுவிழந்து செல்கின்றன. எம்மை அறியாமலேயே நாம் பாஸிஸ வலயத்துக்குள் சென்று கொண்டிருக்கின்றோம். இதற்கு முன்னர் கூட நான் இப்படி எழுதியுள்ளேன். இலங்கையின் ஜனநாகயம், முட்டை அப்பத்தைப் போன்றது. தமக்குத் தேவையான நேரங்களில் அதை சமைத்துக் கொள்ளலாம். இதன்படி தேவையான நேரங்களில் ஜனநாயகத்தையும், பாஸிஸத்தையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

அதன்படி இலங்கையில் இருப்பது,

ஜனநாயகம் + பாஸிஸம் கூட்டமைப்பாகும்.

## கிழக்கில்...

சிங்களவர்களின் மேலாண்மையை ஏற்படுத்துவதற்காகவே என்பது மேலே காட்டப்பட்ட ஆதாரங்களின் மூலம் நன்கு வெளிபடையாகின்றது. கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை அம்பாறை (1961), சேருவிலை(1976) எனும் இரு தேர்தல் தொகுதிகள் சிங்களவர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டதாகிவிட்டது. இவ்விரு தொகுதிகளுமே கிழக்கு மாகாணத்தின் 3,839 சதுரமைல் பரப்பளவில் 1,548 சதுரமைல்களைக் கொண்ட பிரதேசங்களாகக் காணப்படுகின்றன. இன்று இப்பிரதேசங்கள் முழுமையாகவே சிங்களமயமாக்கப்பட்டுவிட்டது.

எனவே இந்த அபாயகரமான சூழ்நிலையினை நன்கு உணர்ந்து தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் அரசியல் தலைமைகள் வெறுமனே ஆசனங்களை மட்டும் நேசிக்காது, பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் தொடர்ந்தும் தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களில் இடம் பெறுவதை தடுத்து நிறுத்த முன் வர வேண்டும். இல்லையேல் தமிழ்பேசும் மக்கள் இந்த நாட்டில் எதுவுமே அற்ற இனக்குழுக்களாக மாற்றப்பட்டு, எதிர்காலத்தில் நாடற்றோர் பட்டியலில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதே இங்கு இறுதியாக எம்மால் கூறி வைக்கக் கூடிய கருத்தாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர்- சேரன். எல்லாத் தொடர்புகளும்: இல.4, ஜெயரட்ண மாவத்தை, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05. 593615